REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 செப்டெம்பர் 15 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 88 இல. 219 | September 15, Tuesday, 2020 | 20 பக்கங்கள் | 30/-

மிகச்சிறந்த e-Learning பக்கேஜ்கள் மொபிடெல் இடமிருந்து
25GB பக்கேஜ் ரூபா. 150/- + வரிகள்
செயற்படுத்துவதற்கு இன்றே அழையுங்கள் #170#
அதிவேக INTERNET 4G LTE
விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
Sri Lanka Telecom Mobitel

# அரசின் எதிர்கால பயணத்திற்கு உதவுமாறு 'வியத்மக' அமைப்பிடம் ஜனாதிபதி வேண்டுகோள்



அரசாங்கத்தின் எதிர்கால பயணத்திற்கு உதவுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 'வியத்மக" அமைப்பிடம் வேண்டுகோள் விடுத்தார்.

"வியத்மக" பல்வேறு துறைகளை உள்ளடக்கிய கல்விமான்கள், புத்திஜீவிகள் மற்றும் தொழில் முயற்சியாளர்களைக் கொண்ட அமைப்பாகும். 2016ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்ட "வியத்மக" செயற்பாடுகள் மக்களின் அரசியல், சமூக சிந்தனையில் ஆழமானதொரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அரசியல் அதிகாரம் தலையிட வேண்டிய இடங்களை இனங்கண்டு அதில் சம்பந்தப்படாது நாட்டின் எதிர்கால பயணத்திற்காக திட்டங்களையும் கொள்கைகளையும் தயாரிக்கும் பொறுப்பு வியத்மகவிற்கு முன்னால் உள்ளதென ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி பதவிக்கு தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் "வியத்மக" அமைப்பின் தலைவராக நேற்று முன்தினம் (13) பிற்பகல் எத்துல் கோட்டையில் உள்ள "வியத்மக" அலுவலகத்தில் முதன்முறையாக அதன் உறுப்பினர்களை சந்தித்த போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

கிராமங்கள் மற்றும் நகரங்கள் உள்ளடங்கலாக அனைத்து மக்களையும் பொருளாதார மற்றும் சமூக ரீதியாக கட்டியெழுப்புவதற்கு முன்னுரிமையை வழங்கி, இராஜாங்க அமைச்சுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் நோக்கங்களை வெற்றிகொள்வதற்கு பங்களிக்கக்கூடிய வழிவகைகள் குறித்தும் ஜனாதிபதி

06

## உணவு உற்பத்தி விவசாயப் புரட்சி
# வடக்கில் இன்று ஆரம்பம்
### விவசாய அமைப்புகளுடன் அமைச்சர் சந்திப்பு



**ஷம்ஸ் பாஹிம்**

உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து அவற்றில் தன்னிறைவு காணும் விவசாய புரட்சியொன்றை வடக்கில் இருந்து ஆரம்பிக்க இருப்பதாக விவசாய அமைச்சர்

06

## மேல் நீதிமன்ற நீதிபதிகளாக 12 பேர் புதிதாக நியமனம்

மேல் நீதிமன்ற நீதிபதிகளாக புதிதாக நியமிக்கப்பட்ட 12 பேருக்கான நியமனக் கடிதங்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் வழங்கி வைக்கப்பட்டது. மாவட்ட நீதிபதி டப்ளியு ஏ.பெரேரா, மாவட்ட நீதிபதி சீ.மீகொட, மாவட்ட நீதிபதி செல்வி ஏ.ஐ.கே. ரணவீர , தலைமை நீதவான் நீதிமன்ற நீதிபதி செல்வி.கே.எஸ்.எல்.ஜயரத்ன , நீதவான் நீதிமன்ற நீதிபதி ஆர்.எஸ்.ஏ. திசாநாயக்க, மாவட்ட நீதிபதி டப்ளியு. எம்.எம்.தல்கொடபிடிய, மாவட்ட நீதிபதி செல்வி டி.டப்ளியு. எம்.ஆர். சி.பி.குமாரி தேல, மாவட்ட நீதிபதி எச்.எஸ்.பொன்னம்பெரும,

06

## சி.விக்கு எதிரான வழக்கை வாபஸ் பெற டெனீஸ்வரன் தீர்மானம்

**கிளிநொச்சி குறூப் நிருபர்**



வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு எதிராக என்னால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை இனத்தின் நலன் கருதி வாபஸ்பெறவுள்ளேன் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வழக்கை வாபஸ் பெறுமாறு பல தரப்பினர்களும் கோரிவருகின்றமை தொடர்பில் நேற்று அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

ஊழல் குற்றச்சாட்டுகள் முன் வைத்து வடக்கு மாகாண சபையின் அமைச்சர்களை முதலமைச்சராக இருந்த போது சி.வி. விக்னேஸ்வரன் பதவி விலக்கிய போது எவ்வித

06

## ஐ.தே.க பிரதித் தலைவராக ருவன் விஜேவர்தன தெரிவு



03

### 20ஆவது திருத்தத்திற்கு அமைய
# நாட்டிற்கு முழுமையான புதிய அரசியலமைப்பு
## ஜனாதிபதிக்கு கூடுதல் அதிகாரமென தவறான பிரசாரம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்திற்கமைய நாட்டிற்கு முழுமையான புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்க வேண்டியது அவசியமென கல்வியமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். விடயங்களை ஆழமாக ஆராய்ந்து அரசியலமைப்பை தயாரிக்க வேண்டியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ள அமைச்சர்,

மக்கள் ஆணையால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜனாதிபதி மக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அரசியலமைப்பின் 20வது திருத்தம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 20வது திருத்தம் மூலம் ஜனாதிபதிக்கு

06

## கொரோனா தொற்றினால் 13 ஆவது நபர் உயிரிழப்பு
### பஹ்ரைனிலிருந்து வந்தவரென அறிவிப்பு

இலங்கையில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பஹ்ரைனில் இருந்து செப்டம்பர் 2 ஆம் திகதி நாடு திரும்பிய குறித்த நபர் சிலாபம், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

நுகேகொட பிரதேசத்தை சேர்ந்த 60 வயதுடைய ஆண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்த இந் நபர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளதாக

06

### 'மஹிந்த மாமா எங்களுக்கு வீடு கட்டி தரமாட்டிங்களா?'
## சிறுவனின் கோரிக்கைக்கு பிரதமர் உடனடி தீர்வு

யாழ்ப்பாணம் பொம்மைவெளி பகுதியில் வீடமைப்பு திட்டத்தை பெற்றுத் தருமாறு வலியுறுத்தி நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் குறித்து ஆராய்வதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்துள்ளார். வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்தவை குறித்த பகுதிக்கு சென்று, விடயங்களை ஆராயுமாறு பிரதமர் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளார். பொம்மைவெளி பகுதியில் வெள்ளப் பெருக்கு அபாயம் தொடர்ச்சியாக காணப்படுவதாகவும்,

06



## பட்டதாரிகளுக்கான தலைமைத்துவ பயிற்சி திட்டம் நேற்று முதல் ஆரம்பம்

'ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு' கொள்கை பிரகடனத்திற்கு அமைய அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட 50,000 பட்டதாரிகளுக்கான பயிற்சித் திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக பாதுகாப்புப் பிரதானியும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவின் வழிகாட்டுதலில் நாடு முழுவதுமுள்ள பாதுகாப்புப் படை தலைமையகங்கள், படையணி தலைமையகங்கள் மற்றும் இராணுவ பயிற்சிப் பாடசாலைகள் என 51 இராணுவ நிலையங்களில் இந்தப் பயிற்சிகள் கட்டம் கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஐந்து கட்டங்களின் கீழ் செயற்படுத்தப்படும் இத்திட்டம் ஒரு மாத கால வதிவிட பயிற்சி திட்டமாக முன்னெடுக்கப்படுகிறது.

ஒவ்வொரு கட்டத்திற்கும் 10,000 பட்டதாரிகள் வீதம்

06



தலைவர், என்ன சோகமா இருக்கிறார் பதவிக்கு ஏதும் ஆபத்தோ......?
அது ஒன்றுமில்லை கிழக்கில தேர்தலில தோற்ற மூன்று பேர் தங்களை பொதுச் செயலாளராக நியமிக்க சொல்லி ஒரே கரைச்சலாம்....

### அரசியலமைப்பு குழுவில் மலையக பிரதிநிதி;
## எமது கோரிக்கை தொடர்பில் அரசு, இ.தொ.கா பதிலளிக்க வேண்டும்



அரசியலமைப்பு குழுவில் மலையக பிரதிநிதி இடம்பெறுவது தொடர்பிலும், நஷ்டமடையும் தோட்டங்கள், சிறு தோட்டங்களாக மறுசீரமைப்பு செய்யப்படுவது தொடர்பான எமது கோரிக்கைகளுக்கு அரசாங்கமும், அரசில் அங்கம் வகிக்கும் இ.தொ.காவும் பதில் கூற வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி தெரிவித்துள்ளார்.

இது பற்றி மனோ எம்.பி மேலும் கூறியுள்ளதாவது,

தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் என்ற வகையில், மலையக தமிழ் மக்கள் தொடர்பில், கடந்த இரு வாரங்களுக்குள் இரண்டு முக்கிய

06

## பூஸா கைதிகளின் உண்ணாவிரத போராட்டம் கைவிடப்பட்டது

பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாரிய குற்றச் செயல்களில் ஈடுபட்ட கைதிகள் 45 பேர் தொடர்ந்த உண்ணாவிரத போராட்டம் நேற்று கைவிடப்பட்டுள்ளதாக சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்தது.

பாரிய குற்றச் செயல்களில் ஈடுபட்ட குற்றவாளிகளான பொடி லெசி, வெலே சுதா மற்றும்

06

## தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க பொதுச் செயலாளர் நானே



இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் உத்தியோகபூர்வ பொதுச் செயலாளர் நான் தான் என்பதில் ஏதேனும் தெளிவின்மை இருப்பின் பிரதி தொழில் ஆணையகத்தின் தகவலறியும் சட்டத்தின் மூலம் அதனை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என வடிவேல் சுரேஷ் எம்.பி தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாத காலமாக இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைமைப் பீட பதவிகள் தொடர்பான மக்கள் மத்தியில் நிலவி வரும் குழப்பத்தை தெளிவுபடுத்தும் வகையில் நேற்று பதுளையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலே கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

06

இலங்கையில் அதிக நன்மைகளைக் கொண்ட Couple பிளான்
Couple BLASTER
ஒருவர் செயற்படுத்திக்கொண்டால் அவருக்கும், உங்களுக்கும்
UNLIMITED CALLS மற்றும் SMS
மாதம் முழுவதும் ரூ.123
வரி உள்ளடங்களாக
முற்கொடுப்பனவு இணைப்பினை செயற்படுத்த ரூ.123 ஐ ரீலோட் செய்யுங்கள்.
பிற்கொடுப்பனவு இணைப்பிற்காக #171# ஐ டயல் செய்யுங்கள்.
அவரது இலக்கத்தைப் பதிவு செய்திட #171# ஐ டயல் செய்யுங்கள்.
TRC/D/PRO/20/08 • நிபந்தனைகளுக்கு உட்பட்டது
Dialog
எதிர்காலம் இன்றே.





# ஜப்பான் ஆளும் கட்சி தலைவராக சுகா தேர்வு



சின்சோ அபேவின் இடத்திற்கு ஜப்பானின் ஆளும் கட்சியின் புதிய தலைவராக யொசிஹிடே சுகா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இதன் மூலம் அவர் அந்நாட்டின் அடுத்த பிரதமராகவுள்ளார்.

உடல் நிலையைக் காரணம் காட்டி ஜப்பான் பிரதமர் அபே கடந்த மாதம் தனது இராஜினாமாவை அறிவித்தார்.

71 வயதான சுகா தற்போதைய நிர்வாகத்தில் அமைச்சரவை தலைமை செயலாளராக பணியாற்றுவதோடு அவர் அடுத்த பிரதமராவது பரவலாக எதிர்பார்க்கப்பட்டு வந்தது.

அபேவின் நெருங்கிய கூட்டாளியான அவர் அரசில் தொடர்ந்து அபேவின் கொள்கையை பின்பற்றுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பழைமைவாத மிதவாத ஜனநாயகக் கட்சி தலைமை பதவிக்கு நேற்று இடம்பெற்ற வாக்கெடுப்பில் சுகா, பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிராந்தி பிரதிநிதிகள் அளித்த 534 வாக்குகளில் 377 வாக்குகளை பெற்றார்.

இதன்போது முன்னாள் வெளியுறவு அமைச்சர் புமியோ கிசிடா மற்றும் முன்னாள் கட்சி பொதுச் செயலாளர் மற்றும் பாதுகாப்பு அமைச்சராக இருந்த சிகோரு இசிபா ஆகியோருடன் போட்டியிட்டே வெற்றியீட்டினார்.

ஆளும் கட்சி தனது புதிய தலைவரை தேர்வு செய்திருக்கும் நிலையில் புதிய பிரதமரை தேர்வு செய்வதற்கு வரும் புதன்கிழமை பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது. பாராளுமன்றத்தில் ஆளும் கட்சி பெரும்பான்மையை பெற்றிருக்கும் நிலையில் யொசிஹிடே சுகா புதிய பிரதமராக தேர்வு செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பதவிக் காலத்தில் நடுவே பிரதமர் பதவியை ஏற்கவிருக்கும் சுகா வரும் 2021 செப்டெம்பர் மாதம் வரை அந்தப் பதவியில் நீடிக்கவுள்ளார்.

# டிக் டொக்கை மைரோசொப்ட் நிறுவனத்திற்கு விற்க மறுப்பு

மைக்ரோசொப்ட் நிறுவனம், டிக்டொக் செயலியை வாங்க முன்வைத்த கோரிக்கையை பைடான்ஸ் நிறுவனம் நிராகரித்துள்ளது. அதற்குப் பதில் ஒராகில் நிறுவனத்துடன் கைகோர்க்க அது திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான இராஜதந்திர பூசல் டிக்டொக் செயலியை மையப்படுத்தி மேலும் தொடர்கிறது. அமெரிக்க நிறுவனங்கள் அந்த செயலியின் உரிமை நிறுவனமான பைடான்ஸ் உடன் தொடர்பைத் துண்டிக்க வேண்டும் என்று ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் உத்தரவிட்டார்.

அதனால், தன் செயலியை அமெரிக்க நிறுவனங்களிடம் விற்கவேண்டிய நிர்ப்பந்தம் பைடான்ஸுக்கு ஏற்பட்டுள்ளது.

மைக்ரோசொப்ட், ஒராகில் இரண்டும் அதை வாங்க முயற்சி செய்தன.

தான் வாங்கியிருந்தால் அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்புக்குப் பங்கம் நேராமல், பயனீட்டாளர்களுக்கு உதவும் வகையில் செயலியில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்திருக்கலாம் என்று மைக்ரோசொப்ட் குறிப்பிட்டது.




ஒராகில் உடன் கூட்டுசேர்ந்துள்ள பைடான்ஸ், அமெரிக்கத் தடையை எதிர்நோக்காமலும், அதேநேரத்தில் சீன அரசாங்கத்தை அமைதிப்படுத்தவும் அந்த முடிவு உதவும் என்று பைடான்ஸ் நம்புகிறது.

இதற்கிடையில் அமெரிக்க அரசாங்கத்திற்கு எதிராக டிக்டொக் வழக்குத் தொடுத்துள்ளது. ஜனாதிபதி டிரம்ப்பின் நிர்வாக ஆணை சர்வதேச நெருக்கடிநேரப் பொருளாதார அதிகாரச் சட்டத்துக்குப் புறம்பானது என்று அது குறிப்பிட்டது.

சீன அரசாங்கத்துக்குத் தகவல் பகிர்வதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை அது தொடர்ந்து மறுத்து வருகிறது.

சுமார் 175 மில்லியன் முறை அமெரிக்காவில் பதிவிறக்கம் செய்யப்பட்ட அந்தச் செயலி உலகம் முழுவதும் பல பில்லியன் மக்களால் பயன்படுத்தப்படுகிறது.

# உலகில் கொரோனா தொற்று ஒரே நாளில் சாதனை உச்சம்

கடந்த 24 மணி நேரத்தில் உலகெங்கும் இதுவரை இல்லாத அளவுக்கு 307,930 புதிய கொரோனா வைரஸ் தொற்று சம்பவங்கள் சாதனை அளவுக்கு அதிகரித்திருப்பதாக உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

மேலும் 5,500 க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்திருக்கும் நிலையில் மொத்த உயிரிழப்பு எண்ணிக்கையும் 917,417 ஆக அதிகரித்துள்ளதாக அது குறிப்பிட்டுள்ளது.

இதில் இந்தியா, அமெரிக்கா மற்றும் பிரேசில் நாடுகளிலேயே நோய்த் தொற்றில் மிகப் பெரிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இதன்படி உலகில் 28 மில்லியனுக்கும் அதிகமான நோய்த் தொற்று சம்பவங்கள் பதிவாகி இருப்பதோடு அதில் பாதிக்கும் அதிகமானவை அமெரிக்காஸ் பிராந்தியத்திலேயே உள்ளது.

இதற்கு முன்னர் கடந்த செப்டெம்பர் 6 ஆம் திகதி 306,857 கொவிட்–19 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதே ஒரு நாளில் அதிகமாக இருந்தது.

உலக சுகாதார அமைப்பின் அறிக்கையின்படி கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் 94,372 புதிய நோய்த் தொற்று சம்பவங்களும் அதனைத் தொடர்ந்து அமெரிக்காவில் 45,523 மற்றும் பிரேசிலில் 43,718 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொரோனா தொற்றினால் கடந்த 24 மணி நேரத்திற்குள் அமெரிக்கா மற்றும் இந்தியாவில் 1000க்கும் அதிகமானோர் உயிரிழந்திருப்பதோடு பிரேசிலில் 874 பேர் பலியாகியுள்ளனர். இந்தியா உலகில் அதிக தொற்றாளர்கள் உள்ள நாடாக அமெரிக்காவுக்கு அடுத்து இரண்டாவது இடத்திற்கு உயர்ந்துள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதத்தில் மாத்திரம் இந்தியாவில் இரண்டு மில்லியன் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதாக கடந்த வாரம் அறிவிக்கப்பட்டது.

இது இந்த தொற்று ஆரம்பித்தது தொடக்கம் ஒரு மாதத்தில் உலகில் பதிவான அதிக எண்ணிக்கையாக உள்ளது.



# இஸ்ரேலில் 2ஆவது முறை கொரோனா முடக்க நிலை



கொரோனா வைரஸ் தொற்று வேகமாக பரவ ஆரம்பித்ததை அடுத்து இஸ்ரேலில் மீண்டும் பொது முடக்க நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடக்கம் மூன்று வாரங்களுக்கு இந்த இரண்டாவது முடக்க நிலை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்தக் கட்டுப்பாட்டினால் பெரும் விலைகொடுக்க வேண்டி இருக்கும் என்று பிரதமர் பென்ஜமின் நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார்.

எனினும் நாடு தினந்தோறும் சுமார் 4,000 புதிய நோய்த் தொற்று சம்பவங்களுக்கு முகம்கொடுத்திருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

முக்கியமான யூத விழாக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் பிரதமரை பதவி விலகக் கோரி ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையிலேயே இந்த முடக்க நிலை அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யோம் கிப்பூர் உட்பட பல விழாக்களை யூத மக்கள் கொண்டாடுவதை தடுப்பதாக இந்த முடக்கலை உள்ளது என்று வீடமைப்பு அமைச்சர் யாகொவ் லிட்ஸ்மான் குறிப்பிட்டுள்ளார். அவரது தீவிர பழமைவாத யூதக் கட்சி ஆளும் கூட்டணி அரசில் இருந்து விலகுவதாகவும் எச்சரித்துள்ளார்.

இஸ்ரேலில் 153,000க்கும் அதிகமான கொரோனா வைரஸ் தொற்று சம்பவங்கள் பதிவாகி இருப்பதோடு 1,108 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஒன்பது மில்லியன் மக்கள் தொகையை கொண்ட இஸ்ரேலில் தினந்தோறும் 3,000க்கும் அதிகமான புதிய தொற்று சம்பவங்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றன.

# தடம் மாறி அவுஸ்திரேலிய நதிக்குள் வந்த திமிங்கிலம்

அண்டார்டிகாவில் காணப்படும் ஹம்பேக் திமிங்கிலங்கள் தடம் மாறி அவுஸ்திரேலியாவின் நதியை அடைந்துள்ளன. இந்த வாரம் 3 ஹம்பேக் திமிங்கிலங்கள் வட அவுஸ்திரேலியாவில் உள்ள நதியில் காணப்பட்டதாக அந்நாட்டு அதிகாரிகள் கூறினர்.

அந்த நதியில் முதலைகள் அதிகமாக உள்ளன. 2 திமிங்கிலங்கள் பாதுகாப்பாகக் கடலுக்குச் சென்றுவிட்டன என்றும் எஞ்சிய ஒன்று இருக்குமிடம் விசாரிக்கப்படுகிறது என்றும் அதிகாரிகள் கூறினர்.



திமிங்கிலம் காணப்பட்ட பகுதியில் படகு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலியாவில் ஹம்பேக் திமிங்கிலங்கள் காணப்படுவது இதுவே முதல்முறையாகும். சுமார் 52 அடி நீளம் கொண்டது என்று கணிக்கப்படும் இந்த திமிங்கிலத்தை முதலைகள் தொந்தரவு செய்வது சாத்தியமில்லை என்றபோதும் அது பற்றி கூடுதல் அவதானம் செலுத்தப்படுகிறது.

எனினும் ஆழமற்ற நீரில் திமிங்கிலம் சிக்கிக்கொண்டால் ஆபத்து இருப்பதாக அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

# அமெரிக்கா மீது சீனா கண்டனம்

சீனா அதன் அணுவாயுத, ஏவுகணைத் திறனை மேம்படுத்துவதாகக் குறைகூறும் அமெரிக்க அறிக்கைக்கு சீனா கண்டனம் தெரிவித்துள்ளது.

சீனாவின் தேசியப் பாதுகாப்பு, இராணுவத்தை நவீனமயமாக்குதல் ஆகியவை குறித்து அமெரிக்கா மீண்டும் அவதூறு பேசுவதாக சீன பாதுகாப்பு அமைச்சு சாடியது.

அமெரிக்க பாதுகாப்பு திணைக்கள அறிக்கையில், சீனா அதன் நில, ஆகாய, கடற்படைகள் அனைத்தையும் வலுப்படுத்துவதாக குறிப்பிட்டிருந்தது.

தாய்வானைக் கைப்பற்றவோ, அதனுடன் போரிடவோ அவை பயன்படுத்தப்படலாமென அமெரிக்கா குற்றஞ்சாட்டியிருந்தது.

ஆனால் அந்த வட்டாரத்தில் தைவானிய அரசாங்கமும் வெளிநாட்டுச் சக்திகளும் பிரச்சினை உண்டாக்குவதாக சீன பாதுகாப்பு அமைச்சு குறைகூறியுள்ளது.

அமெரிக்கா வட்டாரப் பூசல்களைத் தூண்டிவிடுவதாகக் கூறிய சீனா, மத்திய கிழக்கு வட்டாரத்தில் அமெரிக்கா தலையீட்டை அதற்கு ஆதாரங்காட்டியது.



# அமெரிக்காவில் காட்டுத் தீயால் 1.6 மில். ஹெக்டர் நிலம் சேதம்

அமெரிக்காவின் ஒரேகன், கலிபோர்னியா, வொஷிங்டன் ஆகிய மாநிலங்களில் கடுமையாக எரிந்துவரும் காட்டுத்தீயால் 1.6 மில்லியன் ஹெக்டர் (16,000 சதுர கிலோமீற்றர்) பரப்பளவு சேதமடைந்துள்ளது.

ஒகஸ்ட் மாதத் தொடக்கத்தில் மூண்ட தீயில் ஆயிரக்கணக்கான வீடுகள் கருகின. குறைந்தது 33 பேராவது தீக்குப் பலியானதாகத் தெரிவித்த அதிகாரிகள், உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சுகின்றனர். கிட்டத்தட்ட 17,000க்கும் அதிகமான தீயணைப்பாளர்கள் தீயைக் கட்டுக்குள் கொண்டுவர போராடிவருகின்றனர். காட்டுத்தீ காரணமாக அடர்ந்த புகையும் சாம்பலும் காற்றின் தரத்தைக் கடுமையாகப் பாதித்துள்ளது. இதற்கிடையே அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், கலிபோர்னியா மாநிலப் பாதிப்புகளை நேரில் சென்று பார்த்தார். பருவநிலை மாற்றம் குறித்து பேசிய அவர், காட்டுத்தீ நிலவரம் மோசமடைந்ததற்கு மாநில ஆளுநர்களும் காரணம் என்று குறிப்பிட்டார்.



# 15 ஆண்டுகள் ஆண் தொடர்பு இல்லாத பாம்பு முட்டையிட்டது

ஆண் மலைப்பாம்பு ஒன்றுடன் கடந்த 15 ஆண்டுகளாக எந்த தொடர்பும் இல்லாத 62 வயதான மலைப்பாம்பு ஒன்று அமெரிக்க மிருகக் காட்சி சாலையில் 7 முட்டைகளை இட்டுள்ளது.

எனினும் ஆண் மலைப் பாம்புகள் இல்லாதபோதும் குறித்த இன மலைப் பாம்புகள் இனப்பெருக்கம் செய்யும் என்று கூறப்படுகிறது. பொதுவாக மலைப் பாம்புகள் 30 முதல் 40 ஆண்டுகள் வரை மட்டுமே வாழக் கூடியவை. ஆனால், இந்த பாம்பு எதிர்பார்க்கப்பட்டதைவிட கூடுதலாக 22 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வருகிறது. இதன்மூலம் அதிக காலம் உயிர் வாழும் மலைப் பாம்பாக இது பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு முன் இதே மிருகக்காட்சி சாலையில் மலைப்பாம்பு ஒன்று அதிகபட்சமாக 47 ஆண்டுகள் வாழ்ந்தது.



1961ஆம் ஆண்டு மிருகக்காட்சிசாலைக்கு கொண்டுவரப்பட்ட இந்த மலைப்பாம்புக்கு அப்போது வயது 3 என்று கூறப்பட்டது.

அதன் 7 முட்டைகளில் 2 மரபணு சோதனைக்காக வைக்கப்பட்டுள்ளன. மூன்று முட்டைகள் இன்குபேட்டரில் வைத்து அடைகாக்கப்பட்டுள்ளன. இரண்டு முட்டைகள் அழிந்துவிட்டதாகக் கூறப்பட்டது.

2020 செப்டெம்பர் 15 செவ்வாய்க்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்

15ம் திகதி முதல் 17ம் திகதி வரை
**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 04.45 |
| லுஹர் | 12.07 |
| அஸர் | 03.14 |
| மஃரிப் | 06.11 |
| இஷா | 07.21 |

**இன்றைய சுபதினம்**

சார்வரி வருடம் ஆவணி 30

ராகுகாலம் : பகல் : 10.22 – 11.52வரை
சுபநேரம் : காலை : 5.52 – 7.22வரை
யோகம்: மரணசித்த யோகம்
நட்சத்திரம்: மகம் ந. இரவு 3.42 வரை
திதி: சப்தமி

தினகரன் விளம்பரம் 0112429367 விற்பனை பிரிவு 0112429444, 0112429378 ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk




மேல் நீதிமன்ற நீதிபதிகள் 12 பேர் நேற்று நியமிக்கப்பட்டார்கள்.மாவட்ட நீதிபதிகளான டபிள்யு.ஏ. பெரேரா மற்றும் திருமதி ஏ.ஐ.கே.ரணவீர ஆகியோர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் மேல் நீதிமன்ற நீதிபதிகளாக பதவியேற்றபோது பிடிக்கப்பட்ட படங்கள்.

## 2019 க.பொ.த உயர்தர பரீட்சை வெட்டுப்புள்ளி ஒக்டோபரில்

2019 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சை பெறுபேறுகளுக்கான பல்கலைக்கழக வெட்டுப்புள்ளியை அடுத்த மாதம் முதல் வாரத்தில் வெளியிட எதிர்ப்பார்ப்பதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

கொரோனா தொற்று காரணமாக இம்முறை வெட்டுப்புள்ளியை வெளியிட தாமதமானதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். வெட்டுப்புள்ளியை தயாரிக்கும் நடவடிக்கை தற்போது நடைபெற்று வருகிறது.

உயர்தரப்பரீட்சை கடந்த ஆகஸ்ட்டில் நடைபெற்றது.பெறுபேறுகள் டிசம்பர் இறுதியில் வெளியானாலும் வெட்டுப்புள்ளி வெளியிடுவது தொடர்ந்து தாமதமாகி வருவது குறிப்பிடத்தக்கது.

30 ஆயிரம் மாணவர்கள் வரை பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படுவதோடு பாடசாலை மட்டத்தில் மாணவர்களை தெரிவு செய்யும் திட்டமொன்றை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டாலும் அது பிற்போடப்பட்டுள்ளதாக அறிய வருகிறது.

### நியூ டயமன் எண்ணெய்க் கப்பல்:

# எரிபொருள் வகைகளின் அனைத்து மாதிரிகளையும் பெற நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**




கிழக்கில் தீ அனர்த்தத்திற்கு உள்ளான நியூ டயமன் எண்ணெய்க் கப்பலிலுள்ள அனைத்து எரிபொருள் வகைகளிலும் மாதிரிகளை பெற்றுக் கொள்ளுமாறு நீதிமன்றம் விதித்த உத்தரவுக்கிணங்க நேற்றைய தினம் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்படி கப்பல் தற்போது கிழக்கில் சங்கமன்கண்டிக்கு கிழக்கு திசையில் 53 கடல் மைல் தூரத்தில் தரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி மாதிரிகளை பெற்றுக் கொள்வதற்காக விசேட குழுவொன்று நேற்று அங்கு சென்றதாக சமுத்திரவியல் சூழல் பாதுகாப்பு அதிகார சபை நேற்று தெரிவித்தது.

சுழியோடிகளின் உதவியுடன் தொடர்ந்தும் அந்தக் கப்பலை பரிசீலனை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகார சபை தெரிவித்தது

அதேவேளை சட்டமா அதிபரின் தலைமையில் நேற்றையதினம் மேற்படி கப்பலில் தீயை கட்டுப்படுத்துவதற்கு செயற்பட்ட அனைத்து நிறுவனங்களினதும் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை ஒன்று இடம் பெற்றுள்ளது.

06

# பஸ் முன்னுரிமைச் சட்டம் நேற்று முதல் ஆரம்பம்

### மீறுவோருக்கு எதிராக அபராதம்




படம்: கெலும் லியனகே

கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் நிலவும் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்த பஸ் முன்னுரிமைச் சட்டம் நேற்று முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

4 பிரதான வீதிகளை மையப்படுத்தி இந்த செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்பு பிரிவின் பணிப்பாளர் இந்திக ஹபுகொட தெரிவித்துள்ளார்.

வீதி ஒழுங்கு விதிகளை முறையாக கடைப்பிடிக்காத சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், வீதி ஒழுங்குச் சட்டம் காரணமாக கொழும்பை அண்மித்த பகுதிகளில் உள்ள பிரதான வீதிகள் சிலவற்றில் வாகன போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதாக அறிய வருகிறது.சில பாதைகளில் வழமையான வாகன நெரிசல் காணப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்ற சுற்றுவட்டம் மற்றும் டி.எஸ்.சேனநாயக்க சந்தி வரையில் வாகன போக்குவரத்து நெரிசல் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

06

### கொரோனா வைரஸ் தொற்று;

# குணமடைந்தோர் தொகை மூவாயிரத்தை தாண்டியது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்தோரின் எண்ணிக்கை மூவாயிரத்தை தாண்டியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் நேற்று வரை 3234 கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ள நிலையில் 3005 பேர் பூரணமாக குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

நேற்றைய தினம் 9 வைரஸ் தொற்று நோயாளர்கள் பூரண குணமடைந்துள்ள நிலையில் நேற்று முன்தினம் வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பிய 39 பேர் வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளமை இனம் காணப்பட்டுள்ளது.

அதற்கிணங்க கட்டாரிலிருந்து நாடு திரும்பிய 16 பேர், ஐக்கிய அரபு ராச்சியத்திலிருந்து நாடு திரும்பிய 12 பேர், குவைத்திலிருந்து நாடு திரும்பிய 06 பேர், மாலைதீவிலிருந்து நாடு திரும்பிய இரண்டு பேரும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை இனம்காணப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக எத்தியோபியாவிலிருந்து வருகை தந்த ஒருவர் மற்றும் தாய்லாந்திலிருந்து வருகை தந்த நபர் ஒருவருக்கும் வைரஸ் தொற்று இனங்காணப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்தது. அதேவேளை இதுவரை 3005 பேர் முழுமையாக குணமடைந்து வீடு திரும்பியுள்ள நிலையில் மேலும் 217 வைரஸ் தொற்று நோயாளிகள் பல்வேறு மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெற்று வருவதாகவும் அமைச்சு தெரிவித்தது. (ஸ)

# ஐ.தே.க பிரதித்தலைவராக ருவன் விஜேவர்தன தெரிவு

### ரகசிய வாக்கெடுப்பில் ரவி தோல்வி

ஐக்கிய தேசிய கட்சியின் பிரதி தலைவராக கட்சியின் பிரதி செயலாளர் ருவன் விஜேவர்தன தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று நடைபெற்ற கட்சி செயற்குழு கூட்டத்தின் போது இடம் பெற்ற இரகசிய வாக்கெடுப்பில் அவர் தெரிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவருடன் குறித்த பதவிக்காக கட்சியின் உப தலைவர் ரவி கருணாநாயக்க போட்டியிட்டிருந்தார்.

இதன்போது வாக்கெடுப்பில் ருவன் விஜேவர்தனவிற்கு 28 வாக்குகளுகம் ரவி கருணாநாயக்கவிற்கு 10 வாக்குகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கட்சித் தலைவர் தெரிவு நடைபெறுவதாக முன்னர் அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் சஜித் பிரேமதாஸ வகித்த பிரதித் தலைவர் பதவிக்கே ருவன் விஜேவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.(பா)

### உயிரைப் பணயம் வைத்து காப்பாற்றப்பட்ட

# நியூடயமன் கப்பல் பொறியியலாளரை சந்தித்த கடற்படை வீரர்கள்

இலங்கை கடற்பகுதியில் அண்மையில் தீப்பிடித்த நிவ் டயமன் கப்பலில் தீயினால் காயமுற்று நிர்க்கதி நிலையில் இருந்த அக்கப்பலின் மூன்றாவது பொறியியலாளரான பிலிப்பைன்ஸ் பிரஜை இலங்கை கடற்படை வீரர்களால் காப்பாற்றப்பட்டு கல்முனை தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

தற்போது சிகிச்சையின் பின்னர் ஓரளவு குணமாகியுள்ள கப்பல் என்ஜினியர் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் தங்கியுள்ளார்.

06

# யாழ். போதனா வைத்தியசாலை பிரச்சினைகளுக்கு தீர்வு

### வைத்தியர் பிரதிநிதிகளிடம் அமைச்சர் டக்ளஸ் உறுதி



யாழ். போதனா வைத்தியசாலையில் காணப்படும் ஆளணி மற்றும் பௌதீக வள பற்றாக்குறை தொடர்பில் சுகாதார அமைச்சரை சந்தித்து தீர்வுகளை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தலைமையிலான பிரதிநிதிகளிடம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் அலுவலகத்திற்கு நேற்று வருகை தந்திருந்த யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தி தலைமையிலான பிரதிநிதிகள் அமைச்சரை சந்தித்து வைத்தியசாலையின் குறைபாடுகள் தொடர்பில் தெரியப்படுத்தியிருந்தனர்.

குறிப்பாக யாழ். போதனா வைத்தியசாலை தற்போது பல வைத்திய சேவை பிரிவுகள் விரிவாக்கம் கண்டுவரும் நிலையில் அதற்கான வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் ஊழியர்களின் பற்றாக்குறை அதிகமாக உள்ளதை சுட்டிக்காட்டியதுடன் அதற்கான தீர்வு அவசியமானது என்றும் வலியுறுத்தியிருந்தனர்

வடபகுதியில் பாரியளவிலான சேவையை குறைந்தளவான வசதிகளுடனேயே முன்னெடுத்து வருகின்றது என சுட்டிக்காட்டியுள்ள வைத்தியர்கள், யாழ்ப்பாணத்தின் வைத்திய சேவையின் தனித்துவத்தை நிலைநாட்டுவதற்காக அதனை வளப்படுத்த வேண்டும்.

அதற்கான பிரிவுகளை யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளிலும் விரிவாக்கம் செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வசதி வாய்ப்புக்களை பெற்றுத் தர வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைத்தனர்.

## நாணயமாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை |
|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 |
| குவைத் டினார் | 603.09 |
| ஓமான் ரியால் | 483.42 |
| கட்டார் ரியால் | 50.73 |
| சவூதி ரியால் | 49.54 |
| ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

### 20ஆவது திருத்தம்;

## சட்ட மாஅதிபருக்கு எதிராக உச்ச நீதிமன்றில் முறைப்பாடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

20ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டமூலம் தயாரிப்பின் போது சட்ட மாஅதிபர் தப்புள டி லிவேரா தவறான சட்ட ஆலோசனைகளை வழங்கியுள்ள நிலையில் அதனால் சட்டத்துறையின் கீர்த்திக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாகவும் அதன் தாற்பரியம் மீறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து அது தொடர்பில் விசாரணை நடத்தி பொருத்தமான நடவடிக்கை எடுக்கவேண்டுமென சட்டத்தரணி அருண லக்சிறி உணவட்டுன உச்ச நீதிமன்றத்தில் நேற்று எழுத்து மூல முறைப்பாடொன்றை தாக்கல்

06

## நாடு முழுதும் சுற்றிவளைப்பு பல வகை துப்பாக்கிகள் மீட்பு

நாட்டின் பல்வேறு பகுதிகளில் பொலிஸ் விஷேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது பல்வேறு வகையான துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் கூறியது.

வலஸ்கல, தெமயபிட்டிய பகுதியில் இருந்து வெளிநாட்டு உற்பத்தியான ரிவோல்வர் ஒன்றும் , சொட்கன் ஒன்றும், ரைபிள் ஒன்று மற்றும் அதற்காக தோட்டாக்களுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொம்பே பகுதியில் மேற்கொள்ளப்பட்டசுற்றிவளைப்பின் போது வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட துப்பாக்கி ஒன்று மற்றும் 70 மில்லிமீற்றர்

06

### தொலைபேசி இணைப்பு வயர்கள் திருட்டு;

## சி.சி.ரி.வி ஆதாரத்துடன் சந்தேக நபர்கள் கைது

பியகம, மல்வான கராபுகஸ் சந்தியில் அரச தொலைபேசி நிறுவனம் ஒன்றிற்கு சொந்தமான தொலைபேசி இணைப்பு வயர்களை திருடிய 6 பேர் கைதாகி நேற்று மஹர நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஆகஸ்ட் 31 ஆம் திகதி அதிகாலை இப் பகுதியிலுள்ள நிலக்கீழ் தொலைபேசி இணைப்பு வயர்களே இவ்வாறு திருடப்பட்டுள்ளது. இந்த திருட்டுச் சம்பவம் அருகிலிருந்த சி.சி.ரி.வி கெமராக்களில் பதிவாகி இருந்ததுள்ளது.

சி.சி.ரி.வி ஆதரத்துடன் சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் கைது

06


தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சார்வரி வருடம் ஆனி மாதம் 01நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22

## குறள் தரும் சிந்தனை



மங்கலம் என்ப மனைமாட்சி மற்றது அதன்
நன்கலம் நன்மக்கட் பேறு

ஒருவனுக்குநற்குணநற்செயல்களைஉடையமனைவியே அழகு என்று அறிந்தோர் கூறுவர். அந்த அழகிற்கு ஏற்ற அணிகலன்கள்நல்ல பிள்ளைகளைப் பெறுவதே.

# வடக்கு மீன்பிடி தொழிலாளரின் நியாயமான போராட்டம்

வடபகுதி மீனவர்கள் வாயைத் துணியினால் மறைத்துக் கட்டியபடி மௌனமான முறையில் கவனயீர்ப்பு ஊர்வலமொன்றை நேற்று நடத்தியுள்ளனர். இந்திய மீனவர்களின் கடல் எல்லை தாண்டிய மீன்பிடித்தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே வடமராட்சி மீனவர்கள் இந்த மௌன ஊர்வலத்தை நடத்தி மகஜர்களையும் கையளித்து இருக்கின்றனர்.

வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தினர் ஏற்பாடு செய்த இந்த மௌன ஊர்வலம் நேற்று முற்பகல் நல்லூர் முன்றலில் ஆரம்பமானது. இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்ட கடற்றொழிலாளர்கள் ஊர்வலமாகச் சென்று யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதுவரிடம் மகஜரொன்றை கையளித்துள்ளனர். அதனைத் தொடர்ந்து கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சருக்கான மகஜரை அமைச்சரின் அலுவலகத்தில் கையளித்துள்ளனர். ஆளுநருக்கான மகஜர் அவரது அலுவலகத்தில் கையளிக்கப்பட்டது.

இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய அத்துமீறிய மீன்பிடித்தலால் தமக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளையும் தாம் எதிர்கொள்கின்ற அசௌகரியங்களையும் வடமராட்சி பிரதேச கடற்றொழிலாளர்கள் அந்த மகஜரில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேநேரம், இந்த மௌன ஊர்வலத்தில் கலந்து கொண்ட கடற்றொழிலாளர்கள் 'இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்காதே!', 'மீனவர்களின் கண்ணீர் துடைக்க இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து தீர்வைப் பெற்றுத் தாருங்கள்', 'சுருக்கு வலையைத் தடை செய்!', 'இழுவைப் படகுகளை கைப்பற்று' என்றபடியான வாசகங்களைத் தாங்கிய பதாகைகளையும் ஏந்திச் சென்றனர்.

இலங்கைக் கடற்பரப்பில் இந்தியக் கடற்றொழிலாளர்கள் எல்லை தாண்டிய மீன்பிடித்தலில் ஈடுபட்டு வருவதால் பல வருடங்களாக நீடித்து வரும் ஒரு விவகாரமே இதுவாகும். அவர்கள் எல்லை தாண்டி அத்துமீறி மீன்பிடித்தலில் ஈடுபட்டு வருவதால் வடபகுதி மீனவர்கள் இப்பிரச்சினைக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

அதிலும் கடந்த சில தினங்களாக இம்மீன்பிடித்தலில் அதிகளவிலான இந்திய மீனவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில்தான் வடமராட்சி கடற்றொழிலாளர்கள் இவ்வாறான மௌன ஊர்வலமொன்றை நடத்தி மகஜர்களை கையளித்து நியாயம் கோரும் நிலைக்கு தள்ளப்பட்டனர் என்று ஊர்வல ஏற்பாட்டாளர் ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

இந்நாட்டில் நிலவிய யுத்தம் காரணமாக வடபகுதி கடற்றொழிலாளர்கள் சுதந்திரமாக கடற்றொழிலில் ஈடுபட முடியாத நிலைமை அக்காலத்தில் ஏற்பட்டிருந்தது. அதனால் அவர்களது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டது. எனினும் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து வடபகுதி மீனவர்கள் கடற்றொழிலில் அச்சமின்றி ஈடுபட வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு இருக்கின்றது.

என்றாலும் இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடித்தல் நடவடிக்கை வடபகுதி கடற்றொழிலாளர்களுக்கு பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தியுள்ளதோடு மட்டுமல்லாமல், பிரச்சினைக்குரிய விடயமாகவும் விளங்கி வருகின்றது.

குறிப்பாக இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ள மீன்பிடி முறைகளை எல்லை தாண்டிய மீன்பிடித்தல் நடவடிக்கையின் போது இந்திய கடற்றொழிலாளர்கள் பெரிதும் பயன்படுத்துகின்றனர். அவற்றில் இழுவைப் படகு, சுருக்கு வலைகள் குறிப்பிடத்தக்கவை.

இதன் விளைவாக வடபகுதி கடலில் மீன்வளம் அழிவடைவதோடு முருகைக் கற்பாறைகளும் பெரிதும் சேதப்படுத்தப்படுகின்றன. அதனால் மீன்களின் இனவிருத்தி வடபகுதி கடலில் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றது.

அதேநேரம் இந்திய மீனவர்கள் தம் எல்லை தாண்டிய மீன்பிடித்தலின் போது வடபகுதி மீனவர்களின் இலட்சக்கணக்கான பெறுமதிமிக்க வலைகளை அறுத்து சேதப்படுத்தவும் செய்கின்றனர்.

இந்திய மீனவர்களின் இவ்வாறான செயற்பாடுகளின் விளைவாக கடல்வாழ் உயிரினங்களின் இருப்புக்கும் இனவிருத்திக்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அத்தோடு வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரமும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதோடு அவர்களது கடற்றொழில் உபகரணங்களும் சேதப்படுத்தப்பட்டு வருகின்றன.

அதனால் இலங்கைக்குச் சொந்தமான கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய அத்துமீறிய மீன்பிடித்தலையும் அவர்கள் பயன்படுத்தும் சட்டவிரோத மீன்பிடி முறைமைகளையும் கட்டுப்படுத்த வேண்டும் என்பதே வடபகுதி மீனவர்களின் கோரிக்கையாகவும் எதிர்பார்ப்பாகவும் உள்ளது. அது முற்றிலும் நியாபூர்வமான கோரிக்கையாகும்.

ஆகவே இக்கோரிக்கை மனிதாபிமானக் கண்ணோட்டத்தோடு அணுகப்பட வேண்டும். இவ்விவகாரத்திற்கு நியாயபூர்வமான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதிலும் கடல் வளங்களைப் பாதுகாப்பதிலும் சம்பந்தப்பட்ட தரப்பினர் விஷேட கவனம் செலுத்த வேண்டும். அது வடபகுதி கடல்வாழ் உயிரின வளத்தைப் பாதுகாப்பதற்கும் இலங்கை கடற்றொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் பாரிய நிவாரணமாகவும் அமையும்.


editor.tkn@lakehouse.lk

# கொவிட் 19 வைரஸ் சீன ஆய்வகத்தில் உருவாக்கப்பட்டதென்பதே உண்மை

கொரோனாவைரஸ்சீனாவின் வுகான் நகரில் உள்ள பரிசோதனை கூடத்தில் இருந்து தயாரிக்கப்பட்டது என அந்நாட்டு கிருமியியல் ஆய்வாளர் டொக்டர் லீ மெங்க் யான் பரபரப்பான தகவலை வீடியோ மூலம் தெரிவித்து ள்ளார். மேலும், இதற்கு தன்னிடம் ஆதாரம் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

சீனாவில் உள்ள மருத்துவத் துறை அதிகாரிகள் தன்னை மிரட்டியதால் தான் அமெரிக்காவில் தஞ்சமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கொரோனா வைரஸ் எப்படி பரவியது என்பது குறித்து தங்களுக்கு எதுவும் தெரியாது என சீனா கூறி வந்த நிலையில், இந்த தாகவும் வெளவாலிடம் இருந்து பரவியதாகவும் சிலர் கூறுகிறார்கள். இந்த நிலையில் இந்த வைரஸை சீனா வேண்டுமென்றே உருவாக்கியிருக்கலாம் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் குற்றம் சாட்டியிருந்தார்.

இந்த நிலையில், சீனாவில் உள்ள வுகான் பரிசோதனை கூடத்திலிருந்து கொவிட் 19 வைரஸ் விஞ்ஞானிகளால் தயாரிக்கப்பட்டதாகவும், அதற்கான ஆதாரம் தன்னிடம் இருப்பதாகவும் சீன வைரஸ் நிபுணர் லி மெங்க் யென் பரபரப்பு தகவலை தெரிவித்துள்ளார். ஹொங் கொங்கில் உள்ள பொது சுகாதாரத் துறையில் பணியாற்றி வந்தவர் லீ மெங்க் யென்.



## வுகானில் இருந்து அச்சத்தினால் வெளியேறிய கிருமியியல் ஆய்வாளர் பரபரப்பு தகவல்!

மருத்துவரின் புகார்கள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. கொரோனா வைரஸ் விடயத்தில் அமெரிக்கா சீனாவை குற்றம் சாட்டியது உண்மையோ என இப்போது ஊகங்கள் வெளியிடப்படுகின்றன.

கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவி சுமார் 10 மாதங்கள் ஆகிவிட்டது. இந்த நிலையில், இந்த வைரஸ் எப்படித் தோன்றியது என்பது குறித்து இன்னும் ஒரு முடிவு கிடைக்கவில்லை.

இந்த வைரஸ் சீனாவின் வுகானில் உள்ள 'வெட்' சந்தையில் இலிருந்து பரவியிருக்கலாம் என மருத்துவ நிபுணர்கள், விஞ்ஞானிகள், தொற்றுநோயியல் துறை நிபுணர்கள் ஊகிக்கிறார்கள். வுகானில் உள்ள மீனிலிருந்து பரவிய



இவர் வீடியோ மூலம் கூறுகையில் "இந்த வைரஸ் பரவலை வெளிப்படையாக சீனா ஒப்புக் கொள்வதற்கு முன்னரே, அதன் பரவல் அவர்களுக்குத் தெரியும். எனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக பாதுகாப்பு கருதி சீனாவிலிருந்து தற்போது அமெரிக்காவுக்கு சென்று விட்டேன். நான் ஹொங் கொங் சுகாதாரத் துறையில் பணியாற்றிய போது எனது உயரதிகாரி வுகானில் சார்ஸ் போன்ற வைரஸ் பரவுவது குறித்து என்னிடம் கூறினார்" எனக் குறிப்பிட்டார்.

"மேலும் அது குறித்து ஆய்வு செய்யுமாறு என்னிடம் அவர் கூறியிருந்தார். ஆனால் எனது முயற்சிகள் அனைத்து பின்னர் தடுக்கப்பட்டன. கொரோனா வைரஸ் பாதிப்புகள் அதிகரித்து வருவதாக தோன்றுவதாக நான் கூறிய நிலையில், 'அமைதியாக இருங்கள், கவனமாக இருக்க வேண்டும்' என அவர் என்னிடம் தெரிவித்தார்.

இது குறித்து நாம் வெளியில் கூறினால் நாம் பிரச்சினைகளில் சிக்கி விடுவோம் என்றும் காணாமல் போய் விடுவோம் என்றும் அவர் தெரிவித்தார். வுகான் பரிசோதனை கூடத்திலிருந்து அந்த வைரஸ் தயாரிக்கப்பட்டதற்கான ஆதாரம் என்னிடம் உள்ளது. அந்த வைரஸ் வெட் சந்தையில் உருவாகவில்லை. அந்த ஆதாரத்தை பார்த்தால் உயிரியல் அறிவு இல்லாதவர்கள் கூட அதை படித்து புரிந்து கொள்ளலாம்.

வுகான் கூடத்தில் ஏன் அந்த வைரஸ் தயாரிக்கப்பட்டது, அதை ஏன் அவர்களாகவே தயாரித்தார்கள் என்ற விபரங்கள் உள்ளன. சீன அதிகாரிகள் நான் நாட்டை விட்டு வெளியேறிய பின்பும் என்னை பற்றிய அனைத்து தகவல்களையும் அழித்து விட்டார்கள். என்னை பற்றி வதந்தியை மக்களுக்கு பரப்பி வருகிறார்கள்" என லீ பெங்க் யான் குற்றம்சாட்டியுள்ளார்.

# 3.5 கோடி பேருக்கு தொழில் எதுவும் இல்லை: மாதம் 20 இலட்சம் மக்கள் வேலை இழப்பு

இந்தியாவில் அதிகரித்து வரும் கொரோனா பரவல் மற்றும் மத்திய அரசு போதிய அளவுக்கு நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளாமல் இருப்பது போன்றவற்றால் ரூ.30 இலட்சம் கோடி மதிப்புக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியை இந்திய நாடு இழக்க நேரிடும். வேலையில்லாத் திண்டாட்டம் பெரும் தலைவலியாக மாறக் கூடும் என்று எச்சரிக்கின்றன புள்ளி விபரங்கள்.

கொரோனா பாதிப்பையடுத்து, பெரும்பாலான ஆய்வாளர்கள் கணித்ததை விடவும் இந்திய பொருளாதாரம் மந்த நிலையில் உள்ளது. எனவே தங்கள் மதிப்பீட்டை வல்லுநர்கள் மாற்றியமைத்து வருகின்றனர்.

## கொரோனாவுக்கு பின்னர் இந்தியாவின் நிலைமை



உதாரணமாக, இந்தியாவைச் சேர்ந்த பொருளாதார பகுப்பாய்வு நிறுவனமான கிரிசில் (Crisil) தனது மே மாத மதிப்பீட்டை மாற்றியுள்ளது. செப்டம்பர் மாத புதுப்பித்த பதிவில் பொருளாதார மந்த நிலை மேலும் மோசமாகியுள்ளதை சுட்டிக் காட்டியுள்ளது.

இதற்கு இரண்டு முக்கிய காரணங்களை அந்த அமைப்பு கூறுகிறது. "கொரோனா தொற்றுநோயின் உச்ச நிலை இன்னும் இந்தியாவில் எட்டப்படவில்லை. மற்றும் அரசு போதுமான நேரடி நிதி ஆதரவை வழங்கவில்லை. எனவே, இக்காரணங்களால் எங்களது முந்திய மதிப்பீட்டை மாற்றியுள்ளோம்" என்று தெரிவித்துள்ளது கிரிசில்.

லொக்டவுனையடுத்து அறிவிக்கப்பட்ட பொருளாதார பொதியைக் கணக்கிட்டால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜி.டி.பி) 1.2% க்கும் மேலாக அரசு செலவழிக்கும் என்று மே மாதத்தில் கிரிசில் எதிர்பார்த்தது. ஆனால் இது நடக்கவில்லை. இதன் விளைவாக, இந்தியா உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13% நிரந்தர இழப்பை சந்திக்கும் என்று கிரிசில் மதிப்பிட்டுள்ளது. இது ஆசிய பசிபிக் பிராந்தியத்திலுள்ள பிற நாடுகளின் 3%



என்ற, சராசரி ஜி.டி.பி இழப்பை விட மிக அதிகம். அதாவது இந்த நாடுகளின் சராசரி இழப்பை விட இந்தியாவில் 10 சதவீதம் கூடுதல் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

பண மதிப்பு அடிப்படையில் இந்த இழப்பு சுமார் 30 இலட்சம் கோடி ரூபாயாக இருக்கும். எளிமையாகச் சொன்னால் இந்த பொருளாதார சீர்குலைவு இந்தியாவிடமிருந்து ரூ.30 இலட்சம் கோடியை கொள்ளையடிக்கும் என்று சொல்லலாம். இது 2020 21ம் நிதியாண்டு பட்ஜெட் தொகைக்கு இணையானது.

ஆனால், ஆத்மனிர்பார் பாரத் அபியான் பேக்கேஜ் (தற்சார்பு இந்தியா) மூலம், பொருளாதாரத்தில் ரூ .3 இலட்சம் கோடிக்கும் குறைவாகவே அரசு பங்களித்துள்ளது.

இந்திய பொருளாதார கண்காணிப்பு மையத்தின் தலைமை நிர்வாக அதிகாரி மகேஷ் வியாஸ், ஆங்கில நாளிதழ் ஒன்றிடம் அளித்துள்ள பேட்டியில், இந்தியா எதிர்கொள்ளும் வேலை வாய்ப்பு சவால் எவ்வளவு கடுமையானது என்று விளக்கினார். இந்தியாவில் தற்போது 35 மில்லியனுக்கும் அதிகமான (3.5 கோடி) மக்கள் வேலையின்றி இருக்கிறார்கள். கொரோனா பரவியதற்கு பிறகு சுமார் 2.1 கோடி வேலைகள் இழக்கப்பட்டுள்ளன, இவை அவசரமாக மீட்கப்பட வாய்ப்பில்லை.

ஏற்கனவே 3.5 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு இல்லாத நிலையில், ஒவ்வொரு மாதமும், மேலும் 20 இலட்சம் உழைக்கும் வயது மக்களை (அதாவது 15 வயது முதல் 59 வயது வரையிலானவர்கள்) இந்த பட்டியலில் சேர்க்கப் போகிறது. ஒரு வருடத்தில் இந்தியா சுமார் 9.6 மில்லியன் (சுமார் 1 கோடி) புதிய வேலைகளை உருவாக்க வேண்டும்.

எனவே இந்த நிதியாண்டின் முடிவில் மேலும் வேலைவாய்ப்புகள் இழக்கப்படாமல் தடுக்கப்படுவதோடு, இந்தியாவுக்கு புதிதாக 4.5 கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்க தேவையுள்ளது. இப்போதைக்கு இந்தியாவின் முக்கிய தேவை, வேலைவாய்ப்புகளை பெருக்குவதுதான், இதற்கு, அரசு அதிக பொது நிதியை செலவிட தேவையுள்ளது என்று கூறியுள்ளார்.

# இந்திய எம்.பிக்கள் 25 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

இந்திய நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடருக்கு நேற்று வந்த 25 எம்.பிக்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்களில் பா.ஜ.க எம்.பிக்கள் 12, வை.எஸ்.ஆர் காங்கிரஸ் எம்.பிக்கள் 2 பேர், சிவசேனா, தி.மு.க, ஆர்.எல்.பி கட்சிகளில் தலா ஒருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது.

25 பேரில் 17 பேர் மக்களவை எம்.பிக்கள்,ஏனையோர் மாநிலங்களவை எம்.பிக்கள் என்பது தெரிய வந்துள்ளது. நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் நேற்று தொடங்கி நடந்து வருகிறது. இதையடுத்து கொரோனா தொற்று அச்சம் காரணமாக கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருந்தன. நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்துக்கு கொரோனா பாதுகாப்பு 'கிட்' கொண்டு வரப்பட்டு இருந்தது. நேற்றுமுன்தினமும், நேற்றும் நாடாளுமன்றத்தில் கொரோனா தொற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதையடுத்து கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டு இருந்த பா.ஜ.க எம்பி சுகந்தா மஜூம்தர் தனக்கு கொரோனா தொற்று ஏற்பட்டு இருப்பதாக ட்விட்டரில் பதிவிட்டு இருந்தார்.

மீனாட்சி லேகி, ஆனந்த் குமார் ஹெக்டே, பர்வேஷ் சாஹிப் சிங் ஆகியோருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தைச் சேர்ந்த தி.மு.க எம்பி ஒருவருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆனால் அவர் யார் என்பது குறித்த உறுதியான தகவல் இதுவரை வெளியாகவில்லை.

நாடாளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்களான 785 எம்பிக்களில் 200 பேர் 65 வயதுக்கும் அதிகமானவர்கள். இதற்கு முன்னதாக 25 எம்.பிக்கள் மற்றும் 7 மத்திய அமைச்சர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டு இருந்தது. இவர்களில் அமைச்சர் அமித் ஷாவும் ஒருவர், இவருக்கும் மீண்டும் எய்ம்ஸ் மருத்துவமனையில் முழு உடல் பரிசோதனை நடந்து வருவதாக செய்தி வெளியாகி இருந்தது.

இந்த நிலையில் ராஜ்ய சபையில் உறுப்பினர்கள் தனிமனித இடைவெளியுடன் அமர வைக்கப்பட்டுள்ளனர். மேலும், உறுப்பினர்கள் தங்களது வருகையை குறிப்பிட தனியாக APP ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. அனைத்து உறுப்பினர்களுக்கும் முகக் கவசம், முகத்தை மறைக்கும் பாதுகாப்பு உறை ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

# புதிய தலைவரொருவரை நியமிக்கும் நோக்கம் ஐ.தே.கவுக்கு கிடையாது

**ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தலைமை தாங்கும் மிதவாதத் தலைவரொருவருடன் பேசுவதற்கு தாங்கள் தயாராக இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறுகிறார்.**

## திஸ்ஸ அத்தநாயக்க பேட்டி

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பிரசாரப் பீரங்கியுமான திஸ்ஸ அத்தநாயக்க அண்மையில் எமக்கு வழங்கிய பேட்டியிலேயே இவ்வாறு கூறினார்.

**கேள்வி: ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் மீண்டும் இணைவது தொடர்பான பேச்சுவார்த்தை வெற்றி பெறாத நிலையில் முடிவுற்றதாக ஊடகங்கள் கூறியிருந்தன. அப்பேச்சுவார்த்தை முயற்சிகள் தற்போதும் தொடர்கின்றனவா?**

**பதில்:** ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையே அதிகாரபூர்வ பேச்சுவார்த்தை இடம்பெறவில்லை. எனினும் இரு கட்சிகளும் மீண்டும் ஒன்று சேர வேண்டும் என்ற கருத்து ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களுக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கும் இருந்தது. பொதுமக்களின் அபிப்பிராயமும் அதுவாகத்தான் உள்ளது. எனினும் ஐக்கிய தேசியக் கட்சி தற்போது எதிர்நோக்கும் நிலையை உணர்ந்திருந்தால் அக்கட்சியினர் ஒன்றிணைவது தொடர்பான பேச்சுக்களை இந்நேரம் ஆரம்பித்திருப்பார்கள். மக்களின் அதரவு சஜித் பிரேமதாசவுக்கே இருக்கிறது. அதனால் அவர்தான் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக வேண்டும். அல்லது ஐக்கிய தேசியக் கட்சிக்கு மிதவாத தலைவரொருவர் தெரிவு செய்யப்பட்டு இரு தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும். இருக்கும் வாய்ப்புகள் இவை இரண்டு மட்டுமே. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி இவை இரண்டுக்கும் தயாராக இல்லை என்று தெரிகிறது. கிடைத்துள்ள தகவல்களின்படி ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் ஜனவரி மாதம் வரை கட்சிக்கு புதிய தலைவர் ஒருவரை நியமிக்கும் நோக்கத்தில் இல்லை என்று தெரிகிறது. எனினும் கட்சியின் தலைவர் பதவிக்கு எட்டுப் பேர் வரையில் போட்டி போடுவதாகத் தெரியவந்துள்ளது. இரு கட்சிகளும் ஒன்று சேர வேண்டும் என்பதை கட்சிகளின் ஆதரவாளர்கள் விரும்பும் நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் இதுபற்றி கரிசனை கொள்ள வேண்டும் என்று நாம் விலியுறுத்துகிறோம்.

**கேள்வி: இரு கட்சிகளும் ஒன்றிணைவதற்கு ரணில் விக்கிரமசிங்கவே முட்டுக்கட்டையாக இருப்பதாகக் கருதினால் ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தலைவருடன் அது பற்றி பேசுவீர்களா?**

**பதில்:** ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்த தலைவர் யார் என்பது இன்னும் தெரியவில்லை. அடுத்த ஜனவரியின் பின்னர்தான் அது தெரியவரும். புதிய தலைவர் அரசியல் ரீதியில் சிந்திக்கக் கூடியவராக இருந்தால் அவருடன் பேசுவது பற்றி நாங்கள் யோசித்துப் பார்க்கலாம்.

## ‘கட்சித் தலைவர் பதவிக்கு எட்டுப் பேர் போட்டி’

**கேள்வி: ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்த தலைவராக ருவன் விஜேவர்தன தெரிவு செய்யப்படலாமென வதந்திகள் உலவுகின்றன. அவர் கட்சியின் தலைவர் பதவிக்கு உயர்ந்தால் அவருடன் பேச விரும்புவிர்களா?**

**பதில்:** ருவன் விஜேவர்தனவுடன் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் பழம் பெரும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை முன்னெடுத்துச் செல்லும் முதிர்ச்சியும் அனுபவமும் அவருக்கு இருக்கிறதா என்பது பற்றி எமக்கு சரியாகத் தெரியவில்லை. எனினும் அவர் அரசியல் 'டீல்களில்' சம்பந்தப்பட்டவர் அல்ல. தலைவர் பதவிக்கு போட்டியிடும் ஏழெட்டுப் பேரில் அவர் ஒரு கனவான் அரசியல்வாதி ஆவார். ஆனால் அரசியல் கட்சியொன்றுக்கு தலைமை வகிப்பது என்றால் தியாகம், திறமை, ஜனரஞ்சகம் ஆகியவை மூலம் அவர் அனுபவப்பட்டிருக்க வேண்டும். மேற்படி இடத்துக்கு அவர் பொருந்தி வருவார் என்பது எமக்கு சரிவர தெரியாதுள்ளது. ருவன் விஜேவர்தனதான் கட்சியின் தலைவராக வர வேண்டும் என்பது மக்களின் அபிப்பிராயம் என்று ரணில் விக்கிரமசிங்க நினைத்து விடக் கூடாது. 1946 இல் டி.எஸ்.சேனநாயக்க ஆரம்பித்த கட்சி இது. பல சிறந்த தலைவர்கள் இதனை வழி நடத்திச் சென்றுள்ளனர். ஆனால் கடந்த 26 வருடங்களாக ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் கட்சி சீரழிந்து விட்டது. இந்த நேரத்தில் கட்சியை முன்னெடுத்துச் செல்ல முறையான தலைமைத்துவம் தேவையாகும். அதுவே யதார்த்தமாகும்.

கேள்வி: பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு பெரும் பின்னடைவு ஏற்படும் என்று உள்ளக புலனாய்வு அறிக்கைகள் நிச்சயம் கட்சியின் தலைமைக்கு சுட்டிக்காட்டியிருக்கும். அப்படி இருந்திருந்தும் கட்சியின் தலைமைத்துவம் தனது முறைகளை தேர்தலுக்கு முன் மாற்றிக் கொள்ளவில்லை அல்லவா?

பதில்: நாங்கள் இது பற்றி ஐக்கிய தேசியக் கட்சிக்கு முன்னரே எச்சரித்திருந்தோம். ஆனால் அது பற்றி அவர்கள் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. ஐக்கிய மக்கள் சக்திக்கும் எதிர்பார்த்த அளவு ஆசனங்கள் கிடைக்கவில்லை. ஐக்கிய மக்கள் சக்திக்கு 75 ஆசனங்கள் வரை கிடைக்கும் என்று நாங்கள் எதிர்பார்த்திருந்தோம். ஐக்கிய தேசியக் கட்சிக்கு நான்கு ஆசனங்கள் கிடைக்கும் என்று நாம் எதிர்பார்த்தோம். இதற்கு வேறு சில காரணங்களும் உள்ளன. ஐக்கிய தேசியக் கட்சி ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிராக அரசாங்கத்துக்கு அதரவு வழங்கும் என்றே மக்கள் முதலில் நினைத்திருந்தனர். உண்மையிலேயே ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிராகவே செயற்பட்டது என்பதுதான் உண்மை.

**கேள்வி: 20 ஏ தொடர்பான உங்கள் நிலைப்பாடு என்ன?**

**பதில்:** ஐக்கிய மக்கள் சக்தி அதனை முற்றாக நிராகரித்திருக்கிறது. ஏனெனில் 19 ஏ சரத் வீரசேகர என்ற ஒரே உறுப்பினர் தவிர்ந்த ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. 19ஏ யில் சில குறைகள் இருப்பது உண்மைதான். இந்தக் குறைகள் திருத்தப்பட வேண்டும் என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். குறிப்பாக சுதந்திர ஆணைக்குழுக்களின் பணிகள், நியமிக்கப்படும் விதம் போன்றவை குறைகளாக இருந்தன. அதில் உள்ள தொழில்நுட்ப சிக்கல்களை அகற்றுவதே தேவையாகும். அதனை முழுமையாக ஒழிப்பது அல்ல. எனவே நாம் 19 ஏ ஐ ஆதரிப்போம். ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சை வகிக்க வேண்டும் என்பது அடிப்படையற்ற வாதம். ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் 2002 இல் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் திலக் மாரப்பன என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். ஜனாதிபதி ஒட்டுமொத்த ஆயுதப் படைகளின் தளபதி ஆவார். யுத்தத்தை பிரகடனப்படுத்தும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது. அவர் அமைச்சரவையின் தலைமை ஆவார். பாதுகாப்பு பேரவையின் தலைவரும் ஜனாதிபதிதான். அமைச்சர் என்பது நிர்வாகப் பங்களிப்பினை வழங்குபவர் மட்டுமே. அவர் இடமாற்றங்களையும் பதவி உயர்வுகளையும் கவனிப்பவர்.

> ‘கடந்த 26 வருடங்களாக ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் கட்சி சீரழிந்து விட்டது. இந்த நேரத்தில் கட்சியை முன்னோக்கி கொண்டு செல்ல முறையான தலைமைத்துவம் தேவை’



மஞ்சுள பெர்னாண்டோ...
தமிழில்: என். ராமலிங்கம்

# உல்லாசப் பயணிகளை கவர்ந்து இழுக்கும் எல்லவல நீர்வீழ்ச்சி



இலங்கையில் இப்படியொரு அழகான நீர்வீழ்ச்சி இருக்கிறதா என்று பலரும் வியப்பாகப் பிரமிக்குமளவிற்கு மிகவும் பிரபலமாகி வருகிறது எல்லவல நீர்வீழ்ச்சி. பசுமையான காடுகளால் சூழப்பட்ட இந்த மறைக்கப்பட்ட நீர்வீழ்ச்சியில் நீராடுவதென்பது அளவிலா ஆனந்தத்தைத் தரும். அண்மைக் காலமாக தினமும் நூற்றுக் கணக்கானோர் அங்கு படையெடுத்து வருகின்றனர். விடுமுறை தினங்கள் என்றால் அங்கு மூவினத்தர்களும் பெருமளவில் சங்கமிக்கின்றனர். இதுவரை காலமும் இலைமறைகாய் போல் மறைந்து கிடந்த எல்லவல நீர்வீழ்ச்சி இன்று ஜனரஞ்சகமான உல்லாசபுரியாக மாறி வருகிறது.

கிழக்கு மாகாணத்திற்கு அருகே மனோரம்மியமான இயற்கைச் சூழலிலுள்ள ஒரு உயரமான நீர்வீழ்ச்சி என்றால் இதுவாகத்தானிருக்கும். லுணுகல நீர்வீழ்ச்சி இதை விட உயரம் குறைந்தது. ஆனால் எல்லவல நீர்வீழ்ச்சி அண்மையில்தான் சிலருக்குத் தெரியவந்தது. அதன் பின்பு அங்கு செல்லும் உல்லாசப் பயணிகளுக்கு குறைவில்லை. அங்கு சுமார் 100மீற்றர் உயரத்திலிருந்து சலசலவென கொட்டிக் கொண்டிருக்கும் ஜில் என்ற கடுங்குளிரான நீரில் நீராடுகையில் உலகமே மறந்து போகும். இனம்புரியாத புத்துணர்ச்சி தோன்றும்.

இது வெல்லவாய எல்ல_ பண்டாரவளை பிரதான வீதியின் உட்புறத்தே காட்டுக்குள் அமைந்துள்ளது.

எல்லவல என்பது ஒரு சிறிய ஆனால் அழகான நீர்வீழ்ச்சியாகும். இது ஊவா மாகாணத்தில் மொனராகல மாவட்டத்தில் எல்ல வெல்லவாயா வீதியிலிருந்து அணுகக் கூடியது. இந்த நீர்வீழ்ச்சி வெல்லவாய நகரிலிருந்து 8 கி.மீ தூரத்தில் காட்டுக்குள் மறைந்துள்ளது.

வெல்லவாய நகரிலிருந்து மேற்குப் பக்கமாக எல்ல இராவணன்வெட்டு நீர்த்தேக்கமும் அணைக்கட்டுமுள்ளன.அதனைக் கடந்து செல்கையில் எல்லவல கிராமம் வருகிறது. பெரும்பாலும் வாகனங்கள் ஒரு கட்டத்திற்கு மேல் செல்லாது.

எனவே அவ்விடத்தில் வாகனங்களை நிறுத்தி விட்டு சுமார் ஒன்றரை கிலோ மீற்றர் தூரம் ஒரு விதமான கரடுமுரடான பாதையால் பயணிக்க வேண்டும். இடைநடுவில் பாறைகள், கற்குன்றுகள், மரங்கள் எல்லாமிருக்கும். காட்டுக்குள்ளால் புகுந்து வெளியேறிச் செல்லும் மனநிலை தோன்றும்.

## மொனராகல காட்டுக்குள் ஒரு கண்கவர் அற்புதம்

இங்கு சில அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. நீர்வீழ்ச்சிக்குச் செல்ல அடர்த்தியான காடு, பாறை, நதி படுக்கைகள் மற்றும் வேகமாக ஓடும் நீரோடைகள் வழியாக 1.5 கி.மீ. பயணிக்க வேண்டும். இது அற்புதமானது. ஆனால் கவனமாக செல்ல வேண்டும். போதையில் செல்வது கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டும்.

நீர்வீழ்ச்சியை நோக்கிய பண்டாரவளை பாதையில் சுமார் 3கிலோ மீற்றர் தூரம் பயணித்ததும் ஒரு சந்தி வரும். பௌத்த விகாரை, ஒரு பாலம் அங்குள்ளன. அதனருகே இடதுகை பக்கம் ஒரு வீதி உள்ளது. அந்த வீதியால் சென்றால் எல்லவல நீர்வீழ்ச்சியை அடையலாம்.

அவ்வீதி சுமார் 5 கி.மீ. தூரமானது. இடைநடுவில் அலிகொட்ட என்ற

கிராமவாசிகள் நீர்வீழ்ச்சியிலிருந்து வரும் தண்ணீரை எல்லாவற்றிற்கும் பயன்படுத்துகிறார்கள். எனவே தயவு செய்து அதை எவரும் கழிப்பறைக்கு வசதியாக பயன்படுத்துவது தவறு. நீர்வீழ்ச்சியின் இயற்கைக் குளத்தில் குளிக்கலாம்..

இது ஒரு பரபரப்பான பயணம் என்றாலும் பசுமையான காடுகளால் சூழப்பட்ட இந்த மறைக்கப்பட்ட நீர்வீழ்ச்சியை மக்கள் கட்டாயம் விரும்புவார்கள். இயற்கை குளத்தில் ஒரு நல்ல குளியல் அனுபவிக்கலாம்.

இயற்கைக் குளத்தில் குளிப்பது பாதுகாப்பானது. ஆனால் மழை நாட்களில் விசேஷமாக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏனெனில் நீர் மட்டம் வியத்தகு அளவில் உயரக் கூடும்.

காட்டுக்குள் அமைந்துள்ள நீர்வீழ்ச்சி என்பதால் அந்த பகுதியில் மக்கள் தொகை அதிகம் இல்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இதனால் அவசரகால சூழ்நிலையில் உதவியைக் கண்டுபிடிப்பது சிரமம்.

இது கிராம வாழ்க்கை உள்ள இடம். நெல்வயல்கள், ஆறுகள், அற்புதமான காட்சிகள் மற்றும் அழகான நீர்வீழ்ச்சி போன்ற மறக்க முடியாத பல அனுபவங்களை வழங்குகின்றன.

வெல்லவாய பிரதேசசபை இந்நீர்வீழ்ச்சிக்குச் செல்லும் கரடுமுரடான பயங்கர பாதையை செப்பனிட்டு சீராக்க வேண்டிய தேவையுள்ளது. மக்களுக்கான சேவையை முன்னின்று செய்யும் பட்சத்தில் உல்லாசப்பயணிகளால் வருமானத்தைப் பெறவும் முடியும். பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்கும் பாதுகாப்பிற்கும் வகை செய்ய வேண்டிய கடமை அச்சபைக்குள்ளது என்பதை மறந்து விடலாகாது.

வி.ரி.சகாதேவராஜா...
(காரைதீவு குறூப் நிருபர்)



# மக்கள் பயணம் செய்ய முடியாத நிலையில் செல்வகந்தை பாலம்

கண்டி மாவட்டம், கம்பளை உடபலாத்த பிதேசத்திற்கு உட்பட்ட இரட்டைப் பாதையில் இருந்து செல்வகந்தைக்கு செல்லும் பாதையில் உள்ள பாலம் பலமுறை வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டுளளது .பொது மக்கள் தமது சொந்த பணச் செலவில் தம்மால் முடிந்த வகையில் சீர்செய்து இப்பாலத்தை பாவித்து வந்தனர். ஆனால் கடந்த மாதம் பெய்த கடும்மழையின் போது மேற்படி பாலம் பாவிக்க முடியாத அளவில் மீண்டும் சேதமடைந்துள்ளது .

இப்பாலத்தை ஆயிரத்திற்கும் அதிகமான குடும்பங்கள் பயன்படுத்துகின்றன.

செவ்வகந்த தோட்டம் மற்றும் செல்வகந்த கிராமத்தைச் சேர்ந்தவர்களுக்கு இதைத் தவிர வேறு மாற்றுப் பாதையில்லை.

இப்பகுதி மக்களின் பிரதான தொழில் சிறுதேயிலை உற்பத்தியாகும். இங்கு வாழும் அனைத்து மக்களும் சிறுதேயிலைத் தோட்ட உரிமையாளர்களாவர். அத்துடன் கோழிப்பண்ணை தொழிலும் மேற்கொள்கின்றனர். தமது உற்பத்தியான தேயிலைக் கொழுந்தை எடுத்துச் செல்வதற்கும் உரவகைகளை கொண்டு செல்வதற்கும் கோழிகளுக்கான தீவனம் எடுத்து செல்வதற்கும் மக்கள் இப்பாலத்தையே பயன்படுத்த வேண்டியுள்ளது. சாதாரணமான மழைக்கு கூட இப்பாலத்திற்கு மேலாக வெள்ளம் பாய்வதாலேயே பாலம் விரைவாக சேதமடைந்து விடுகின்றது.

இப்பாலத்தை ஆற்றின் மட்டத்தில் இருந்து நன்கு உயர்த்தியும் அகலப்படுத்தியும் புனரமைக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களும் அன்றாடம் தொழில் நிமித்தம் செல்பவர்களும் நோயாளர்களும் பெரும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.

செல்வகந்த தோட்டம் மூடப்பட்டுள்ளதால் செல்வகந்த கிராமத்தைச் சேர்ந்தவர்களும் கம்பளை, கண்டி போன்ற இடங்களுக்குச் சென்று இரவு வேளையில் வீடு திரும்புபவர்களும் உயிர் அச்சத்துடனேயே மேற்ப்படி பாலத்தினால் பயணிக்கின்றனர். முச்சக்கர வண்டி கூட தற்போது பயணிக்க முடியாதுள்ளது. மக்கள் இப்பாலத்தின் மீது பைனஸ் மரங்களை போட்டு அதன் மேலாக நடந்து செல்கின்றனர். இப்பாலத்தை நிரந்தரமாக திருத்தித் தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஆர் நவராஜா ...
(தெல்தோட்டை தினகரன் நிருபர்)

# மன்னார் ரயில் நிலைய ஊழியர்கள் இடமாறினால் சேவை ஆரம்பிக்கப்படும்

தலைமன்னார் நிருபர்

மன்னார் புகையிரத நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்ட புகையிரத ஊழியர்கள் புகையிரத நிலையத்திலிருந்து தங்கள் இருப்பிடங்களில் அல்லது வேறு இடங்களுக்கு தனிமையாக இருக்க விரும்பினால் மன்னார் புகையிரத நிலையம் மீண்டும் இயங்க ஆரம்பிப்பதில் எவ்வித தடையும் இல்லையென மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தெரிவித்தார்.

நேற்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் மன்னார் மாவட்ட செயலக கேட்போர் மண்டபத்தில் டெங்கு ஒழிப்பு சம்பந்தமாகவும் கொரோனா தொற்று நோய் விடயமாகவும் கலந்துரையாடல் இடம் பெற்றது.

இவ் கூட்டத்தில் சுகாதார அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், பொலிசார் மற்றும் பிரதேச, நகர சபை செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் தற்பொழுது மன்னார் ரயில் நிலையம் கொரோனா காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதால் மன்னார் நகர் ரயில் பிரயாணிகள் பெரும் அசௌரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

ஆகவே இது சுமார் இரு வாரங்களுக்கு நீடிக்கும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. ஆகவே சுகாதார அதிகாரிகள் இது விடயமாக தெளிவுப்படுத்துவது நலம் என தெரிவிக்கப்பட்டது.

இதற்கு மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் கருத்து தெரிவிக்கையில்,..

மன்னார் ரயில் நிலையத்தை மூடும்படி நாங்கள் பணிக்கவில்லை. நாங்கள் அவர்களின் வீடுகளில் அல்லது அவர்கள் விரும்பும் இடங்களில் தனிமைப்படுத்த விருப்பம் தெரிவித்தால் அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு மன்னார் புகையிரத நிலையத்தை உடன் இயங்க வைக்கலாம் என தெரிவித்திருந்தோம்.

ஆனால் இவர்கள் புகையிரத நிலையத்திலே தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் இருக்க விருப்பம் கொண்டமையாலேயே இவ் நிலமை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் இவர்களுக்கு பதிலாக இங்கு கடமைபுரிய மாற்று வழி இல்லாமையும் இருப்பதாக தெரிய வருகின்றது. ஆகவே புகையிரத நிலையம் இது விடயமாக நடவடிக்கை எடுக்குமாகில் மன்னார் புகையிரத நிலையம் மீண்டும் உடன் ஆரம்பிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

### உயிர்த்த ஞாயிறு விசாரணை;

# புலனாய்வு முன்னாள் பணிப்பாளரின் கைபேசியை ஒப்படைக்க உத்தரவு

தேசிய புலனாய்வுத் துறையின் முன்னாள் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் மாஅதிபர் நிலந்த ஜெயவர்தனவின் தொலைபேசியை உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலை விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவுக்கு ஒப்படைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

நிலந்த ஜெயவர்தனவுக்கும், தேசிய புலனாய்வு சேவையின் முன்னாள் இயக்குநர் சிசிரா மெண்டிஸுக்கும் இடையிலான கலந்துரையாடலின் பதிவு குறித்த தகவல்களை அடிப்படையாக கொண்டே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 ஆம் திகதி நியமிக்கப்பட்டது.

இந்த ஆணைக்குழு கடந்த ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி இடம் பெற்ற குண்டுவெடிப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விசாரித்தல் மற்றும் அறிக்கையிடல் பணிகளை மேற்கொள்கின்றது.

# நாட்டின் பல பிரதேசங்களில் தொடரும் மழை காலநிலை

மத்திய, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இடைக்கிடை மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சில இடங்களில் 50 மி.மீ வரை ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடமேல் மாகாணத்தில் கூடுதல் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் சில இடங்களில் பி.ப. 2. மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும்.

நாடு முழுவதும் குறிப்பாக வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை, ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் மத்திய மலை நாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

புத்தளத்தில் இருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக ஹம்பாந்தோட்டைவரையானகடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையில் இருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30,40 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

புத்தளத்தில் இருந்து மன்னார் ஊடாக காங்கேசந்துறை வரையான கடற்பரப்புகளிலும் ஹம்பாந்தோட்டையில் இருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50,60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

## பூஸா கைதிகளின்...

கஞ்ஜிபானி இம்ரான் உள்ளிட்ட 28 கைதிகள் தொடர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர். கடந்த வியாழக்கிழமை பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 45 கைதிகள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்தனர். அவர்களில் 15 பேர் பின்னர் உண்ணாவிரத போராட்டத்தை இடையில் கைவிட்டதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்திருந்தது.நேற்று முன்தினம் 20 பேர் மாத்திரம் போராட்டம் நடத்தியதோடு நேற்று காலை போராட்டம் நிறைவடைந்தது. பாதுகாப்பு நடைமுறைகளை இலகுபடுத்துவது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து 45 கைதிகளால் கடந்த 10 ஆம் திகதி உணவுத்தவிர்ப்பு போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

## எரிபொருள் வகைகளின்... 03ஆம் பக்க தொடர்...

அந்தப் பேச்சுவார்த்தையில் கடற்படை அதிகாரிகள், துறைமுக அதிகார சபை அதிகாரிகள், கடற்கரை பாதுகாப்பு திணைக்களம்,சமுத்திரவியல் சூழல் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் வர்த்தக கப்பல் திணைக்களம் அதனோடு இணைந்த நிறுவனங்களின் அதிகாரிகளும் கலந்து கொண்டுள்ளனர்.

மேற்படி பேச்சுவார்த்தையையடுத்து அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் என அந்த அதிகார சபை தெரிவித்தது.(ஸ)

## அரசின் எதிர்கால...

"வியத்மக" நிறைவேற்றுச் சபைக்கு தெளிவுபடுத்தினார்.

உப குழுக்களை அமைத்து முன்மொழிவுகள் மற்றும் திட்டங்களை முன்வைத்து இராஜாங்க அமைச்சுக்களின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு வழி காட்டவும் அமைச்சரின் முன்னுள்ள சவாலான சந்தர்ப்பங்களின் போது ஆலோசனைகளை வழங்கி உதவுவதற்கும் முடியுமென அவர் குறிப்பிட்டார்.

அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளும் சுற்றாடலை பாதுகாக்கும் வகையில் முன்னெடுக்கப்படுவது உறுதி செய்யப்பட வேண்டுமென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

"வியத்மக" நிறைவேற்றுச் சபையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை அமைப்பின் செயற்குழு உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்திய அவர் , பிரதேச மட்டத்தில் கொள்கை வகுப்பதில் பங்களிக்கக் கூடிய வாய்ப்புகள் குறித்தும் சுட்டிக் காட்டினார்.

## புதிய மேல் நீதிமன்ற... 03ஆம் பக்க தொடர்...

மேலதிக மாவட்ட நீதிபதி செல்வி எஸ்.ஐ.காலிங்கவன்ச , நீதவான் நீதிமன்ற நீதிபதி டி.ஏ.ஆர்.பத்திரன ,அரச சிரேஷ்ட சட்டத்தரணி என். டி.விக்ரமசேகர , அரச சிரேஷ்ட சட்டத்தரணி திருமதி ஏ.ஜி.யு.எஸ். என்.கே.செனவிரத்ன ஆகியோரே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.

## நியூடயமன் கப்பல் ... 03ஆம் பக்க தொடர்...

இந்நிலையில் நியூ டயமன் கப்பலில் தீப்பிழப்புகளிடையே சிக்கியிருந்த அவரை காப்பாற்றிய இலங்கை கடற்படை வீரர்கள் மூவர் அவரது நலன் விசாரிப்பதற்காக நேற்று முன்தினம் மேற்படி தனியார் வைத்திய சாலைக்கு விஜயம் செய்தனர்.

இலங்கை கடற்படையைச் சேர்ந்த லெப்டினன்ட் கே. ஜீ ஏ. எஸ். எம். விஜேரத்ன, மெக்கானிக் டீ. எல். கே. முதியன்ஸே, கடற்கடை வீரர் டபிள்யூ. ஜீ. ஜி. யு. சேனாரத்ன பிலிப்பைன் பிரஜையை காப்பாற்றியவராவார்.

## கொரோனா தொற்றினால்...

அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்நிலையில் கடந்த பெப்ரவரி 18 ஆம் திகதி முதல் நாட்டில் இதுவரை 256,043 பி.சி.ஆர் பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. நாடு முழுவதும் உள்ள 60 தனிமை ப்படுத்தல் நிலையங்களிலிருந்து இதுவரை 40,965 பேர் வெளியேறி யுள்ள நிலையில் 5,960 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உணவு உற்பத்தி...

மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்தார்.

இதற்கு முன்னோடியாக வடக்கிலுள்ள 400 விவசாய அமைப்புகளை இன்று சந்தித்து தேவையான ஊக்குவிப்புகளையும் உதவிகளையும் வழங்கி விவசாயத்துறையில் தன்னிறைவு காண நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இதனுடன் இணைந்ததாக வடக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட விதவைகள்,அங்கவீனமுற்றோர், புனர்வாழ்வு பெற்ற புலி உறுப்பினர்கள் ஆகியோருக்கு சுயதொழில் வாய்ப்புகள் பெற்றுக் கொடுக்க இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆரம்ப காலத்தில் கிழங்கு,வெங்காயம்பே,மிளகாய்,பால் உற்பத்திகளில் வடபகுதி முன்னணியில் இருந்தது.யுத்தத்தின் பின்னர் பின்னடைவு ஏற்பட்டது.இன்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய அநேக உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.அவற்றை உள்நாட்டில் உற்பத்தி செய்து விவசாய புரட்சியொன்றை ஏற்படுத்த பிரதமர் எனக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதனை வடக்கில் இருந்து ஆரம்பிக்குமாறும் அவர் கோரினார்.இதற்கமையவே இந்தத்த திட்டம் இன்று வடக்கில் ஆரம்பிக்கப்படுகிறது. அங்குள்ள விவசாயிகளை சந்தித்து அவர்களின் பிரச்சினைகளை தீர்க்கவும் விவசாய உற்பத்திகளை அதிகரிக்க தேவையான உதவிகளை வழங்கவும் இருக்கிறோம்.பால் உற்பத்திகளும் அதிகளவில் இறக்குமதி செய்யப்படுகிறது.உள்நாட்டு பால் உற்பத்தியை மேம்படுத்தவும் விசேட திட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (பா)

## பஸ் முன்னுரிமைச் சட்டம்... 03ஆம் பக்க தொடர்...

அதேபோல, பேலியகொடை மற்றும் களனி பாலத்திற்கு அருகில் கொழும்பு,கண்டி வீதியிலும் நுகேகொடையிலிருந்து ஹைலெவல் வீதியிலும் இவ்வாறு கடும் போக்குவரத்து நெரிசல் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இதேபோல தெஹிவளை மற்றும் கொஹூவளையிலிருந்து காலி வீதிக்கு பிரவேசிக்கும் பகுதிகளிலும் இவ்வாறு வாகன நெரிசல் ஏற்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை வீதி ஒழுங்குகளை பேணி முன்னுரிமைச் சட்டத்திற்கு அமைய பயணிக்குமாறு சாரதிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. சட்டத்தை மீறுவோருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதோடு பரீட்சார்த்த முன்னுரிமை திட்டம் நிறைவடைந்த பின்னர் சட்டத்தை மீறுவோருக்கு அபராதம் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.இது தொடர்பில் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக மேல்மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்தார்.

## நாடு முழுதும் சுற்றிவளைப்பு... 03ஆம் பக்க தொடர்...

வகை தோட்டாக்கள் 15 உம் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

இதேவேளை உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட துப்பாக்கியுடன் கஹவத்த பகுதியில் ஒருவரும், சிலாபத்துறை பகுதியில் துப்பாக்கிகள் இரண்டுடன் நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சட்டவிரோதமாக வைத்துள்ள ஆயுதங்களை கைப்பற்ற நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.கடந்த நாட்களிலும் பல ஆயுதங்கள் மீட்கப்பட்டது தெரிந்ததே. (பா)

## சி.சி.ரி.வி ஆதாரத்துடன்... 03ஆம் பக்க தொடர்...

செய்யப்பட்டுள்ளனர்.திருட்டிற்காக பயன்படுத்திய கொள்கலன் வாகனம் மற்றும் சிறிய லொறி ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். திருடிய தொலைபேசி இணைப்பு வயர்கள் சுமார் 660 மீற்றர் நீளமானது எனவும் அதனூடாக 600 பேருக்கு தொலைபேசி இணைப்புகளை வழங்க முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## சட்ட மாஅதிபருக்கு... 03ஆம் பக்க தொடர்...

செய்துள்ளார்.அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2002ம் ஆண்டில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 19 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டமூலம் தொடர்பில் அப்போது பதவியிலிருந்த பிரதம நீதியரசர் சரத் நந்த சில்வா உள்ளிட்ட 07 பேர் கொண்ட உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழு மூலம் அரசியலமைப்பின் 70.1 உப சரத்தை மாற்றுவதற்காக, பாராளுமன்றம் ஒருவருட கால எல்லைக்குள் கலைக்கப்படுவதை மாற்றுவது தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு மற்றும் குறிப்பாக பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்களின் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும் என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும் அதனை மீறி 20வது அரசியலமைப்பு திருத்த சட்டமூலத்தின் 14வது உப சரத்தை பரிசீலிக்கும்போது சட்ட மாஅதிபரான ஜனாதிபதி சட்டத்தரணி தப்புள டி லிவேரா அந்த தீர்மானத்திற்கு முரணாக 20வது அரசியலமைப்பு திருத்த சட்டமூலத்தை தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதற்கிணங்க சட்ட மா அதிபர் தப்புள டி லிவேரா சட்டத்தரணிகளின் தொழில் மற்றும் அதற்கான தாற்பரியங்கள் தொடர்பில் உச்ச நீதிமன்றத்தின் நியமங்களை மீறியுள்ளார்.

அதற்கிணங்க அவர் உச்ச நீதிமன்ற சட்டங்களான 3, 15, 18, 18 (அ) 51, 58 மற்றும் 62 இற்கு உட்பட்ட சட்டங்களுக்கிணங்க தொழில் தாற்பரியத்தை மீறியுள்ளார். அதனால் அது தொடர்பில் பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு முறைப்பாட்டாளரான சட்டத்தரணி உச்ச நீதிமன்றத்திடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

(ஸ)

## எமது கோரிக்கை தொடர்பில்...

கோரிக்கைகளை நான் தேசிய அரங்கில் முன் வைத்துள்ளேன்.

அரசியலமைப்பு குழுவில், ஏனைய சகோதர இன பிரதிநிதிகள் இடம் பெற்றிருப்பதை போன்று மலையக தமிழ் பிரதிநிதி ஒருவரும் நியமிக்கப்பட வேண்டும் . இரண்டாவது, பெருந்தோட்டங்களை சிறு தோட்ட முறைமைக்குள் கொண்டு வந்து காணிகள் பிரித்து வழங்கப்படும் உத்தேச திட்டத்தில், தோட்ட தொழிலாளர்களையும் பங்காளிகளாக்கி அவர்களுக்கும் காணிகள் வழங்க வேண்டும். இந்த இரண்டு விடயங்கள் தொடர்பிலும் இ.தொ.கா மௌனமாக இருக்கின்றது. இவை பற்றி நடைபெற்றுள்ள உயர்மட்ட பேச்சுவார்த்தைகளில் இ.தொ.கா பிரதிநிதிகளுக்கு கலந்துக் கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படக்கூட இல்லை.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போதே தோட்டத் தொழிலாளருக்கு உறுதியளித்த ஆயிரம் ரூபா சம்பளம் போன்று இவையும் கிடப்பில் போடப்பட்டுள்ளன என்றார்.

## தேசிய தோட்டத் தொழிலாளர்...

இதன் போது தொடர்ந்து பேசுகையில்,

மலையக மக்களின் ஏகோபித்த தலைவனும் என்தொப்புள் கொடி உறவுகளின் பாதுகாவலன் என்ற வகையில் என் மக்களுக்கு பதில் சொல்லக்கூடிய தலையாய கடமைப்பாடு எனக்குள்ளது. மக்களின் புறக்கணிப்புக்கு ஆளாகி மக்களின் தேவைகளை புரிந்து சேவையாற்ற தவறிய ஒரு சில முன்னாள் அரசியல் வாதிகளின் கேளிக்கை கூத்துக்களும்,அடாவடி செயற்பாடுகளும் சமீபகாலமாக இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தொழிலாளர் இல்லத்தில் அரங்கேறிய வண்ணம் உள்ளன.சட்டத்திற்கு முரணான வகையில் ஓர் பழமை வாய்ந்த மாபெரும் தொழிற்சங்கத்தின் தலைமைக் காரியாலயத்திற்குள் அத்துமீறியது மட்டுமன்றி,அவர்களது மெய்ப்பாதுகாவலர்கள் எனும் போர்வையிலுள்ள அடியாட்கள் கும்பலின் சத்திரமாகவும் தற்போது அத் தலைமைக் காரியாலயம் மாறியுள்ளது.

எது எவ்வாறாயினும் மலையக மக்களும் அவர்களுடைய பிரதிநிதியாகிய நாங்களும் முட்டாள்கள் என எண்ணி இவ்வாறு அராஜகம் புரிவதை நிறுத்திக் கொள்வது சம்பந்தப்பட்டவர்களுக்கு சிறந்தது .

ஏனெனில் எம் பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு,எமக்கும் கலவரத்தை உண்டுபண்ணவும்,அடியாட்களை நிறுத்தவும் தெரியும்.ஆனால் அவ்வாறான செயல்களை புரிவதற்கு நாங்கள் காடையர்கள் அல்ல. ஆகவே பெருந்தோட்ட மக்கள் நாம் அனைவரும் விழிப்பாக இருக்க வேண்டும்.

## சிறுவனின் கோரிக்கைக்கு...

தமக்கான வீடமைப்பு திட்டத்தை அமைத்து தர நடவடிக்கை எடுக்குமாறும் கோரி அந்த பிரதேசத்தில் வசிக்கும் முஸ்லிம் மக்கள் நேற்றும் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியிருந்தனர்.இதன்போது, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சிறுவனொருவன் 'மஹிந்த மாமா எங்களுக்கு வீடு கட்டி தரமாட்டிங்களா?"" என எழுதப்பட்ட பதாகையொன்றை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட புகைப்படம் சமூக வலைத்தளங்களில் அதிகளவில் பகிரப்பட்டது.

இந்த புகைப்படத்தை நேற்று பார்வையிட்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, குறித்த பிரச்சினை தொடர்பில் உடனடியாக ஆராயுமாறு விடயத்திற்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்தவிற்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.இதையடுத்து, இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்டு இது தொடர்பில் ஆராய்ந்துள்ளார். யாழ் மாவட்ட அபிவிருத்தி குழு இணைத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும் குறிப்பிட்ட இடத்துக்கு சென்று நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

## பட்டதாரிகளுக்கான தலைமைத்துவ...

5 மாதங்களுக்குள் 50,000 பட்டதாரிகளுக்கும் பயிற்சியளிக்கப்படுகிறது.

முழுமையான ஆற்றல்மிக்க பணியாளர்களாக தேசத்தைக் கட்டியெழுப்புவதில் பயனுள்ள பங்களிப்பை உறுதி செய்வதற்காக இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகளின் அறிவு, திறன்கள் மற்றும் அணுகுமுறைகளை வளர்ப்பதற்காக இந்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

மாவட்ட அடிப்படையில் பங்கேற்கும் பட்டதாரிகள் பிரிக்கப்பட்டுள்ளனர். பங்கேற்பாளர்களுக்கு திட்டமிடல் மற்றும் கள ஆய்வுகளில் ஈடுபடுவதற்கான கூடுதலான வாய்ப்புகள் வழங்கப்படுவதன் ஊடாக அவர்களின் அணுகுமுறைகள் மற்றும் திறன்களை மேம்படுத்திக்கொள்ள முடியும்.

ஆட்சேர்ப்பு முதல் ஓய்வு பெறும் வரை அரசத்துறை ஊழியர்களின் மனநிலையை மாற்றுவதற்கான முக்கியமான தேவையை மையமாகக் கொண்டு இராணுவப் பயிற்சியின் ஊடாக நீண்ட கால மற்றும் குறுங் கால இலக்குகளில் திறம்பட மற்றும் வினைத்திறனாக பணியாற்றுவதற்கான தலைமைத்துவம், நிர்வாக திறன், இலக்கு மீதான கவனம், தன்நம்பிக்கை மற்றும் அரச பொறிமுறையின் நோக்கங்களை புரிதல் என்பவற்றை வளர்த்துக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சி.விக்கு எதிரான வழக்கை வாபஸ்...

குற்றச்செயல்களிலும் ஈடுப்படாத என்னையும் பதவி விலக்கியிருந்தார். இதற்கு நான் கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தேன். எந்த குற்றமும் செய்யாத என்னையும் பதவி விலக்கியது எனது தன்மானத்திற்கு பெரும் பாதிப்பாக இருந்தது. எனவேதான் நீதி கோரி அதற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தேன். எனவே இந்த வழக்கின் பிரகாரம் வழங்கிய தீர்ப்பில் நான் வடக்கு மாகாண சபையில் வகித்த அமைச்சுப் பதவியை மீண்டும் எனக்கு வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. ஆனால் அதனை அப்போது முதலமைச்சர் பதவியிலிருந்த விக்கினேஸ்வரன் அவர்கள் செய்யவில்லை. இந்த நிலையில் மீண்டும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கின் விசாரணை இன்று நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்படும். இதன் போது முன்னாள் முதலமைச்சர் குற்றவாளியாக இனம் காணப்படுவதற்கே அதிக வாய்ப்பு காணப்படுகிறது. எனவே அவ்வாறு அவர் குற்றவாளியாக இனம் காணப்பட்டால் சிறைத் தண்டனைக்கு உள்ளாக வேண்டி ஏற்படலாம். இதனை கருத்தில் கொண்டே பலரும் என்னிடம் வழக்கை வாபஸ்பெறுமாறு கோரி வந்தனர். இந்த நிலையில் நான் எதிர்பார்த்த நீதி, எனக்கான நியாயம் கிடைத்தமையால் இனத்தின் நலன் கருதி முன்னாள் முதலமைச்சருக்கு எதிரான வழக்கை வாபஸ்பெறுவேன் எனத் தெரிவித்தார்.

நான் பதிவி விலக்கப்பட்டபோது எனது நியாயத்திற்காக எனக்காக எவரும் குரல் கொடுக்கவில்லை. அப்போது எனது நியாயம் மட்டுமே என்பக்கம் இருந்தது. ஆனால் தற்போது முன்னாள் முதலமைச்சர் தண்டிக்கப்படக் கூடாது என்பதற்காக சட்டத்தரணிகள், புத்திஜீவிகள், என பலரும் என்னுடன் தொடர்பு கொண்டு பேசி வருகின்றனர். எனவே ஒட்டுமொத்த தமிழ் இனத்தின் நலன் கருதியே நான் வழக்கை வாபஸ் பெறுகிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

## நாட்டிற்கு முழுமையான...

அதிகளவு அதிகாரம் பெற்றுக் கொடுக்கப்படுவதாகவும் அது ஜனநாயகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் சில தரப்பினர் தெரிவித்து வருவது தவறான சிந்தனையாகும்.

20வது அரசியலமைப்பு திருத்தம் நாட்டின் அரசியல் யாப்பை மாற்றுவதற்கான முதலாவது நடவடிக்கையாகும்.

காலத்திற்கு பொருத்தமான புதிய அரசியலமைப்பு தயாரிக்கப்படவேண்டும். முழுமையான அரசியலமைப்பு தயாரிப்பதானது முக்கியமானது என்றும் அதற்காக அனைவரினதும் கருத்துக்களை பெற்றுக்கொள்வதும் அவசியமெனவும் தெரிவித்துள்ள அமைச்சர் அதற்காக சில காலம் எடுக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தீர்வு காணப்படவேண்டிய பிரச்சினைகளை ஒதுக்கிவிட்டு அதற்காக நாம் முழுமையான காலத்தை எடுத்துக்கொள்ள முடியாததால் 20வது அரசியலமைப்பு திருத்தம் அவசியமாகிறது.

அரசாங்கமே அரசியலமைப்பை முன்வைக்கின்றது. அதற்கு அமைச்சரவையின் அனுமதியுடன் பாராளுமன்றத்தில் அதனை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் அரசாங்கம் முழுப் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறது. அதேவேளை அது தனி நபரொருவரினால் தயாரிக்கப்பட்டது அல்ல என்றும் அவர் தெரிவித்தார். நாட்டின் அனைத்து பகுதிகளிலும் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள தலைவருக்கு நாட்டின் பொறிமுறையை தயாரிப்பதற்கான தீர்மானத்தை மேற்கொள்ளும் உரிமை இருப்பது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

குறிப்பாக மனிதவள அபிவிருத்திக்கு அவசியமான ஐந்து நிறுவனங்களை இணைத்து ஒரு அமைச்சின் கீழ் அதற்கான கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (ஸ)

# இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து அமைதிப் போராட்டம்

## நல்லூர் முன்றலில் இருந்து பேரணி

*யாழ்ப்பாணம் குறூப் நிருபர்*

இந்திய மீனவர்களின் அத்துமீறிய இழுவைப்படகு தொழில் மட்டும் சுருக்கு வலை மீன்பிடி தொழிலை தடைசெய்யக்கோரி வடமராட்சி கிழக்கு மீனவர்கள் நேற்று அமைதி வழிப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணம் நல்லூர் செட்டி தெரு வீதியில் இருந்து காலை 11 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டமானது, யாழ்ப்பாணம் மருதடி வீதியிலுள்ள இந்திய துணை தூதரகத்தின் முன்பாக நிறைவு செய்ததுடன், இந்திய துணைத்தூதுவர் சங்கர் பாலசந்தரிடம் இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பான சுருக்கு வலை மற்றும் இழுவைப் படகு தொழிலை தடை செய்ய இந்திய அரசாங்கத்திற்கு, தெரியப்படுத்துமாறும், இந்திய மீனவர்களுடன் பேசி தமது வாழ்வாதாரத்தை மெருகேற்றும் தமது குடும்ப பிரச்சினைகளை தாங்கள் சீர் செய்யவும் தங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் இந்திய மீனவர்களுடைய




வருகையை முற்று முழுதாக தடை செய்யுமாறு கோரியும் மகஜர் கையளித்தனர்.

அந்த மகஜர் கையளிப்பின் பின்னர் அங்கிருந்து கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்திற்குச் சென்று அங்கும் அமைச்சரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

அந்த மகஜரில் இந்திய மீனவர்கள் அத்துமீறி வடமராட்சி கடற்பரப்பில் மீன் பிடித் தொழிலில் ஈடுபடுவதனால், தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன் வலைகள் நாசமறுக்கப்படுவதாகவும், சுருக்கு வலை மற்றும் இழுவைப்படகு தொழில் புரிவதாக குற்றம் சாட்டியுள்ளதோடு, அமைச்சர் இருநாட்டு அரசாங்கங்களுக்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இந்திய பிரதமர் மோடியுடன் கலந்துரையாடி, தமக்கான தீர்வைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேநேரம் இழுவைப்படகு தொழில் முறைமையினால் தமது தொழிலை கைவிட்டு வேறு தொழிலுக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியுள்ளதாகவும், எனவே இந்த விடயம் தொடர்பாக கடற்றொழில் மற்றும் நீரியல்வளத் துறை அமைச்சர் உடனடியாக அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு சென்று இந்த விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

மகஜரை பெற்றுக் கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலர் இந்த மகஜரை அமைச்சரிடம் கையளிப்பதாகவும், அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான ஏற்பாடு செய்வதாகவும் தெரிவித்தார்.

# கேப்பாபிலவு தனிமைப்படுத்தல் நிலையம்; 21 பேர் நேற்று வீடுகளுக்கு அனுப்பி வைப்பு

*முல்லைத்தீவு குறூப் நிருபர்*

கேப்பாபிலவு விமானப்படைத் தள தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து நேற்று 21 பேர் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப்படைத்தளத்தில் கடந்த மாதம் வெளிநாடுகளில் இருந்து வருகைதந்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு அவர்களுக்கான PCR பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் பலர் கட்டம் கட்டமாக வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்கள்.

இந்நிலையில் நேற்று தென்பகுதியைச் சேர்ந்த 21 பேர் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் இன்னும் 18 பேர் கண்காணிப்பில் இருப்பதாக முல்லைத்தீவு பொலிசார் தெரிவித்தனர்.

# வவுனியாவில் அமுத விழா



பிரபல சைவத் தொண்டரும் தமிழ்ப் பற்றாளருமான சிவநெறிப் புரவலர் சீ.ஏ.இராமசுவாமியின் 80 ஆவது அகவை பூர்த்தியை முன்னிட்டு வவுனியா கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா சபை அமுத விழாவினை ஏற்பாடு செய்துள்ளது.

தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இன்று மாலை 4 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறுகிறது.

விழாவில் விழா நாயகர் தம்பதி வரவேற்பு, மங்கல விளக்கேற்றல், தர்மகர்த்தா சபையின் தலைவி திருமதி சிறி.செல்வராணியின் வரவேற்புரை,கௌரவிப்பு, ஆசியுரை, தலைமையுரை என்பவற்றைத் தொடர்ந்து ஜனாதிபதி சட்டத்தரணி மு.சிற்றம்பலம், கோவில் குளம் சிவன் கோவில் செயலாளர் ஆ.நவரத்தினராசா, காளி கோவில் தலைவர் இ.கிருபாமூர்த்தி,நா.சேனாதிராசா,கலாசார உத்தியோகத்தர்கள் வீ.பிரதீபன், இ.நித்தியானந்தன், இந்து மாமன்ற செயலாளர் வி.முத்துராசா,வர்த்தக சங்கத் தலைவர் ச.சுஜேன் ஆகியோரின் வாழ்த்துரைகள் இடம்பெறும்.







கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப்பொருள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டார். காலை 10 மணியளவில், உடுவில் பிரதேசத்திலுள்ள சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையத்தை பார்வையிட்ட போது பிடிக்கப்பட்ட படங்கள்.
படங்கள்;பருத்தித்துறை விசேட நிருபர்

# நந்திக் கடலினை துப்புரவு செய்வதில் தொடரும் இழுபறி நிலைமைகள்

*முல்லைத்தீவு குறூப் நிருபர்*

முல்லைத்தீவு நந்திக் கடலினை துப்புரவு செய்வதில் தொடர்ச்சியாக இழுபறி நிலைமைகள் காணப்படுவதாக நந்திக் கடலினை நம்பியுள்ள கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். கடந்த பத்தாண்டுகளாக நந்திக் கடலினை துப்புரவு செய்ய வேண்டும் என பல கூட்டங்கள் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திலும் கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்திலும் நடைபெற்ற போதிலும் இதுவரை துப்புரவு பணிகள் நடைபெறவில்லை.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தினால் நந்திக் கடலினை துப்புரவு செய்வதற்கான இறுதிக் கட்டப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள நிலையிலும் பணிகள் தொடங்கப்படவில்லை. இதன் காரணமாக நந்திக் கடலினை நம்பியுள்ள ஐயாயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்பினை எதிர்நோக்கியுள்ளன. தேர்தல் காலத்தில் துப்புரவு பணிகளை தொடங்கி



அப்பணிகளை தொடர முடியாமல் நிறுத்தப்பட்ட போதிலும் தற்போது அப்பணிகளை தொடர்வதில் தாமதங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. நந்திக் கடலினை துப்புரவு செய்வதன் மூலமே கடல் உயிரினங்களின் பெருக்கம் அதிகரிக்கும். போர் காலத்தில் அமைக்கப்பட்ட மண் அரண்களும் முத்தையன்கட்டுக் குளத்தின் நீர் கடலினைச் சென்றடைவதும் நந்திக் கடலில் பெரும் மாற்றங்களை உருவாக்கி இருப்பதன் காரணமாக நந்திக் கடலினை துப்புரவு செய்ய வேண்டும் என கடற்றொழிலாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

# தமிழ் இனத்தின் பொதுக் கொள்கையை வென்றெடுக்க அணிதிரட்ட வேண்டிய தார்மீக கடமை உள்ளது

## விஸ்வலிங்கம் மணிவண்ணன்

*சரசாலை நிருபர்*

தமிழ் இனத்தை ஒரு பொதுக் கொள்கையின் அடிப்படையில் இலட்சியத்தை வென்றெடுப்பதற்காக அணி திரட்ட வேண்டிய தார்மீகக் கடமை உள்ளதென சட்டத்தரணியும்,தமிழ்த் தேசிய இளைஞர் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொடிகாமம் நட்சத்திரமஹால் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற இளைஞர் சந்திப்பின் போது இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் பேசிய அவர்,...

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இளையோர் அமைப்பை நாம் நிறுவி வருகிறோம்.

அதற்கு தமிழ்த் தேசிய இளைஞர் பேரவை எனும் பெயரில் ஒவ்வொரு கிராமங்கள் தோறும் இளைஞர்களை அணி திரட்டி பலமான சக்தியாக எமது அமைப்பை மாற்றுவதற்கான முயற்சியில் நாம் ஈடுபட்டு வருகிறோம்.அந்த வகையில் இன்றைய தினம் தென்மராட்சிப் பிரதேச இளைஞர்களை ஒன்றுதிரட்டி அவர்களை எமது இளையோர் பேரவையில் ஒன்றிணைப்பதற்கான வேலைத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.



இன்று நூற்றுக்கணக்கான இளைஞர்கள் எம்மோடு ஆர்வமாக கலந்துகொண்டு எதிர்காலத்தில் ஒரு மாபெரும் அரசியல் சக்தியாக தமிழ் இளைஞர் பேரவையை மாற்றியமைப்பதற்காக எம்மோடு சேர்ந்து பயணிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

நாம் தமிழ் மக்களின் அரசியல் பலத்தை அதிகரிக்கும் முகமாக தமிழ் மக்களை ஒரு கொள்கையின் பால் ஒற்றுமைப்பட்ட ஒரு இனமாக மாற்றி அமைக்கின்ற ஒரு வேலைத்திட்டத்தில் பயணிக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றோம்.2020 நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த்தேசிய வாதம் சிதைக்கப்பட்டிருப்பது கண்ணூடாகத் தெரிகின்ற விடயம். சிங்கள தேசிய சக்திகள், அவர்களோடு இணைந்து செயற்படுகின்ற சக்திகள் வடக்கு கிழக்கில் பேரெழுச்சி பெறுகின்ற ஒரு தன்மையை இந்தத் தேர்தலில் அவதானித்திருக்கிறோம்.தமிழ்த் தேசியம் சிதைந்து தென் இலங்கைக் கட்சிகள் அல்லது அவர்களோடு நேரடியாக இணைந்து பயணிக்கின்ற கட்சிகள் வடக்கு கிழக்கை மையப்படுத்தி ஆலமரமாக விஸ்தரிக்கின்ற ஒரு அபாயத்தை இந்தத் தேர்தலில் உணர்ந்ததன் பிரகாரம் .

தமிழ் இனத்தை ஒரு பொதுக் கொள்கையின் அடிப்படையில் இலட்சியத்தை வென்றெடுப்பதற்காக அணி திரட்ட வேண்டிய தார்மீகக் கடமை உள்ளது.அந்தக் கடப்பாட்டை செய்வதற்காக இந்த இளைஞர்களை எம்மோடு அணி திரட்டுவதற்கான பணிகளில் ஈடுபட்டு வருகிறோம்.எமது பயணம் ஆரோக்கியமான ஓர் பாதையில் செல்கின்றது.

# வவுனியாவில் போக்குவரத்து பொலிசாரின் விசேட சோதனை

*வவுனியா நிருபர்*

வவுனியா போக்குவரத்து பொலிஸாரின் விசேட நடவடிக்கையால் வீதி ஒழுங்குகளை மீறி வாகனம் செலுத்திய பல சாரதிகளுக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் அண்மைக் காலமாக அதிகரித்துள்ள விபத்துக்களை கருத்தில் கொண்டு வவுனியா போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி காமினி திஸாநாயக்க தலைமையிலான பொலிஸ்குழுவினர் விஷேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். அந்த வகையில் நேற்று வவுனியா புகையிரத நிலைய வீதி வைரவபுளியங்குளம் பகுதியில் திடீர் சோதனை நடவடிக்கையினை முன்னெடுத்திருந்தனர்.

இந்த சோதனைகளில் தலைக்கவசம் சீராக அணியாமை, சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனமோட்டியமை, அதிக சத்தமுடைய ஹோர்ன் எழுப்பியமை, வாகனமோட்டும் போது தொலைபேசி பயன்படுத்தியமை போன்ற பல்வேறு குற்றங்களுக்காக சாரதிகளுக்கு எதிராக தண்டம் விதிக்கப்பட்டதுடன், வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை பாதசாரிகள் மற்றும் வாகனசாரதிகளிற்கு போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பாக தெளிவூட்டல்களையும் பொலிசார் வழங்கியிருந்தனர்.

# வவுனியா வைத்தியசாலையில் மாடி கட்டிடத்தில் ஏறிய சிறுமியால் பரபரப்பு

*வவுனியா நிருபர்*

வவுனியா வைத்தியசாலையின் மாடிக்கட்டடத்தில் ஏறி தற்கொலை செய்துகொள்ள முயற்சித்த சிறுமியால் வவுனியா வைத்தியசாலை வளாகத்தில் நேற்று பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டிருந்தது.

இச் சிறுமி வைத்தியசாலையின் இரண்டாவது மாடிக்கட்டடத்தில் ஏறி கீழே குதிக்க போவதாக தெரிவித்த நிலையில், விரைந்து செயற்பட்ட வைத்தியசாலை ஊழியர்கள் மாடிக்கட்டடத்தில் ஏறி சிறுமியை மீட்டுள்ளனர்.

ஈச்சங்குளம் பகுதியை சேர்ந்த 15 வயதான சிறுமியே இவ்வாறு தற்கொலைக்கு முயற்சிசெய்ததுடன்,காதல் விவகாரத்தினாலேயே தான் தற்கொலைக்கு முயன்றதாக அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவத்தால் வவுனியா வைத்தியசாலையில் பரபரப்பான சூழல் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஓமந்தைப் பங்கில் புதிய நற்கருணை சிற்றாலயம்

*மன்னார் குறூப் நிருபர்*

வவுனியா மறைக்கோட்டத்தைச் சேர்ந்த ஓமந்தை பங்கின் புதிய சின்னக்குளம் என அழைக்கப்படும் பற்றிமா நகரில் புதிதாக அமைக்கப்பட்ட நற்கருணை ஆண்டவர் சிற்றாலயம் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையினால் நேற்று முன்தினம் அபிசேகம் செய்யப்பட்டது. இந் நிகழ்வில் பங்குத்தந்தை அருட்பணி. சுகுணராஜ் குரூஸ் அடிகளார், ஆயரின் செயலர் அருட்பணி நிக்லஸ் அடிகளார், அருட்தந்தையர்கள், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், பங்கு மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



# மோட்டார் சைக்கிள் – துவிச்சக்கர வண்டி விபத்து; 15 வயது மாணவர் பலி

*வவுனியா விசேட நிருபர்*

வவுனியா, ஈச்சங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 15 வயது மாணவன் ஒருவர் மரணித்துள்ளார். நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, ஈச்சங்குளம் பிரதான வீதியில் தனியார் கல்வி நிலையத்தில் இருந்து வீடு நோக்கி துவிச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த மாணவனை அதே பாதையில் சென்ற மோட்டர் சைக்கிள் மோதியதால் இவ் விபத்து இடம்பெற்றது.

விபத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த 15 வயது எழில்ராசா புவிதரன் என்ற புதுக்குளம் மகா வித்தியாலய மாணவன் மரணமடைந்துள்ளதுடன், மோட்டர் சைக்கிளில் பயணித்த ஒருவர் காயமடைந்துள்ளார். மூன்று மோட்டர் சைக்கிள்கள் சமாந்தரமாக சென்றமையினாலேயே குறித்த விபத்து இடம்பெற்றதாக அப்பகுதியில் நின்றவர்கள் தெரிவித்துள்ளதுடன், விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிள் தவிர ஏனை இரு மோட்டார் சைக்கிள்களில் வந்தவர்கள் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் ஈச்சங்குளம் பொலிசார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# இடமாற்றப்பட்ட ஆசிரியர்கள் மீள திரும்பாததால் ஆசிரியர் தட்டுப்பாடு

## மட்டு. மாவட்ட அபிவிருத்தி கூட்டத்தில் தெரிவிப்பு



**மட்டக்களப்பு சுழற்சி நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாகாண கல்வித் திணைக்களம் ஆசிரியர் இடமாற்றங்களைச் செய்து, பொதுத் தேர்தல் காரணமாக இடைநிறுத்தப்பட்டப்பட்ட போதிலும் குறித்த ஆசிரியர்கள் புதிய பாடசாலைகளுக்கு மீள திரும்பவில்லை. இதனால் மாவட்டத்தில் மட்டக்களப்பு மேற்கு , மட்டக்களப்பு மத்தி, கல்குடா கல்வி வலயங்களில் ஆசிரியர் மற்றும் நிரந்தர அதிபர்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக வலயக் கல்விப் பணிப்பாளர்களால் தெரிவிக்கப் படுகின்றது.

ஜனாதிபதி செயலகத்தின் ஆலோசனைக்கமைய மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறும் அபிவிருத்தி வேலைகளின் முன்னேற்றங்கள் மற்றும் எதிர்நோக்கும் சவால்களை கண்டறிந்து தீர்வு காண்பது தொடர்பான மாவட்ட அபிவிருத்தி தொடர்பாக விசேட கூட்டத்திலேயே இந்த குறைபாடு தெரிவிக்கப்பட்டது.

மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் நடை பெற்ற இவ் விசேட கூட்டத்தில், மாவட்ட காணிப் பிரிவு மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நவரூபரஞ்சனி, திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசி கலா புண்ணிய மூர்த்தி மற்றும் மாவட்டத்தில் செயல் படும் அரச திணைக் களங்களின் உள்ளூர் தலைவர்கள் பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.

மட்டக்களப்பு கல்வி வலயத்தில் 150 அதிபர்களும் 285 ஆசிரியர்களும் மேலதிகமாக இருப்பதாகவும் மத்திய கல்வியமைச்சின் நிருவாகத்திலுள்ள தேசிய பாட சாலைகளான சிவானந்தா தேசிய பாடசாலையில் 35 ஆசிரியர்களும் மட்டக்களப்பு புனித மிக்கல் கல்லூரியில் பாட அட்டவைணை இல்லாத நிலையில் 1 6 ஆசிரியர்கள் மேலதிகமாக இருக்கினறனர்.

எனினும் மட்டக்களப்பு மேற்கு கல்குடா கல்வி வலயங்களில் பெருமளவு ஆசிரியர்கள், அதிபர்களுக்கு வெற்றிடம் நிலவுவதாக வலயக் கல்விப் பணிப்பாளர்களால் தெரிவிக்கப்பட்டது.

இந்த விசேட அபிவிருத்தி தொடர்பான கூட்டத்தில் கல்வி, நீர்ப்பாசனம், விவசாயம், தேசிய உரசெயலகம், கால்நடை உற்பத்தி சுகாதாரம், மீன்பிடி, வீடமைப்பு, தென்னை அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி உட்பட பல்வேறு துறைகள் சார்ந்த அபிவிருத்திப் பணிகளின் முன்னேற்றம் மீளாய்வு செய்யப் பட்டது.

# சுற்றுலாத்துறை அமைச்சு செயலாளர் திருமலை விஜயம்



**றொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலையில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வது தொடர்பான தகவல்களை திரட்டுவதற்காகவும் சமூக மட்ட சுற்றுலா அபிவிருத்தி தொடர்பான விடயங்களை அவதானிப்பதற்கவும் சுற்றுலா மற்றும் விமானப்பயண அமைச்சின் அதிகாரிகள் இன்று(14) திருகோணமலைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர் .

இதன் போது S4IG னால் தயாரித்து வழங்கப்பட்ட சுற்றுலா தகவல் மையம் அமைப்பது தொடர்பான இடஆய்வு இடம்பெற்றதுடன் , அகம் நிறுவனத்தினால் S4IG யின் நிதி பங்களிப்புடன் இடம்பெறும் சமூக மட்ட சுற்றுலா குழுக்களையும் பார்வையிட்டனர் .

அத்துடன் குச்சவெளி பிரதேசத்தில் சுற்றுலா அமைச்சு சொந்தமான காணிகளில் இடம் பெறும் அபிவிருத்தியையும் பார்வையிட்டனர் . இக்குழு வில் இலங்கை சுற்றுலா அமைச்சின் செயலாளர் எஸ். ஹெட்டியாரச்சி மற்றும் அதிகாரிகள் உடன் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துசித்தா பி. வன்னியசிங்க, கிழக்கு மாகாண சுற்றுலா பணியக தலைவர் ஹரி மற்றும் முகாமையாளர் ஞானசேகரன் மற்றும் S4IG மாவட்ட முகாமையாளர் எம் .மதியழகன் ,அகம் நிறுவன இணைப்பாளர் பொ. சற்சிவானந்தம் ஆகியோரும் கலந்து கொண்டனர் .

# மாணவர் படையணி அங்குரார்ப்பணம்

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூர் அல் ஹிலால் மத்திய கல்லூரியில் இணைப் பாடவிதானத்தை தழுவிய விசேட செயற்திட்டத்தின் கீழ் க.பொ.த.சாதாரண தர மற்றும் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு மாணவர் படையணி குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாணவரின் கற்றல் நடவடிக்கையுடன் இணைப் பாடவிதான செயற்பாட்டை அடிப்படையாக கொண்டு மாணவர்களுக்கு பல்வகை ஆளுமைகளை விருத்தி செய்யும் பிரதான நோக்குடன் இக் குழு செயற்பட உள்ளது.

கல்லூரி அதிபர் கே.றசீமின் வழிகாட்டலில் மாணவர் படையணி அமைப்பின் வளவாளர் எஸ்.ஏ. பௌமி, உடற்கல்வி ஆசிரியர் ஏ.எச்.வை.அறபாத் , விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஏ.எம். அம்சாத், மாணவர் பாராளுமன்ற பொறுப்பாசிரியர் ஏ.எம். லாபீர் ஆகியோரின் நெறிப்படுததலின் கீழ் மாணவர்களுக்கான பயிற்சிகளும் அளிக்கப் பட்டு வருகின்றன.

# இடைநிறுத்தப்பட்ட கஷ்டப் பிரதேச கொடுப்பனவை வழங்குவதாக உறுதி

## கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர்

**நாவிதன்வெளி தினகரன் நிருபர்**

கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் கடமையாற்றி வந்த அதிபர், ஆசிரியர்களுக்கு கஸ்டப் பிரதேசப்படி என்ற வகையில், மாதாந்த சம்பளத்துடன் கொடுப்பனவு ஒன்று வழங்கப்பட்டு வந்தது.

இக்கொடுப்பனவில் மாற்றம் செய்வதற்காக அப்போதிருந்த மாகாணக் கல்வித் திணைக்களத்தால் பாடசாலைகளை வசதியான பாடசாலைகள், கஸ்டப் பிரதேசப் பாடசாலைகள், அதிகஸ்டப் பிரதேசப் பாடசாலைகள் என மூன்றாக வகைப்படுத்தப்பட்டன. இவ்வகைப் படுத்தலின் கீழ் கஸ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு ரூபா ஆயிரத்தி ஐநூறும், அதிகஸ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு ரூபா இரண்டாயிரத்தி ஐநூறும், விசேட படியாக 2005.01.01 முதல் வழங்கப்பட்டு வந்தது.

இவ்வாறு வழங்கப்பட்டு வந்த இக் கஸ்டப் பிரதேசக் கொடுப்பனவானது மாகாண சபையில் ஏற்பட்ட நிதி நிலைமை காரணமாக 2007ம் ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் 2007 டிசம்பர் வரையான பத்து மாதங்கள் வழங்கப்படாது இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இவ்வாறு இடைநிறுத்தப்பட்ட இக்கொடுப்பனவு 10 வருடங்கள் கடந்தும் இதுவரை ஆசிரியர்களுக்கு வழங்கப்படாது நிலுவையாகவே இருந்து வருகின்றது.

இவ்விடயத்தை கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ. நிஷாமின் கவனத்திற்கு சம்மாந்துறை வலயப் பாடசாலைகளின் அதிபர்கள் கொண்டு வந்ததை அடுத்து, இக்கொடுப்பனவை வழங்குதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

சம்மாந்துறை கல்வி வலயத்திலுள்ள அதிபர்கள், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்களுடனான சந்திப்பொன்று கடந்த வியாளக்கிழமை (10) சம்மாந்துறை அல்மர்ஜான் தேசிய பாடசாலையில், சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சௌதுல் நஜீம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு அதிபர், ஆசிரியர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாணும் விடயத்தில், அதிபர்கள் விடுத்த கேள்விக்கு பதிலளித்தபோதே இக்கொடுப்பனவை வழங்குவதாக, கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் உறுதியளித்தார்.

# கல்முனையில் குரங்குத் தொல்லை



**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களிலும் சமீப காலமாக குரங்குத் தொல்லை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

கல்முனை பிரதேசத்தில் சுற்றித்திரியும் குரங்குகள் இங்குள்ள வீடுகளின் கூரைகளில் ஏறி ஓடுகளை சேதமாக்கிவருவதுடன், வீடுகளில் வைத்திருக்கும் உணவுப் பொருட்களையும் தூக்கிச் செல்கின்றன. அத்துடன் வீதியில் பயணிக்கும் சிறுவர்கள், வயோதிபர்களை தாக்கியும் வருகின்றன. மேலும் பயனுள்ள மரங்களின் காய், கனிகளையும், வீட்டுத்தோட்டச் செய்கையினையும் சேதப்படுத்தி வருகின்றது.

சமீப காலமாக கல்முனை நகர்ப் பகுதியை நோக்கி காட்டு யானைகளும், குரங்குகளும் வருகை தர ஆரம்பித்துள்ளன. இதனால் மக்கள் அச்சமடைந்துள்ளனர். வனவிலங்கு துறையினர் மக்களை தொல்லைப்படுத்தும் குரங்குகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பஸ் - மோ.சைக்கிள் விபத்து; இளைஞன் படுகாயம்





**வெல்லாவெளி தினகரன் நிருபர்**

களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேற்றாத்தீவு பிரதான வீதியில் நேற்று (14) காலை 8.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் சிசிச்சை பெற்று வருகின்றார்.

இலங்கை போக்குவரத்து சபையின் கல்முனை சாலைக்குரித்தான பயணிகள் போக்குவரத்து பஸ்ஸானது பயணிகளை ஏற்றிக்கொண்டு மட்டக்களப்புக்கு புறப்பட்டுக் கொண்டிருக்கையில் தேற்றாத்தீவு பிரதான வீதியில் இவ்விபத்து சம்பவம் இடம் பெற்றுள்ளது. வேகமாக சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் பஸ்ஸுடன் மோதுண்டே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

# மோ.சைக்கிள் மின் கம்பத்தில் மோதி மாணவன் பலி

**திருமலை மாவட்ட விசேட நிருபர்**

கிண்ணியா பொலிஸ் பிரிவு மாஞ்சோலை பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று மின் கம்பத்தில் மோதுண்டு பாடசாலை மாணவர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்,

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் (13) மாலை மாஞ்சோலை சியாரம் பள்ளிவாயல் முன்னால் இடம் பெற்றது.

இச் சம்பவத்தில் கிண்ணியா 03 அகமட் லேன் பகுதியைச் சேர்ந்த, தரம் 09 இல் கல்வி பயிலும் முகம்மது நஸீர் முகம்மது அஸ்ரிப் (வயது 14) என்பவரே உயிரிழந்துள்ளதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது: தந்தை வீதியில் நிறுத்தி வைத்திருந்த மோட்டார் சைக்கிளை இவர் எடுத்துச் சென்று மின் கம்பத்தில் மோதுண்டுள்ளார்.

இவரை கிண்ணியா தள வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார்.

இந் நிலையில் சிகிச்சை பலனின்றி இவர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

# மூதூரில் குறைபாடுகளுடன் இயங்கும் பொழுதுபோக்கு பூங்கா

**தோப்பூர் குறூப் நிருபர்**

மூதூர் பிரதேச சபைக்குட்பட்ட தக்வா நகர் கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட பொழுதுபோக்கு பூங்கா பல்வேறு குறைகளுடன் இயங்குவதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலமாக நாளாந்தம் அதிகளவான பொதுமக்கள் தங்களது குழந்தைகளுடன் பொழுதைக் கழிப்பதற்காக வருகைதரும் நிலையில், அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலையில் இப்பொழுதுபோக்கு பூங்கா அமையப் பெற்றுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் உடைந்துள்ளதாகவும் குடிநீர் இணைப்பு இல்லாததால் குடிநீர் தட்டுப்பாடும், மலசலகூட வசதிகள் இன்மையாலும் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்குவதாக அங்கு வருகை தருவோர் விசனம் தெரிவிக்கின்றனர். இப் பூங்காவின் குறைபாடுகளை உரிய அதிகாரிகள் நிவர்த்தி செய்துதருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மாணவர்களை அரபு கல்லூரிகள் பிழையாக வழிநடாத்துவதில்லை





**பெரியநீலாவணை விசேட நிருபர்**

அரபு கல்லூரிகளில் மாணவர்கள் பிழையாக வழிநடாத்தப் படுகிறார்கள் என்ற பார்வை மாற்று சகோதரர்களுக்குள் காணப்படுகிற்றது. இது தவறான எண்ணப்பாடாகும் என மருதமுனை அந் நஹ்லா அரபுக் கல்லூரியின் தலைவரும் பதில் நீதிபதியுமான சட்டத்தரணி ஏ.எம். பதுறுத்தீன் தெரிவித்தார்.

கல்லூரியின் பழைய மாணவர்கள் ஒன்றுகூடலும் நிருவாகத் தெரிவும் நேற்று (14) நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார் .

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

நான் ஒரு ஹாபிழ் பட்டம் முடித்தவனோ அல்லது மௌலவி பட்டம் முடித்தவனோ கிடையாது. ஆனால் இஸ்லாத்தை படித்துள்ளேன் பல அல் குர்ஆன் மத்ரசாக்கள், அரபு கல்லூரிகளுக்கு சென்றுள்ளேன். ஆனால் எந்த ஒரு அரபுக் கல்லூரிகளிலும் பயங்கரவாதத்தை கற்பிப்பது கிடையாது.

துரதிஸ்டவசமாக 2019ல் நடைபெற்ற ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் இலங்கை வாழ் சகல மக்களும் அச்சத்தில் உறைந்தது உண்மை. அதிலும் குறிப்பாக முஸ்லிம் மக்களும், அரபு கல்லூரிகளை நடாத்தி வருகின்ற நிருவாகத்தினரும் பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுக்க நேர்ந்தது. எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் நடைபெறாமல் நாட்டின் இறைமைக்கு மதிப்பளிக்க வேண்டியது எமது பொறுப்பாகும்.

அரபு கல்லூரிகளின் பாடவிதானங்கள் பாடசாலை கல்வி முறைமையோடு இணைக்கப்பட்டு முன்னெடுக்கப்பட வேண்டும். இலங்கையில் எல்லா மாவட்டங்களிலும் சுமார் 27 ஆயிரம் மாணவர்கள் கல்விகற்று வருகின்றார்கள். புதிய மறுசீரமைப்பினால் அரபுக் கல்லூரிகளின் செயற்பாடுகளையும் மறுசீரமைப்பு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இங்கு கற்பிக்கப்படும் பாடதிட்டங்கள் தொடர்பில் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் இராணுவ உயர் அதிகாரிகளை அழைத்து நாம் தெளிவுபடுத்தியுள்ளோம். ஒழுக்க பண்பாடுகள் நிறைந்த, அடுத்த மதத்தையும் மக்களையும் நேசிக்கின்ற ஒரு சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டியது காலத்தின் கட்டாயமாக மாறியுள்ளது. இதற்கு இந்தக் கல்லூரியின் பழைய மாணவர்களின் பங்களிப்பு அவசியமாகும் என தெரிவித்தார்.



மூதூர் தள வைத்தியசாலையில் கடமையாற்றிய டொக்டர். கே.எம். நிகால் வைத்திய நிர்வாக சேவை பரீட்சையில் சித்தியடைந்து பயிற்சிக்கு செல்வதையிட்டு கௌரவிக்கும் நிகழ்வு மூதூர் தள வைத்திசாலை வைத்திய அத்தியட்சகர் பி.கயல்விழி தலைமையில் இடம்பெற்ற போது. படம்: மூதூர் தினகரன் நிருபர்

# அளவை, நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணிகள் ஆரம்பம்

**கிண்ணியா மத்திய நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் மற்றும் தோப்பூர் ஆகிய இரு பிரதேசங்களிலும் அளவை, நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக திருகோணமலை மாவட்ட அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவின் பொறுப்பதிகாரி பி. ராஜேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இம் மாதம் 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் தோப்பூர் உப பிரதேச செயலகத்திலும் 21, 22, 24 மற்றும் 25 ஆகிய திகதிகளில் மூதூர் பிரதேச செயலகத்திலும் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை அளவை, நிறுவை உபகரணங்களுக்கு முத்திரை இடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இரு பிரதேசங்களிலுமுள்ள கடைகள், கூட்டுறவுச் சங்கங்கள், கமநல சேவைத் திணைக்களங்கள் மற்றும் வங்கிகளில் உபயோகிக்கும் சகல அளவை, நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிட்டு வர்த்தக நடவடிக்கைகளை சட்ட ரீதியாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

முத்திரை இடப்படாது, வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்கள் மீது அளவீட்டு அலகுகள், நியமங்கள் சேவைகள் சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.





அக்கரைப்பற்று றய்யான் சர்வதேச பாடசாலையின் புதிய அதிபராக ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஜாபிர் நியமிக்கப்பட்டுள்ளார். புதிய அதிபருக்கான நியமன கடிதத்தை அக்கரைப்பற்று பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எம்.சித்தி பாத்திமா வழங்கிவைப்பதை காணலாம். படம்: அக்கரைப்பற்று மத்திய நிருபர்

# கற்றாழை செய்கை மூலம் வறுமையை ஒழிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பம்

## இறக்காமத்தில் பரீட்சார்த்த நடவடிக்கை - கிழக்கு ஆளுநர் பிரதம அதிதி

(வரிப்பத்தான்சேனை தெற்கு குறூப் இறக்காமம் தினகரன் நிருபர்கள்)

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு அடிப்படையில் நாட்டை கட்டி எழுப்பும் வேலைத்திட்டத்தின் ஒரு அங்கமாக கற்றாழை செய்கையை அம்பாறை மாவட்டம் முழுவதும் செயற்படுத்தி குறைந்த வருமானமுடைய குடும்பங்களின் வருமானத்தை அதிகரித்து வறுமையை ஒழிக்கும் சிறந்த வேலைத்திட்டமாக இத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அம்பாறை மாவட்ட அரச அதிபர் டி.எம்.எல்.பண்டாரநாயக்க தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் கலந்து கொண்டார்.

கட்சி,இன,மத பேதமின்றி அம்பாறை மாவட்டத்திலுள்ள சிங்கள, தமிழ்,முஸ்லிம் என மூவினத்தவர்களும் செறிந்து வாழும் மூன்று பிரதேச செயலகங்களை தெரிவு செய்து அங்கு வாழும் குறைந்த வருமானமுடைய ஆயிரம் குடும்பத்தவர்களில் பரீட்சார்த்தமாக கற்றாழை பயிரிடும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்க எதிர்பார்ப்பதாக அரசாங்க அதிபர் பண்டாரநாயக்க தெரிவித்தார்.



இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு தேவையான நிதியை சமுர்த்தி வங்கி ஊடாக பெறுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். ஐந்து பேர்ச் காணியில் கற்றாழை செய்கை மேற்கொள்வதன் மூலம் மாதமொன்றிற்கு ரூபா முப்பத்தைந்தாயிரம் வருமானத்தை பெற்றுக் கொள்ள இயலுமானதாக இருக்குமெனவும் தெரிவித்தார்.

இங்கு கருத்துரைத்த ஆளுநர், கிழக்கு மாகாணம் வறுமைக்குட்பட்ட மக்கள் வாழும் மாகாணம், அவர்கள் வறுமையிலிருந்து விடுபட வேண்டும் அதற்கான ஒரு முயற்சியாக அம்பாறை மாவட்டத்தில் பரீட்சார்த்தமாக இவ்வேலைத் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக கூறினார்.

இத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க பயனாளிகளை ஒத்துழைக்குமாறும் வேண்டுகோள் விடுத்தார். அவர் மேலும் கருத்துரைக்கையில்,கற்றாழை தொழிற்சாலை ஒன்றை எதிர்காலத்தில் நிறுவ எதிர்பார்ப்பதுடன் அதனூடாக 300 பேர்களுக்கும் அதிகமான தொழில் வாய்ப்பு ஏற்படுத்தப்படுமெனவும் கூறினார். இறுதியில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கற்றாழை செடிகள் ஆளுநராலும் அதிதிகளாலும் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வுக்கு மாவட்ட விவசாய திணைக்கள அதிகாரிகள், இறக்காமம் பிரதேச செயலாளர், இறக்காமம் பிரதேச சபை தவிசாளர்,மதத் தலைவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



இலங்கைக்கான கனடாவின் உயர் ஸ்தானிகர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் முஷர்ரப் முதுனபீனை நேற்று அம்பாறை மொண்டி விடுதியில் சந்தித்து கலந்துரையாடிய போது. (படம்: அம்பாறை மாவட்ட குறூப் நிருபர்)

# கல்முனை மின் பொறியியலாளர் பிரிவில் மின் துண்டிப்பு

(ஒலுவில் விசேட நிருபர்)

கல்முனை மின் பொறியியலாளர் பிரிவில் அவசர திருத்த வேலை காரணமாக மின் துண்டிப்பு இடம்பெறவுள்ளதாக, இலங்கை மின்சார சபையின் கல்முனை பிராந்திய மின் பொறியலாளர் அறிவித்துள்ளார்.

நாளை புதன்கிழமை (16) நிந்தவூர் மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட பாலமுனை மற்றும் அட்டாளைச்சேனை ஆகிய பகுதிகளில் காலை 08.30 முதல் மாலை 05.00 மணி வரையும் மின் தடைப்படும்.

19ம் திகதி நிந்தவூர் மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட ஒலுவில் கிராமத்தில் காலை 08.30 முதல் மாலை 05.00 மணி வரையும் மின் தடைப்படும்.

26ம் திகதி சம்மாந்துறை மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட அம்பாறை வீதி. வீரமுனை வங்கலாவாடி. ஹிஜ்ராபுரம் ஆகிய பகுதிகளில் காலை 08.30 முதல் மாலை 05.00 மணி வரையும் மின் தடைப்படும்.

28ம் திகதி நிந்தவூர் மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட ஒலுவில். திராய்க்கேனி. நிந்தவூர் ஆகிய பகுதியில் காலை 08.30 முதல் மாலை 05.00 மணி வரையும் மின் தடைப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# யானைகளால் மக்கள் அச்சம்

சவளக்கடை குறூப் நிருபர்)

சேனைக்குடிருப்பு, நற்பிட்டிமுனை பிரதேசங்களை அண்மித்த வயல் பிரதேசங்களில் காட்டு யானைகள் பகல் மற்றும் இரவு வேளையில் கூட்டம் கூட்டமாக வருவதுடன் மக்களின் குடியிருப்புகளை அண்மித்த பிரதேசங்களுக்கு செல்வதன் காரணமாக மக்கள் அச்சத்துடன் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கின்றனர். இதேவேளை கிட்டங்கி ஆற்றினை அண்மித்த குடியிருப்பு பிரதேசத்தில் யானைகள் கூட்டம் கூட்டமாக வருவதினால் அதனை அண்மித்து வாழும் மக்கள் இரவு வேளையில் தனது பிள்ளைகளை உறவினர்களில் வீட்டில் கற்றலுக்காகவும் உறக்கத்திற்காகவும் அனுப்புவதன் காரணமாக பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுவதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சிறுவர்கள் பகலில் கூட்டம் கூட்டமாக யானைகளை காண்பதன் காரணமாக இரவானதும் வீடுகளில் உறங்குவதற்கு தயக்கம் காட்டுவதாகவும் தெரிவிக்கின்றனர். குடியிருப்பு பிரதேசங்களுக்கு அண்மித்த பிரதேசங்களுக்கு வருகை தரும் யானைகளை கட்டுப்படுத்துவதற்கு வனவிலங்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.

# தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பி கலையரசன் கனடா உயர் ஸ்தானிகருக்கிடையில் சந்திப்பு

தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரான தவராசா கலையரசனை இலங்கைக்கான கனடா நாட்டு உயர் ஸ்தானிகர் டேவிட் மெக்கின்னன் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

குறித்த சந்திப்பு அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பகுதியில் உள்ள பாராளுமன்ற உறுப்பினரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் நேற்று (14) முற்பகல் இடம்பெற்றது.

இதன் போது அம்பாறை மாவட்டத்தில் எதிர்வரும் காலங்களில் இடம்பெறும் அபிவிருத்தி திட்டங்கள், அரசியல் நிலைமைகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் குறித்த சந்திப்பு இடம்பெற முன்னர் அப்பகுதியில் பொலிஸாரின் பாதுகாப்பு பாராளுமன்ற உறுப்பினரின் வாசஸ்தலத்தை சுற்றி அதிகளவில் போடப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

குறித்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன்,



அம்பாறை மாவட்டத்திற்கு தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் வழங்கப்பட்டமை தொடர்பில் எமது கட்சிக்கு நன்றி தெரிவித்தார். எதிர்காலத்தில் இம்மாவட்டத்தில் இடம்பெற உள்ள நிலைமைகளை அறிந்து நடவடிக்கை எடுப்பதாக கூறி இருந்தார்.

இதனால் இவர்களுடன் இணைந்து எமது மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு எமக்கு கடப்பாடு உள்ளது.நம்பிக்கை தரக்கூடிய சந்திப்பாக இக்கலந்துரையாடல் இருந்தது. இச் சந்திப்பு எமது மக்களின் எதிர்காலத்தை மிகவும் கட்டியெழுப்பும் என நம்புகின்றேன் என்றார்.

**பாறுக் ஷிஹான்**

# வடிகான்களின் மூடிகளை சீர்செய்தல்

கல்குடா தினகரன் நிருபர்

கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மாவடிச்சேனைப் பிரதேசத்தில் சேதமடைந்து காணப்படும் வடிகான்களின் மூடிகளை மாற்றும் பணிகளை கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் கே.எல்.அஸ்மி மேற்கொண்டு வருகிறார்.

இதன் தொடரில், மாவடிச்சேனை ஜும்ஆப் பள்ளிவாசல் வீதியில் சேதமடைந்து மக்கள் போக்குவரத்துக்கு பெரும் இடைஞ்சலாகவும் ஆபத்தாகவும் காணப்பட்ட வடிகான்களின் மூடிகளை தனியார் வாகனமொன்றின் உதவியுடன் திருத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டது. இதன் போது, சேதமடைந்து காணப்பட்ட மூடிகளுக்குப் பதிலாக புதிய மூடிகள் இடப்பட்டதுடன், மூடிகள் இல்லாமல் காணப்பட்ட பகுதிகளுக்கும் மூடிகள் இடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதனால், இப்பிரதேச மக்கள் பெரிதும் நன்மையடைவதுடன், நாளாந்த தேவைக்கு குறித்த வீதியைப் பயன்படுத்துவோர் பாடசாலை, வங்கி, மின்சார சபை மற்றும் அரச அலுவலகங்கள் வியாபாரஸ்தலங்களுக்கு செல்வோரும் பெரிதும் நன்மையடைவர். மக்களின் நன்மை கருதி முன்னெடுக்கப்பட்ட இப்பணிக்கு பிரதேச மக்கள் நன்றி தெரிவிக்கின்றனர்.

# ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் கைது

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலையில் 580 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவரை நேற்றுமுன்தினம் (13) கைது செய்துள்ளதாக திருகோணமலை போதைப்பொருள் குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சிறிமாபுர,திருகோணமலை பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய ஒருவரே கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சந்தேக நபர் ஹெரோயின் போதைப் பொருளுக்கு அடிமையானவர் என்பதோடு, ஒரு மாதத்திற்கு முன்னர் ஆறு மாதம் சிறைதண்டனை அனுபவித்து விட்டு விடுதலையாகி சென்ற நிலையிலே 580 மில்லிகிராம் போதைப்பொருளுடன் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரை தடுத்து வைத்துள்ளதோடு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளதாக திருகோணமலை போதைப்பொருள் குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி சாரணர்கள் இருவர் ஜனாதிபதி சாரணர் விருதை பெற்றுள்ளனர். இவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் கல்லூரியில் நடைபெற்றது. ஜனாதிபதி சாரணர் விருது வென்ற மாணவர்களான ரஞ்சன் ஸ்ரீமன், விஜயகுமார் டிலுக்ஷன் ஆகிய இருவரையும் படத்தில் காணலாம். (படம்: தம்பலகாமம் நிருபர்)

# நீதி அமைச்சர் அலிசப்ரிக்கு சாய்ந்தமருது பிரஜைகள் குழு வாழ்த்து

(நாவிதன்வெளி தினகரன் நிருபர்)

புதிய அமைச்சரவையில் நீதி அமைச்சராக நியமிக்கப்பட்ட அலிசப்ரிக்கு சாய்ந்தமருது பிரஜைகள் குழு மற்றும் முதியோர் சங்கம் என்பன வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளன.

மேற்படி விடயம் சம்மந்தமாக பிரஜைகள் குழுவின் தலைவரும் ஓய்வுபெற்ற கிராம சேவகருமான ஐ.எம்.மன்சூர் கருத்துத் தெரிவிக்கையில், சாய்ந்தமருது பிரதேசத்தில் 2500 குடும்பங்களில் சுமார் 3500 முதியோர்கள் வாழ்கின்றனர். இவர்களின் சார்பாக நீதி அமைச்சருக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம் எனக்குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், முதியோர்களின் பராமரிப்பு தற்காலத்தில் ஒரு முக்கிய பிரச்சினையாக மேல் எழுந்து வருவதையும் காணமுடிகின்றது. மாற்றமடைந்து வரும் சமூக, பொருளாதார காரணிகளால் விரிவான குடும்பங்கள் மறைந்து தற்காலத்தில் முதியோர்களை பராமரிக்க பிள்ளைகளால் முடியாதுள்ளமை இதற்கான முக்கியமான காரணமாக அமைந்துள்ளது. முதியோர்களின் தேவைகளை கவனிக்கவும், பராமரிக்கவும் புதிய திட்டங்களை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும்.

முதியோர் பகல் நேரங்களில் முதியோர் மத்திய நிலையத்தில் தங்கி மற்றவர்களுடன் உரையாடுதல், பத்திரிகை வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல், சிறிய உள்ளக விளையாட்டுக்களில் ஈடுபடுதல், பூங்காவில் இளைப்பாறுதல், குறுநடைப் பயிற்சி செய்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் தமது சுதந்திரத்தையும், பங்கேற்பையும், தன்னிறைவையும், கவனிப்பையும் உறுதி செய்ய முடியும் எனத் தெரிவித்தார்.

# மதிப்பீடுகள் ஆரம்பம்

நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்

கொவிட் 19 காரணமாக விடுபட்டிருந்த கல்முனை வலய பாடசாலை மதிப்பீடுகள் நாளை முதல் வலயக் கல்விப் பணிப்பாளர் புவனேந்திரன் மேற்பார்வையில் ஆரம்பமாகவுள்ளன. கல்வி முகாமைத்துவத்திற்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் முகம்மட் பௌஸ் தலைமையில் வலய கேட்போர் கூடத்தில் நேற்று (14) இடம்பெற்ற கல்விசார் உத்தியோகத்தர்களுக்கான.கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேறியுள்ளது.கல்விசார் உத்தியோகத்தர்கள் இருபிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு பொறுப்பாக முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ரி.எல். ஹபீபுல்லாஹ் செயற்றிட்ட உத்தியோகத்தர் முகம்மட் மஹ்ரூப் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.







மட்டக்களப்பு, மயிலெம்பாவெளி விபுலானந்தபுரம் புனித யோசேப்வாஸ் ஆலயத்தின் வருடாந்த திருவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. கடந்த 04 ஆம் திகதி திருவிழா நிகழ்வுகள் ஆரம்பமாகின திருவிழா கூட்டுத் திருப்பலியினை மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு யோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுப்பதனையும், திருப்பலியில் கலந்து கொண்ட பக்தர்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படம் ; கல்லடி குறூப் நிருபர்)

கிறிஸ்தவ மஞ்சரி

# வரலாற்றுச் சிறப்புமிக்க தல்கஸ்வலை ஆலயத்தில் புனித அன்னை தெரெசாவிற்கு திருவிழா

இலங்கையில் அன்னை தெரெசாவிற்கான முதல் ஆலயம் காலி மறைமாவட்டத்தில் உள்ள தல்கஸ்வலை என்றும் தேயிலைத் தோட்டத்தில் அமைந்துள்ளது. கல்கத்தா தெரெசா பெயரில் கட்டப்பட்ட இந்த ஆலயத்தை 2012 ஆம் ஆண்டு தை மாதம் 24 ஆம் திகதி காலிமறைமாவட்ட ஆயர் மேதகு ரேமன்ட் விக்ரமசிங்க ஆண்டகை திறந்து வைத்தார்.

2010 ஆம் ஆண்டுவரை இவ்வூரில் ஆலயம் எதுவும் இருக்கவில்லை. இங்கு வாழ்ந்த 43 கத்தோலிக்கக் குடும்பங்களும் மரநிழல்களிலும் தேயிலைக் கிடங்குகளிலும் செப வழிபாடுகளுக்காக ஒன்று கூடினர்.

2010ஆம் ஆன்டு புதிய ஆலயம் கட்டமுயற்சிகள் எடுக்கப்பட்டபோது தல்கஸ்வல மக்கள் ஒருமித்த குரலில் ஏழைத் தோட்டத் தொழிலாளிகளாகிய எங்களுக்கு ஏழைகளின் தாய் அன்னை தெரெசாதான் பாதுகாவலியாக இருக்கவேண்டுமென்று கூறினார்கள்.

அருளாளர் பட்டம் பெற்ற ஒருவரைப் பாதுகாவலியாக வைப்பதைவிட புனிதர் ஒருவரை வைக்கலாமே என்ற விமர்சனங்கள் வந்தபோதுகூட அம் மக்கள் தங்கள் கருத்தில் உறுதியாக இருந்தார்கள் தேயிலைத் தோட்ட நிர்வாகத்தால் ஆலயம் கட்ட காணி தரப்பட்டது.

ஒரு மண்மேட்டின் மேல் பகுதிதான் அந்த இடம். அந்த பகுதியில் ஒரு பழைய பங்களா இருந்தது. புதர் மண்டிக்கிடந்த அந்த இடம் கருநாகம் மலைப்பாம்பு போன்ற விஷ ஜந்துக்களின் புகலிடமாக இருந்தது.

கத்தோலிக்க மக்களின் கடுமையான உழைப்பால் அவ்விடம் புனமைக்கப்பட்டு 2010 ம் ஆண்டுகட்டுமானப் பணி கள் ஆரம்பிக்கப்பட்டது.4 3 கத்தோலிக்கக் குடும்பங்களும், இந்து சமய மக்களும் இரவு பகலென்று பாராமல் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டனர்.


13 ஆம் திகதி இடம்பெற்ற கொடியேற்ற நிகழ்வு

தறபோது நீரோடைக்கு அருகில் தேயிலை மற்றும் செம்பனை தோட்டத்திற்கு மத்தியில் இயற்கை எழில் கொஞ்சும் சூழலில் இவ்வாலயம் அமைந்துள்ளது.கல்கத்தாவில் உள்ள புனித தெரெசாவின் கல்லறையில்மட்டுமல்ல இவ்வாலயத்திலும் பல புதுமைகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

வரலாற்று ச் சிறப்புமிக்க இவ்வாலயத்தின் திருவிழா இம்மாதம் ஆகஸ்ட் 13 ஆம் திகதி கொடியேற்றத்துடன் தொடங்கி எதிர்வரும் 20ஆம் திகதியன்று காலை 9.30 மணிக்கு காலி ஆயர் மேதகு ரேமண்ட் விக்ரமசிங்க ஆண்டகையின் தலைமையில் திருவிழா கூட்டுத் திருப்பலி நிறைவேற்றப்படவுள்ளது.

1946 செப்டம்பர் 10 ஆம் திகதி அருட்சகோதரியாக இருந்த அன்னை தெரெசா வருடாந்த தியானம் செய்வதற்காக டார்ஜிலிங் நோக்கி பயணம் செய்தார்.

பயணத்தின் போது சேரிகளுக்குச்செல் சேவைகளைச்செய் என்று குரல் அன்னைதெரெசாவின் இதயத்தைத் தொட்டது.கல்விப் பணிக்கு முக்கியத்துவம் கொடுத்த லொரெட்டொ சபையை விட்டு 1948 ஆகஸ்ட் மாதம் விலகிசே ரிவாழ் மக்களுக்கும் ஏழை எளியோருக்கும் முக்கியத்துவம் தரும் அன்பின் பணியாளர் சபையை அதே ஆண்டில் தொடங்கினார்.



அன்னை தெரெசா தமது முப்பத்து மூன்றாம் வயதில் புதிய சபையை தொடங்கினார். 1949 ஜனவரி மாதம் மொட்டிஜில்லில் ஒரு மருத்துவ மனையையும் ஒரு பள்ளிக்கூடத்தையும் திறந்தார். அவரது முதல் வகுப்பறை மரத்தின் கீழ் அமைந்திருந்தது. மணல் தரை தான் கரும்பலையாக இருந்தது.இருப்பினும் வாழ்வில் முதல் முறையாக பள்ளிக்கூடம் செல்கிறோம் என்ற மகிழ்ச்சி ஏழைக் குழந்தைகளின் உள்ளத்தில் நிரம்பி வழிந்தது.

1950 களில் கல்கத்தா நகர் தெருக்களில் வீடற்ற அனாதைகள் ஆயிரக்கணக்கில் வாழ்ந்தார்கள்.இப்படிப்பட்ட தெரு வாசிகள் இறந்தால் அடக்கம் செய்யக் கூட எவரும் இருக்கவில்லை. அவர்களின் உடல்கள் மிருகங்களுக்கும் இரையாகின.

இதைக்கண்ட அன்னை தெரெசா நோயாளர்களையும் இறக்கும் தருவாயில் இருப்போரையும் பாதுகாக்க விரும்பினார். 1952 ஆகஸ்ட் 22 ஆம் திகதி காளிகட் பகுதியில் கைவிடப்பட்டோருக்காக 'தூய இதயம்' என்னும் இல்லத்தை தொடங்கினார்.

அந்த காலகட்டத்தில் தெருவில் குழந்தைகளை வீசும் அவலம் இருந்தது வீடுகளுக்கு உள்ளேயும் பல குழந்தைகள் அனாதைகளாக்கப்பட்டனர்.இப்படிப்பட்ட குழந்தைகளுக்காக 'சிசு பவன்' என்னும் இல்லத்தைத் திறந்தார்.தொழுநோயளர்களின் சிறப்புப் பராமரிப்பிற்காகவும் இல்லங்கள் திறக்கப்பட்டன.

அன்னைக்கு 73 வயது இருக்கும் போது ஒருநாள் படுக்கையில் இருந்து விழுந்து வலியால் துடித்துக்கொண்டிருந்தார் . எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கும் என்று நினைத்து மருத்துவ மனையில் சேர்த்தனர் . பரசோதனைகளுக்குப் பின் கடுமயான மாரடைப்பு ஏற்பட்டது தெரிய வந்தது. அடுத்த சில வருடங்களில் பலமுறை அவருக்கு மாரடைப்பு ஏற்ப்பட்டது இருந்தும் அன்னை தன் பணியை நிறுத்தவும் இல்லை ஓய்வெடுக்கவும் இல்லை .தன் பணியை உலகம் முழுவதும் கொண்டு சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டார்.1997 ம் ஆண்டு செப்டம்பர் 5 ம் நாள் இறைவனடிசேர்ந்தார். அவர் , இறக்கும் போது அவருக்கு வயது 87.

மண்ணகத்தில் ஓய்வின்று அன்புப் பணி செய்த அன்னை தெரெசா விண்ணகம்சென்றும் பல்வேறு அற்புதங்களை ஏழை எளிய மக்களுக்கு செய்து வருகிறார்.

அருட்பணி
அருண் ரெக்ஸ் ...

# பரிசுத்த வேதாகமம் கூறும் மன்னிப்பின் மகத்துவம்

## "நன்றி செலுத்தும் உள்ளம் எளிதில் எவரையும் மன்னிக்கும்"

மன்னிப்பதற்கு மிக எளிய வழியைக் காட்டுகிறது பரிசுத்த வேதாகமம். பரிசுத்த வேதாகமத்தின் நீதித் தலைவர்கள் நூலில் வரும் சிம்சோன் நிகழ்வை வாசிக்கும்போதெல்லாம் நமக்குள் ஒரு கேள்வி எழுவதுண்டு.

சிம்சோன் தன்னுடையவாழ்வில் ஒரே ஒரு பெண்ணைக் காதலிக்கிறார். அந்தப் பெண் அவரை எதிரிகளிடம்விற்றுவிடுகின்றார். தன் வாழ்வில் ஒரே ஒரு முறை நிம்மதியாகத் தூங்கும்சிம்சோனுக்கு அந்த நொடி மடித்தூக்கமே இறுதித் தூக்கமாகிப் போகிறது.


ஒருவேளை, சிம்சோன் மீண்டும் தெலீலாவைச் சந்தித்தால் அவரைமன்னித்திருப்பாரா? தெலீலா அவரை எப்படி எதிர்கொள்வார்? இப்படி நாம் பல கேள்விகளை எழுப்ப முடியும்.

தன்னை ஏமாற்றி தன்னிடமிருந்துஆசியைப் பறித்துச் சென்ற யாக்கோபை ஈசாக்கு மன்னிப்பாரா? தன் மனைவியோடு உறவுகொண்டதோடு தன் உயிரையும் எடுத்துக் கொண்ட தாவீதை உரியா மன்னிப்பாரா? இயேசுகூட, தன் இறுதித் துன்பத்தின்போது 'தந்தையே இவர்களை மன்னியும். தாங்கள்செய்வது இன்னதென்று அறியாமல் செய்கிறார்கள்' (காண். லூக் 23:34) என்றுசொல்கிறாரே தவிர, 'நான் இவர்களை மன்னிக்கிறேன்' என்று அவர் சொல்லவில்லையே? அது ஏன்?

கடந்த ஞாயிறு நற்செய்தி வாசகத்தில் (மத் 18:2135), நான் எத்தனை முறைமன்னிக்க வேண்டும் என பேதுரு இயேசுவிடம் கேட்கிறார். ஆக, மன்னிக்கும்உள்ளம் பேதுருவுக்கு இருக்கிறது. எத்தனை முறை என்பதுதான் அவரது கேள்வியாகஇருக்கிறது.

'ஆண்டவரே, நான் மன்னிக்க வேண்டுமா?' அல்லது 'என்னால் மன்னிக்கமுடியுமா?' என்ற கேள்வியை நாம் இப்போது எழுப்புகிறோம்.

நம்மால் ஏன் மற்றவர்களை மன்னிக்க முடிவதில்லை? மூன்று காரணங்கள்: நினைவாற்றல் மனநலம் குறைந்தவர்கள் பேறுபெற்றவர்கள் என்றே நான் நினைப்பேன். ஏனெனில், அவர்கள் எதையும் நினைவில் வைத்துக்கொள்வதில்லை.தன்னைக் கடிக்க வரும் நாய்மேலும் அவர்கள் கல்லெறிவதில்லை. தன்னைக் கேலிபேசிய சிறுவர்களையும் அவர்கள் பழிதீர்ப்பதில்லை. நினைவு இல்லாமல் இருப்பதுநலம் பல நேரங்களில்.



நீதியுணர்வு நான் கஷ்டப்பட்டு ஒரு வேலைசெய்கிறேன். அந்த வேலையை யாராவது சீர்குலைத்துவிட்டால் என்னால் மன்னிக்க இயலாமல் போய்விடுகிறது. நான் யாருக்கும் தீங்கு நினைக்கவில்லைஆனால், மற்றவர்கள் எனக்கு தீங்கு இழைக்கிறார்கள். இது நீதியல்லவே! என்ற கேள்விமன்னிப்புக்குத் தடையாக இருக்கிறது.

நொறுங்கு நிலை உணராமை தன்நொறுங்குநிலையை உணர்ந்த ஒருவர் அடுத்தவரை எளிதாக மன்னித்துவிடுவார். பேருந்து நிறுத்தம் ஒன்றில் மதுபாட்டில்கள் நிறையச் சிதறிக்கிடக்கின்றன. அங்கே நிற்பவர்களில் ஒருவர், அதைச் செய்தவர்களை சும்மா விடக்கூடாது!எனப்பொங்குகிறார். இன்னொருவரோ, 'பாவம் ஒதுங்க இடம் இல்லாம இங்க உக்காந்துகுடிச்சிருக்காங்க!' எனப் புன்முறுவல் பூக்கிறார். இரண்டாமவர், தன்வலுவின்மையை உணர்ந்தவராக இருப்பதால் மற்றவரின் நொறுங்கு நிலையை அவரால்ஏற்றுக்கொள்ள முடிகிறது.

நற்செய்தி வாசகத்தில் வரும் பணியாளர் தன் சக பணியாளரை மன்னிக்கஇயலாமல் போகக் காரணம் மேற்காணும் மூன்றாவது காரணமே. தன் கடன்மன்னிக்கப்பட்டவுடன் தன் வலுவின்மையை மறந்துவிடுகிறார். தானே அரசன்என்பதுபோல நினைத்து மற்றவனது கழுத்தை நெரிக்கிறார்.

முதல் வாசகம் நம் நீதியுணர்வை நெறிப்படுத்துகிறது. அதாவது, நான்வெஜிடேரியன் என்பதற்காக மாடு என்னை முட்டாது என நினைப்பது தவறு.

நான்நீதியோடு நடந்தாலும் எனக்கு அநீதி நடக்காது என நினைப்பதுஅப்படிப்பட்டது தான். அநீதியை மன்னித்துவிடுமாறு அழைக்கிறார் ஆசிரியர்.

மிக எளிய வழியைக் மன்னிப்பதற்கு காட்டுகிறது முதல் வாசகம்: 'உன் முடிவைநினைத்துப் பார்.' ஒவ்வொரு நாளையும் இறுதி நாளாக நினைத்து வாழ்பவர்கள் எளிதாக மன்னித்து விடுவர். ஏனெனில், 'நாளை பழிவாங்கலாம்' என்று அவர்கள்கோபத்தைத் தக்கவைப்பதோ, அல்லது 'நாளை மன்னிக்கலாம்' என மன்னிப்பைத்தள்ளிப்போடுவதோ இல்லை.

புனித பவுல் இரண்டாம் வாசகத்தில் இன்னொரு வழியைக் கற்றுக்கொடுக்கிறார்: 'எனக்கென வாழாமல் ஆண்டவருக்கென வாழ்வது.' ஆக, என்னை எவரும் இழிவுபடுத்தவோ, பெருமைப்படுத்தவோ இயலாது. ஏனெனில், எதையும் நான் பற்றிக்கொள்வதில்லை.ஏனெனில்நான் எனக்குரியவன் அல்லன். நன்றிகூறும் உள்ளம் எளிதில் யாரையும் மன்னித்துவிடும். ஆகையால்தான், 'என் உயிரே! ஆண்டவருடைய கனிவான செயல்கள் அனைத்தையும் மறவாதே!' என்கிறார் திருப்பாடல் ஆசிரியர் (திபா; 103).

அருட்பணி
இயேசு கருணாநிதி...

# அன்பின் சின்னமான இயேசு கிறிஸ்துவின் சிலுவை

இயேசு கிறிஸ்துவின் மரணத்தால் சிலுவை உலக வரலாற்றில் புனித சின்னமாக முதலிடம் பெறுகின்றது. முன்பு குற்றவாளிகளின் அவமானச் சின்னமாக இருந்த சிலுவை இப்போது மானிடரின் ஈடேற்றத்திற்கு காரணமாக அமைந்துள்ளது.

கிறிஸ்துவின் மரணத்திற்கு முன் சிலுவை என்பது தாங்க முடியாத கொடுமையான தண்டனையை நிறைவேற்றும் கருவி. ஒரு கள்வனுக்கோ, ஒரு கொலைப்பாதகனுக்கோ அல்லது ஒரு கலகக்காரனுக்கோ கொடுக்கப்பட்டு வந்து அதிகபட்சமான தண்டனை சிலுவையில் மரிக்கச் செய்வது.

பரிசுத்த விவிலியத்தின் உபாகமத்தில் மரத்தில் தூக்கப்பட்டவன் எவனும் சபிக்கப்பட்டவன் என குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது ஒரு பயங்கரமான சாவு. சிலுவை மரணம் மகா ஈனமானது. அது மாபெரும் பாவிக்கு விதிக்கப்பட்ட தண்டனை. அது தேவ கோபத்தினால் உண்டாகும் என்பது அக்காலத்துக் கொள்கை.

ஏற்கனவே செய்து வைக்கப்பட்டிருக்கும் சிலுவை குற்றவாளிகளுக்குத் தண்டனை விதிக்கப்பட்டதும் அந்த சிலுவையை அவனே சுமந்துகொண்டு செல்லவேண்டும். அந்த காட்சியைப் பார்க்கும் ஜனங்களின் கேவலமான விமர்சனங்கள், போலிப் பேச்சுகள், தண்டனையை நிறைவேற்றக் காத்திருக்கும் போர்ச் சேவகரின் சித்திரவதைகள் சவுக்கடிகள் இவையெல்லாம் அவன் அனுபவித்துத் தீரவேண்டும்.

குற்றவாளிகளின் தண்டனையை உடனே சிலுவையிலறைந்து நிறைவேற்றுவதை விட இவைகளை அனுபவிக்கும் காட்சி மிகமிகக் கொடுமையானது.


ஆனால் இயேசுவின் மரணத்திற்குப் பின் அதுவரை நிலவி வந்த சிலுவையின் இழிநிலை மாற்றப்பட்டு அது ஒரு அன்பின் சின்னமாக பாவிகளை இரட்சிக்கும் கிறிஸ்து இயேசுவை நினைவு கூறும் சின்னமாக உலக வரலாற்றில் முக்கியமானதொரு அழியா இடத்தைப் பெற்றுள்ளது.



இயேசு கிறிஸ்து தாம் சிலுவையில் ஒப்புக்கொடுக்கப்படும் முன்பு அவர் தாமே தமது சீடர்களுக்கும் மக்களுக்கும் அறிவித்த ஞான அர்த்தத்தை நாம் அறிந்து கொள்வது மிக அவசியமான தொன்றாகும். சிலுவை என்பது பரம பிதாவின் சித்தத்தை நிறைவேற்றத் தனக்குக் கொடுக்கப்பட்டக் கருவி என்று இயேசு கிறிஸ்து எண்ணினார்.

ஆகவே தமது அன்றாடப் பணியை பரம தந்தையின் சித்தத்திற்கேற்ப செய்து வந்த போது சிலுவை தண்டனை வந்து சேர்ந்தது. சிலுவையைக்கண்டு அவர் பின்வாங்கவில்லை. தன் சீடர்களைப் பார்த்து "ஒருவன் என் பின்னே வர விரும்பினால் தன்னைத்தான் வெறுத்துத் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்." என்றார். (மத் 16:24). மாற்கு 8:34ல் இயேசு தன் சீடர்களுக்கு மட்டுமல்ல. எதிரே மக்களையும் பார்த்து இதே கருத்தை வலியுறுத்திப் பேசுகிறார். மேலும் ஒருவன் இயேசுவிடம் வந்து 'நல்ல போதகரே நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ள நான் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டான்.

இயேசு அவனைப் பார்த்து அவனிடத்தில் அன்பு கூர்ந்து ஒரு குறையை அவனிடத்தில் கண்டார். 'உனக்குண்டானவைகளையெல்லாம் விற்று தரித்திரருக்குக் கொடுத்துவிட்டுப் பிறகு சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றிவா" என்றார். அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனானபடியால் அவர் சொன்னதை அவன் ஏற்றுக்கொள்ளவில்லை (மாற்கு 10:21).



சிலர் சிலுவைக்குப் பயப்படுவார்கள் ஆனால், 'சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. ஆனால் இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது" (1கொரி 1:18) பரிசுத்த அப்போஸ்தலனாகிய பவுலுக்குக் கிடைத்த சிலுவை, 'நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையும் குறித்து மேன்மைப் பாராட்டாதிருப்பேனாக" (கலா 6:14). (ஸ)

# வவுனியா பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டத்தில் ஊடகவியலாளர்களுக்கு இடம் ஒதுக்கப்படவில்லை

வவுனியா நிருபர்



வவுனியா பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் ஊடவியலாளர்களுக்கு பிரத்தியேக இடம் ஒதுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கூட்டம் நேற்றுக் காலை 9.45 மணியளவில் வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் நா.கமலதாசன் தலைமையில் இடம்பெற்றது. பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்திற்கு வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கு . திலீபன் தலைமை தாங்கி கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார் .

வவுனியா பிரதேசத்தில் கடமையாற்றும் திணைக்களத்தின் அதிகாரிகள், அரச ஊழியர்கள் எனப்பலரும் கலந்துகொண்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், காதர் மஸ்தான், முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் இணைப்பாளர் முத்துமுகம்மது, வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை தலைவர் து.நடராஜசிங்கம், நகரசபை தலைவர் இ.கௌதமன் மற்றும் திணைக்கள தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டபோதும் செய்தி சேகரிப்பதற்கு சென்ற பிரதேச செய்தியாளர்களுக்கு பிரத்தியேகமான இடம் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. கடந்த காலங்களில் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டங்களில் ஊடகவியலாளர்களுக்கு என இடம் ஒதுக்கப்பட்டபோதும் வவுனியா பிரதேச செயலாளரால் இம்முறை இடம்பெற்ற அபிவிருத்திக்குழு கூட்டத்தில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

# இ.போ.ச தலைவர் மன்னார் சாலைக்கு திடீர் விஜயம்: பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

மன்னார் குறூப் நிருபர்



இலங்கை அரச போக்குவரத்து சேவையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க நேற்று முன்தினம் மன்னார் அரச போக்குவரத்து பிரதான சாலைக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

வட மாகாண போக்குவரத்து சாலைகளில் காணப்படுகின்ற குறைபாடுகள் மற்றும் நிர்வாக சிக்கல் தொடர்பான விடயங்களை ஆராய்வதற்காக இவ் விஜயம் அமைந்திருந்தது.

இவ் விஜயத்தின் போது மன்னார் போக்குவரத்து சாலையின் குறைபாடுகள் மற்றும் தேவைகள் தொடர்பாக மன்னார் போக்குவரத்து சாலை முகாமையாளரினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது

மன்னார் போக்குவரத்து சாலைக்கான பஸ்களின் எண்ணிக்கை குறைவாக காணப்படுவதாகவும் அலுவலகம் மற்றும் ஊழியர்களுக்கான நிர்வாக தேவைகள் தொடர்பாகவும் தற்போது தற்காலிகமாக கடமையாற்றும் ஊழியர்களின் நிரந்தர நியமனம் வழங்குதல் தொடர்பாக கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து மன்னார் சாலை முழுவதுமாக ஆராய்ந்த தவிசாளர் பழுதடைந்துள்ள நிலையில் காணப்படும் பஸ்களை பயன்படுத்துவது தொடர்பாகவும் பஸ்களுக்கான வர்ணம் பூசும் செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பணித்திருந்தார்.



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முஸ்லிம் சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஏ.எல்.எம். உவைஸ் ஹாஜியாருக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அட்டாளைச்சேனை செயலாளர் எஸ். எல்.ஏ. ரஸ்மி நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டு தெரிவித்த போது பிடிக்கப்பட்ட படம் படம். சில்மியா யூசுப்

# தமிழரசு கட்சியின் புதிய இளைஞரணி

வவுனியா நிருபர்

வவுனியா மாவட்ட தமிழரசு கட்சியின் இளைஞரணி தெரிவு கட்சி அலுவலகமான தாயகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

அதன்படி இளைஞரணியின் புதிய தலைவராக சி.சிவதர்சனும், செயலாளராக அ.அன்ரணி றெக்சனும், பொருளாளராக ச.பத்மசீலனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

உபதலைவராக சி.வினோத், உப செயலாளராக கு.ரஞ்சித், பிரதித்தலைவர்களாக, நவநீதன், இந்திரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இளைஞரணியின் அமைப்பாளராக சஜீவன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அத்தோடு பிரதேச அமைப்பாளர்கள் நான்கு பேரும் நிர்வாக சபை உறுப்பினர்கள் 10 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## விலைமனு அழைத்தல்

## லேக்ஹவுஸ் உணவகம்

**இலக்கம் LPA/06/2020**

சுமார் 1500 ஊழியர்களிற்கு உணவு பானங்களை வழங்கும் லேக்ஹவுஸ் உணவகத்தை நடைமுறைப் படுத்துவதற்காக அனுபவமுள்ள உணவக நடாத்துநர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

உணவக நடாத்துநர்களின சேவையின் தரத்தின் அடிப்படையில், உணவக நுகர்வோரின் எண்ணிக்கை தங்கியுள்ளது.

உணவகமானது, பகல் இரவு திறந்து வைக்கப்படுவதுடன் (24 மணி) தேர்ந்தெடுக்கப்படும் உணவக நடாத்துநர். சிறந்த உயர்தரமான உணவு பானங்களை குறிப்பிடப்பட்ட விலைக்கு வழங்குதல் வேண்டும்.

சமையலறை உபகரணங்கள், தளபாடங்கள், மின்சாரம், நீர் மற்றும் மாதமொன்றிற்கு (37.5KG) கேஸ் 20 சிலிண்டர்கள் வீதம் வழங்கப்படுவதுடன், கூலி அறவிடப்படமாட்டாது.

2020 செப்டெம்பர் 07 முதல் 18ஆம் திகதி வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.30 வரை த அயோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட்டின் பெறுகைப் பிரிவில் மீளளிக்கப்படும் ரூபா 5000/- மற்றும் மீளளிக்கப்படாத ரூபா 1000/- இற்கான தொகையை வைப்புச் செய்து இதற்கான நிபந்தனைகளுடன் கூடிய விலைமனு விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள், முத்திரையிடப்பட்ட தபாலுறையொன்றில் சேர்த்து, 'உணவகத்திற்கான கேள்வி கோரல்' என்று தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு 'தலைவர், பெறுகை, த அஸோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட்' என்ற முகவரிக்கு 21 செப்டெம்பர் 2020 அன்று பி.ப. 2.30 மணிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்க்கலாம்.

2020 செப்டெம்பர் 21 அன்று பி.ப. 2.30 மணிக்கு சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற முகவர்களின் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்டு உடனடியாகவே அவை திறக்கப்படும்.

எவ்வாறாயினும் எவ்வித காரணங்களையும் முன்வைக்காமல் ஏதேனும் விலைமனுவொன்றை அல்லது அனைத்து விலைமனுக்களையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை, 'த அஸோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட்டிற்கு' உரித்தாகும்.

**தலைவர் - பெறுகை**
**'த அஸோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட்'**
**இல. 35, லேக்ஹவுஸ்,**
**D.R. விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு - 10**

**விபரங்களிற்கு: 2429422/ 2429451**

## பெறுகை அறிவித்தல்

## அரசாங்க அழுத்தக திணைக்களம்

N - 66

பின்வரும் உருப்படிகளின் வழங்கலுக்காக இலங்கையிலுள்ள வழங்குனர்களிடமிருந்து இலங்கை, அரசாங்க அழுத்தக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் விண்ணப்பங்களை கோருகின்றார்.

1. **Plate Dot Reader for Plate Making Section:**

**விலைமனுவை மூடும் திகதி** :- 2020.10.06 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு
**விலைமனு குறிப்பீட்டு இல.** :- SCP05/P.D/R/NCB08/2020-03
**ஆவணக் கட்டணம் (மீளளிக்கப்படாதது)**:- 1,000 ரூபா

2. **Large Format Digital Printing Machine for Sticker Printing:**

**விலைமனுவை மூடும் திகதி** :- 2020.10.06 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு
**விலைமனு குறிப்பீட்டு இல.** :- SCP05/D.P. Machine/NCB05/2020-14
**ஆவணக் கட்டணம் (மீளளிக்கப்படாதது)** :- 3,500 ரூபா
**விலைமனு முன்னோடிக் கூட்டம்** :- 2020.09.24 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு

3. **Digital Machine for Texture Paper Printing:**

**விலைமனுவை மூடும் திகதி** :- 2020.10.08 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு
**விலைமனு குறிப்பீட்டு இல.** :- SCP03/D.M.T.P./NCB027/2019-29
**ஆவணக் கட்டணம் (மீளளிக்கப்படாதது)** :- 3,500 ரூபா
**விலைமனு முன்னோடிக் கூட்டம்** :- 2020.09.29 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு


இந்த அறிவித்தலுக்கு உரித்தான விண்ணப்பமானது உத்தியோகபூர்வ வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் ஒவ்வொரு விண்ணப்பத்துடன் மீளளிக்கப்படாத கட்டணத்துடன் கொழும்பு-08, கலாநிதி டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 118 ஆம் இலக்கத்திலுள்ள அரசாங்க அழுத்தக திணைக்கள வழங்கல்கள் பிரிவினால் வழங்கப்படும். மேலே வழங்கப்பட்டுள்ள மூடும் தினத்திற்கு முன் தினம் வரையும் வழங்கல்கள் பிரிவிலிருந்தே பி.ப. 2 மணிக்கு முன்பதாக விண்ணப்பங்கள் வழங்கப்படும்.

திணைக்கள கேட்போர் கூடத்தில் மேலேயுள்ள நாட்களில் (மு.ப. 10 மணிக்கு) விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.

மேலதிக விபரங்களை வேலை நாட்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 4.15 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம்.

**கங்காணி லியனகே,**
**தலைவர், பெறுகைக் குழு,**
**அரசாங்க அழுத்தக திணைக்களம்,**
**118, கலாநிதி டனிஸ்டர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-08.**
**....................**
**தொலைபேசி/ தொலைநகல்:- 011-2698653**
**இணையதளம்:- www.documents.gov.lk**


**13.09.2020 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 588,854**
**பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 24,748,720.00**
**ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 1,000,000.00 பரிசுகள் 02 ரூ. 100,000.00 பரிசுகள் 26**












# ஹற்றன் பிரதேச ரயில் பாதைகளில் பாதுகாப்பற்ற வீதிக் கடவைகள்?

## உயிர் ஆபத்திலிருந்து பாதுகாக்க மாணவர்கள் உட்பட பொதுமக்கள் கோரிக்கை





**ஹற்றன் சுழற்சி நிருபர்**

ரயில் மோதுண்டு உயிர் தேசங்கள் ஏற்படும் அபாயமிருப்பதால் அதிலிருந்து தங்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுக்குமாறு ஹற்றன் பகுதி பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஹற்றன் ரயில் நிலையத்திலிருந்து சுமார் 200 மீற்றர் தொலைவில் பாதுகாப்பு கடவைகள் இருக்கின்றபோதிலும் அவற்றை செயற்படுத்துவதற்கு ஊழியர்கள் இன்மையாலும், உரிய நேரத்தில் எச்சரிக்கை சமிக்ஞைகள் விடுக்கப்படாததாலுமே இவ்வாறானதொரு அபாயநிலை ஏற்பட்டுள்ளது என்று நாளாந்தம் ரயில் வீதியை கடந்து பயணிப்பவர்கள் கருத்து வெளியிட்டனர்.

ரயில் பாதையில் ஏற்படும் விபத்துகளை தடுத்து, மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதத்தில் இப்பகுதியில் இருபுறத்திலும் பாதுகாப்பு கடவைகள் அமைக்கப்பட்டு, ரயில்வரும் வேளைகளில் அவற்றை உரியவகையில் செயற்படுத்துவதற்கும், எச்சரிக்கை சமிக்ஞைகளை விடுப்பதற்கும் ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்களுக்கான கொடுப்பனவு ஹற்றன் பொலிஸாரால் வழங்கப்பட்டு வந்தது.



நேர அட்டவணையின் பிரகாரம் மூவர் சேவையில் ஈடுபட்டு வந்தனர், குறைந்தபட்சம் இருவராவது சுழற்சி முறையில் பாதுகாப்பு கடவை பகுதியில் கடமை புரிந்தனர். எனினும், கடந்த இரு வாரங்களாக ஒருவர் மாத்திரமே பணிபுரிந்து வருகிறார் எனவும், காலை 6 மணிக்கு வந்து விட்டு பிற்பகல் 2 மணிக்கு அவரும் சென்று விடுவதால் பாதுகாப்பற்ற சூழ்நிலை உருவாகியுள்ளது.

பாடசாலைவிட்டதும் மாணவர்களும், ஆசிரியர்களும், சாரதிகளும் அச்சத்துக்கு மத்தியிலேயே வீதியை கடந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.


குறிப்பாக பிற்பகல் 2.35 இல் இருந்து மறுநாள் அதிகாலை 5.10 வரை அவ்வீதியை ஊடறுத்து 8 இற்கும் மேற்பட்ட ரயில்கள் செல்கின்றன. எனினும், கடவையை மூடி பாதுகாப்பு வழங்குவதற்கு ஊழியர்கள் இன்மையால் இரவு நேரங்களில் விபத்துகள் ஏற்படக்கூடிய அபாயம் இருப்பதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

" பகல் வேளையாக இருந்தால் கூட வீதியில் ஆள் நடமாட்டம் இருக்கும், சத்தம்போட்டாவது எச்சரிக்கை விடுத்துவிடலாம், இரவு நேரங்களில் பயணிக்கும் வாகனங்கள் மற்றும் பாதசாரிகளுக்குதான் சிக்கல்" எனவும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இது தொடர்பில் ஹற்றன் பொலிஸ் தலையகத்தை தொடர்புகொண்டு வினவியபோது, ஒரு ஊழியர் மட்டும் இருப்பதாலேயே சிக்கல் நிலை உருவாகியுள்ளது. அது குறித்து ஹற்றன் ரயில் நிலைய அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 7 ஆயிரத்து 500 ரூபா சம்பளம் வழங்கப்படுவதால் எவரும் நீண்டகாலம் இருப்பதில்லை. இருப்பினும் கூடியவிரைவில் ஒருவரை இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

# ஆட்டோ குடைசாய்ந்து வீடு மீது வீழ்ந்து விபத்து

## தலவாக்கலையில் சம்பவம்



**தலவாக்கலை குறூப் நிருபர்**

தலவாக்கலை குணாநந்தபுர பகுதியிலுள்ள வீடொன்றின் கூரையின் மீது முச்சக்கர வண்டியொன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்த நிலையில் லிந்துல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து கடந்த ஞாயிறு (13) மாலை இடம்பெற்றுள்ளது. ஹற்றன் வட்டவளை பகுதியிலிருந்து தலவாக்கலை குணாநந்த பகுதிக்கு வந்த முச்சக்கரவண்டியே இவ்வாறு வீதியை விட்டு விலகி பின்னோக்கிச் சென்று குடைசாய்ந்து 30 அடி பள்ளத்திலிருந்த வீட்டின் கூரை மீது வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இதை செலுத்திய சாரதி மற்றும் இதில் பயணித்த இருவர் காயங்களுக்குள்ளாகிய நிலையில் லிந்துல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



மத்திய மாகாணத்தின் விளையாட்டுத்துறையில் திறமைகளை வெளிப்படுத்திய குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த 32 விளையாட்டு வீரர்களுக்கு இரண்டு வருடங்களுக்கு 5000 ரூபா வீதம் ஊட்டச்சத்து கொடுப்பனவு வழங்கும் திட்டத்தை மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ கமகே நேற்று (14) கண்டியிலுள்ள மத்திய மாகாண ஆளுநர் அலுவலக கேட்போர் கூடத்தில் ஆரம்பித்து வைத்தபோது எடுத்த படம்.
படம்: பூஜாபிட்டிய தினகரன் நிருபர்

# சப்ரகமுவ மாகாண அனைத்து பாடசாலைகளுக்கும் குடிநீர்

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகள் விரைவில் பெற்று கொடுக்கப்படும் என்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்தார்.

இரத்தினபுரி மெனேரிபிட்டிய கல்வி அபிவிருத்தி நிலையத்தில் அண்மையில் இடம்பெற்ற வலயக் கல்வி சேவையாளர்களுக்கான செயலமர்வில் கலந்து கொண்டு கருத்த தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாகாண ஆளுநர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

சப்ரகமுவ மாகாணத்தில் 1115 பாடசாலைகள் உள்ளன. அதில் 326 பாடசாலைகளுக்கு போதிய குடிநீர் வசதிகள் இல்லை. அத்துடன் 180 பாடசாலைகளில் மலசலகூட வசதிகளும் இல்லை என்றும் மாகாண கல்வி அமைச்சின் ஆய்வு அறிக்கையின் மூலம் தெரியவந்துள்ளது.



சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகளை பெற்று கொடுப்பதற்கு நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இணக்கம் தெரிவித்துள்ளார்.

எனவே கூடிய விரைவில் சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் குடிநீர் மற்றும் மலசலகூடங்கள் பெற்று கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேற்படி மாகாணத்தில் 70,80 ஆண்டுகள் பழமையான பாடசாலை கட்டிடங்கள் அனைத்தும் இவ்வருடத்திற்குள் அபிவிருத்தி செய்யப்படும் என்றும் சப்ரகமுவ மாகாண ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

இதன்போது சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ருக்மணி ஆரியரத்ன உட்பட கல்வி அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# அமைச்சர் ஜீவனுடன், அதிபர் சேவை 111 இற்கு தகைமை பெற்ற ஆசிரியர்கள் சந்திப்பு

**தலவாக்கலை குறூப் நிருபர்**

இலங்கை அதிபர் சேவை iii இற்கு தகைமை பெற்ற ஆசிரியர்கள் மற்றும் அதன் சங்க பிரதிநிதிகள் அடங்கலான குழுவினருக்கும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும் இடையிலான சந்திப்பொன்று கொட்டக்கலை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் காரியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது.

2018ம் ஆண்டு இலங்கை அதிபர் சேவை தரம் iii மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2018.10. 19ம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக 2019.02.10ம் திகதி நடாத்தப்பட்டு அரசியல் அடிப்டையில் நியமனம் வழங்கப்பட்டதாகவும் வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக இந்நியமனங்கள் வழங்கப்படவில்லை எனவும் அதிபர் சேவை பிரமாண குறிப்புக்கு முரணானதாகவே இந் நியமனங்கள் வழங்கப்பட்டதாகவும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் அமைச்சரிடம் இதன்போது சுட்டிக்காட்டினர்.



மேலும், தாங்கள் இப்பரீட்சையில் 03 பாடங்களுக்கும் சேர்த்து ஒவ்வொரு பாடத்திற்கும் தலா 40 புள்ளிகள் எனும் அடிப்படையில் மொத்தம் 120 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த போதும் தமக்கு நியமனம் வழங்கப்படவிலை எனவும் ஆனால் 2008 /2015 ஆண்டுகளில் நடைபெற்ற பரீட்சைகளில் 120 புள்ளிகளைப் பெற்ற அனைவருக்கும் அதிபர் நியமனங்கள் வழங்கப்பட்டதாகவும் அமைச்சரிடம் கூறினர். இச்சந்திப்பில் சங்கத்தின் தலைவர் எஸ்.முரளிதரன் (கண்டி), செயலாளர் கே. ஜனார்த்தன் (மட்டக்களப்பு) உள்ளிட்ட நாட்டின் அனைத்து மாகாணங்களை சேர்ந்த இணைப்பாளர்களும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் பலரும் கலந்து கொண்டு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானிடம் மகஜர் ஒன்றினை கையளித்தனர்.

# 100 பக்கெட் ஹெரோயினுடன் நபரொருவர் கைது

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

100 பக்கெட் ஹெரோயினுடன் 30 வயதுடைய நபரொருவர் நேற்று காலை கைது செய்யப்பட்டுள்ளதாக ஹாலிஎல பொலிஸார் தெரிவித்தனர்.

100 பக்கெட் ஹெரோயினையும் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து கொழும்பிலிருந்து பதுளைக்கு எடுத்துக்கொண்டு வருகையிலேயே பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய பதுளை நகருக்கு அருகாமையில் வைத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பதுளை, கடுபெல்லகம பகுதியைச் சேர்ந்த இவர், 8 வீடுகளை உடைத்து கொள்ளையடித்த சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனவும், தலைமறைவாகி தற்போது கொழும்பு நவகமுவ பகுதியில் இருந்து ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டு வருகிறார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வெல்லம்பிட்டியவில் இருந்து இவரே பதுளைக்கு ஹெரோயினை கொண்டு செல்வதாகவும் இது தொடர்பில் ஹாலிஎல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பலாங்கொடை பகுதிகளில் யானைகளின் அச்சுறுத்தல் அதிகரிப்பு; மக்கள் அச்சம்

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

பலாங்கொடை தேர்தல் தொகுதியில் உள்ள 20 கிராம சேவகர் பிரிவுகளில் காட்டு யானைகளின் அச்சுறுத்தல் நிலவுவதால் பிரதேச மக்கள் அதிகளவில் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர்.

இம்புலமுர மற்றும் ஹந்தகிரிய பிரதேசங்களில் கடந்த வாரம் தொடர்ச்சியாக இரவு நேரத்தில் காட்டு யானைகள் கிராமங்களில் புகுந்து பல ஏக்கர் வயல் நிலங்களில் உற்பத்தி செய்யப்பட்ட வாழை, மரக்கறி உற்பத்திகள் அனைத்தையும் அழித்து நாசமாக்கியுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

கடந்த வருடங்களில் இவ்வாறு காட்டு யானைகளின் தொல்லைகள் இடம்பெறவில்லை என தெரிவித்த கிராமவாசிகள், இந்த வருடம் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதுடன் யானைகளை விரட்டிவிட யானை வெடிகள் உரிய முறையில் எமக்கு கிடைப்பதில்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

பலாங்கொடை மற்றும் இம்புள்பே பிரதேச செயலாளர் பிரிவுகளில் இந்த காட்டு யானைகளின் தொல்லை பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. தியவின்னகோன்கஹ, மன்கடகலுபேடிகம ஆகிய பகுதிகளை உள்ளடக்கி யானை வேலிகளை அமைத்த பிரதேசங்களில் கூட காட்டுயானைகள் வருவதாக கிராம மக்கள் குறிப்பிட்டனர்.



இரத்தினபுரி மாவட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட இரத்தினபுரி மாவட்ட இணைப்பு கமிட்டி கூட்டத்தில் இந்த காட்டு யானைகளின் தொல்லைகளுக்கு துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

இது சம்பந்தமாக வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் அதிகாரிகளுடன் அண்மையில் பலாங்கொடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றதாக தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் யானை வெடிகள் தட்டுப்பாடு நிலவுவதாக அப்போது வனப் பாதுகாப்பு அதிகாரிகள் அறிவித்ததாகவும் மேலும் முழு நாட்டிலும் 2000 அதிகாரிகள் மட்டுமே பணியாற்றுவதாகவும் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும் பலாங்கொடை பகுதியில் நிலவும் காட்டு யானைகளின் பிரச்சினையினை இயன்றளவு கவனம் செலுத்தி அதனை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுப்பதாக வனப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சப்ரகமுவ மாகாண கூட்டுறவு சங்கங்களை நவீனமயப்படுத்த திட்டம்

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

சப்ரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் உள்ள 115 கூட்டுறவு சங்க நிறுவனங்களை முழுமையாக நவீன மயப்படுத்தும் வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சப்ரகமுவ மாகாண பிரதம செயலாளர் திருமதி ரஞ்சனி ஜெயக்கொடி தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள 23 பலநோக்கு கூட்டுறவு சங்க கடைகள், சில்லறைக் கடைகள், கோப் சிட்டி, மினி கோப்சிடி ஆகிய 115 நிறுவனங் கள் நவீனமயப்படுத்த உள்ளன.

இந்த 115 நிறுவனங்களும் bestcop என்ற பெயரில் நவீனமயப்படுத்த உள்ளதாக தெரிவித்த பிரதான செயலாளர் மேலும் தெரிவித்ததாவது, இந்த நிறுவனங்கள் நவீன மயப்படுத்தப்பட்டு அதற்குத் தேவையான சகல உபகரணங்களும் துரிதமாக பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்த நிறுவனங்களில் மரக்கறி வகைகள், பழ வகைகள் அரிசி உட்பட உணவுக்காக பயன்படுத்தப்படும் அனைத்து பொருட்களும் இந்த நிறுவனங்களில் இருந்து பொதுமக்களுக்கு குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளமுடியும்எனஅவர்மேலும் தெரிவித்தார்.

அதேசமயம் சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள 2000 கூட்டுறவு ஊழியர்களுக்கு தொழில் பயிற்சி தொழில்நுட்பம் முகாமைத்துவம் உட்பட பலதுறைகளில் பயிற்சிகளும் வழங்கப்பட உள்ளதாகவும் மாகாண செயலாளர் ரஞ்சனி ஜெயக்கொடி மேலும் தெரிவித்தார்.

இந்த வேலை திட்டத்திற்காக சப்ரகமுவ மாகாண சபை 35 லட்சம் ரூபா நிதியினை கூட்டுறவு சங்கத்திற்கு வழங்கி உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக கூட்டுறவு சங்க ஊழியர்களை அறிவுறுத்தும் நிகழ்வொன்று அண்மையில் இரத்தினபுரி கேதுமதி வைபவ மண்டபத்தில் இடம்பெற்றன. இந்த நிகழ்வின் போது கூட்டுறவு ஆணையாளர் சுமிந்த சிங்கப்புலி மற்றும் மாகாண கூட்டுறவு ஆணையாளர் மயூர அரன்தர ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

# ஆசிரிய இடமாற்றத்தின் போது அரசியல் தலையீடுகள் வேண்டாம்

## மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் நாமல் ராஜபக்ச

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்



ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள அரச பாடசாலைகளில் மேற் கொள்ளும் ஆசிரிய இடமாற்றத்தின்போது அரசியல் தலையீடுகள் மேற்கொள்ள வேண்டாமென இளைஞர், விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் டொக்டர் உபுல் கலப்பத்தி தலைமையில் மாகம் ருஹூணு நிர்வாக கட்டிடத் தொகுதியில் அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அமைச்சர்களான சமல் ராஜபக்ச, மஹிந்த அமரவீர, பாராளுமன்றஉறுப்பினர் அஜித் ராஜபக்ச ஆகியோருடன் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் நாமல், ஆசிரியர் இடமாற்றத்திற்காக உள்ள கொள்கைகளுக்கு ஏற்ப ஆசிரியர்களுக்கு அசாதாரணம் ஏற்படாத வகையில் அனைவரும் செயற்படவேண்டும். தேசிய பாடசாலைகளின் கொள்கைகள் மாகாண சபை பாடசாலைகளுக்கு பொருந்துவதில்லை. இதனால் அனைத்து செயற்பாடுகளையும் கலந்துரையாடல்கள் மூலம் சீர்செய்து கொள்ள வேண்டும்.

இப் பிரதேசங்களில் யானைகளின் தொல்லைகள் அதிகரித்து வருவதாக மக்கள் முறையிடுகிறார்கள் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நீர்ப்பாசன அமைச்சர் சமல் ராஜபக்ச இங்கு உரையாற்றும் போது தெரிவித்தாவது, கடந்த காலங்களில் இப் பிரதேசங்களில் புராதன உறுதி என்று கூறி பாரியளவில் காணிகளை மோசடி செய்துள்ளார்கள். இவை தற்பொழுதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் ஹம்பாந் தோட்டைமாவட்டத்தில்மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தி திட்டங்களுக்கு காணிகளை பெறுவது பாரிய சிரமத்திற்கு உள்ளாகியுள்ளது.

சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர இங்குஉரையாற்றும் போது, இன்று அரசாங்க பாடசாலைகளில் மாணவர்களை சேர்ப்பதற்காக பெற்றோர்கள் அரசியல் தகைமைகளை பெற்றுக் கொள்வதற்கு முயற்சி செய்கிறார்கள்.

பாடசாலை அதிபர்களின் கடிதங்களை பெற்று நீண்டவரிசையாக வருகிறார்கள். இவை இவ்வாறு நடைபெறக் கூடாது. இத்தோடு தங்காலையில் உள்ள மாவட்ட சுற்றாடல் காரியாலயம் இவ்விடத்திற்கு மாற்றப்படவேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## அறலகங்வில பகுதியில் விபத்து; இளைஞனொருவர் உயிரிழப்பு

அநுராதபுரம் தினகரன் நிருபர்

அறலகங்வில கெரவல் கந்த வீதியின் அளுத்ஓய பகுதியில் இடம் பெற்ற விபத்தில் இளைஞனொருவர் பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளதாக அறலகங்வில பொலிசார் தெரிவித்தனர். இச்சம்பவம் 12 ஆம் திகதி இரவு 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிசார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் 20 வயதுடைய அறலங்வில பிம்புரத்தாவ பகுதியை வசிப்பிடமாக கொண்டவர் என்பது தெரியவந்துள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, அறலகங்வில பகுதியிலிருந்து அளுத்ஓய பகுதிக்கு பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டினை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிள் ஓட்டுனர் பலத்த காயமடைந்த நிலையில் அறலகங்வில வைத்திய சாலையில் அனுமதித்ததன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அறலகங்வில பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

### சப்ரகமுவ மாகாணம்;

## ஊடகவியலாளர்களுக்கு பயணச்சீட்டு வழங்கும் நிகழ்வு நாளை

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

சப்ரகமுவ மாகாண ஊடகவியலாளர்களுக்கான இலவச பஸ் பயணச் சீட்டு வழங்கும் நிகழ்வு நாளை 16 ஆம் திகதி சப்ரகமுவ மாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் நடை பெறவுள்ள இந்நிகழ்வில் இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் அழைக்கப் பட்டுள்ளனர்.

சப்ரகமுவ மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையில் பதிவு செய்யப்ப ட்ட பஸ் வண்டிகளில் இலவசமாக பயணம் செய்ய மேற்படி இலவசப் பயணச் சீட்டுக்கள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## எதிர்கால கூட்டுறவு வியாபார நடவடிக்கை தொடர்பில் ஆராய்வு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

ஸ்ரீலங்கா பொதுஜன கூட்டுறவு தேசிய சங்கத்தின் கூட்டுறவு வியாபார எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பிலான செயலமர்வு மாகாண கேட்போர் கூடத்தில் மாகாண ஆளுநரும் ஸ்ரீலங்கா பொதுஜன கூட்டுறவு தேசிய அமைப்பின் தலைவருமான மஹிபால ஹேரத் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.



கூட்டுறவு வியாபாரத்தின் நவீன தொழில்நுட்பத் துறை மற்றும் விநியோக பாவனையை பாவனையாளர்கள் மத்தியில் விருத்தி செய்தல் தொடர்பில் செயற்பாட்டு துறையின் எதிர்கால நடவடிக்கையினை விருத்தி செய்வதே இச் செயலமர்வின் நோக்கமாகும்.

கூட்டுறவு துறைசார்ந்த யோசனைகள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பிலான அறிக்கையினை தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிலையத்தினால் தயாரிக்கப்பட்டு ஜனாதிபதி மற்றும் கூட்டுறவு அமைச்சுக்கும் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இச்செயலமர்வின் போது மாகாண பிரதான அமைச்சின் செயலாளர் எச்.எம்.பீ.பண்டார, ஆளுநரின் செயலாளர் ஏ.கே.என்.விக்ரமசிங்க உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## போதைவஸ்து பாவனை; சிறுவர் வன்முறை; புத்தளத்தில் விழிப்புணர்வு கலந்துரையாடல்





புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளம் விழுது மேம்பாட்டு மையம் ஏற்பாடு செய்த போதைப் பொருள்பாவனை, விற்பனைமற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று புத்தளம் தில்லையடி அம்மார் மண்டபத்தில் திங்கட்கிழமை (14) காலை இடம்பெற்றது.

விழுது மேம்பாட்டு அமைப்பின் திட்ட உத்தியோகத்தர் ராஜரத்னம் சுஹுனா தேவி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் புத்தளம் பொலிஸ் பிரிவின் பொலிஸ் அதிகாரி ஐ.பி. பத்திரன, எஸ்.ஐ.பத்மகுமார, புத்தளம் நகர சபை உறுப்பினர்களான முஹம்மது தில்ஷான், ஜீ.ஏ.வி.பிரசன்ன, புத்தளம் தில்லையடி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் பிரதம குரு பிரம்மஸ்ரீ சோம சுந்தரம் தியாகராஜ குருக்கள், புத்தளம் தில்லையடி முஹியத்தீன் ஜும்ஆ பள்ளி தலைவரும், தில்லையடி பள்ளிவாசல் சம்மேளன தலைவருமான ஏ.எஸ்.அநூர்தீன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

புத்தளம், கல்பிட்டி, இலவன்குளம், சேகுவன்தீவு போன்ற பிரதேசங்களை பிரநிதித்துவப்படுத்தும் இளைஞர் யுவதிகள் அமைப்பினரும் இதில் கலந்து கொண்டனர்.

குறித்த பகுதிகளில் இனங்காணப்பட்ட போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனை தொடர்பான விளக்கங்ளை இளைஞர் குழுக்கள் சார்பான பிரதிநிதிகள் இதன்போது முன் வைத்தனர். போதைப் பொருள் பாவனை மற்றும் விற்பனையை நாம் முற்றாக ஒழித்துக் கட்டுவோம், பொலிஸ் அதிகாரிகள் உங்களோடு துணையாக இருக்கிறார்கள். நீங்கள் எந்த இடத்தில் இவ்வாறான இந்த துர்நடத்தையை கண்ணுற்றால் தைரியமாக எமக்கு தெரியப்படுத்துங்கள். நாங்கள் உடனடியாக அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தயாராக இருக்கிறோம்.

எந்த குழந்தைகள் என்றாலும் அவர்கள் அனைவருமே பொதுவானவர்கள் தான். அவர்களை காப்பாற்றுவது அவர்களது எதிர்காலத்தை பிரகாசிக்கச் செய்வது பொலிஸாராகிய எங்களது கடமையாகும் என அங்கு உரையாற்றிய பொலிஸ் அதிகாரி ஐ.பி. பத்திரன தெரிவித்தார்.

## கம்பஹா மாவட்ட முஸ்லிம்களின் கல்விமேம்பாடு தொடர்பில் விசேட கூட்டம்

மர்லின் மரிக்கார்




கம்பஹா மாவட்ட முஸ்லிம்களை கல்வித் துறையில் முன்னேற்றுவது தொடர்பாக ஆராயும் விஷேட கூட்டம் மாவட்ட மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைவரும் அல் முஹ்ஸின் விஞ்ஞானக் கல்லூரியின் தலைவருமான எம்.எம்.ஏ. இஸ்மாயில் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

'கம்பஹா மாவட்ட முஸ்லிம்களை நாட்டின் ஏனைய மாவட்ட முஸ்லிம்களுக்கு முன்மாதிரிமிக்க வகையில் கல்வித் துறையில் முன்னேற்ற வேண்டும்.

அதற்கேற்ப திட்டங்களை வகுத்து செயற்பட வேண்டியது காலத்தின் அவசியத் தேவை' என்று மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைவர் இஸ்மாயீல் இக்கூட்டத்தின் போது வலியுறுத்தியுள்ளார்.

அந்த வகையில் முஸ்லிம்களை கல்வித் துறையில் முன்னேற்ற வேண்டியதன் அவசியம், அதற்கான வேலைத்திட்டங்கள், பாடசாலைகளின் தற்போதைய நிலைமை, வளப் பற்றாக்குறைகள் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள், மாணவர்களின் உயர்கல்வி ஈடுபாடு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இக்கூட்டத்தின் போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளன.

இக்கூட்டத்தில் பேராசிரியர் எம். திலக்கசிறி சிறப்புரை நிகழ்த்தினார். பரீட்சைகள் திணைக்கள முன்னாள் ஆணையாளர் ஏ.எஸ். முஹம்மத், தேர்தல்கள் திணைக்கள முன்னாள் ஆணையாளர் எம்.எம். முஹம்மத், ஆசிரிய ஆலோசகர் எம்.ரி.எம் ஆஸீம், மௌலவி முனீர் முளப்பர், டொக்டர் எம். சாஹீர், அரசாங்க தகவல் திணைக்கள முன்னாள் பணிப்பாளர் ஹில்மி முஹம்மட், பிரதேசத்தின் முன்னணி சமூக சேவையாளர் பூகொட சப்வான் ஹாஜியார், அதிபர் எம். அஸ்லம், சட்டத்தரணி எம்.எச்.எம். அஸ்லம் உட்பட மாவட்டத்தைச் சேர்ந்த கல்விமான்கள் புத்திஜீவிகள் சமூக நலன்விரும்பிகள் பலரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



அரசியலமைப்பிற்கான 20ஆவது திருத்தம் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தும் செயலமர்வு அண்மையில் பேருவளை மொரகல்ல அமா வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட கல்வி அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் பொதுமக்களுடன் அளவளாவுவதையும் அருகில் பேருவளை நகர சபை உப தலைவர் முனவ்வர் றபாய்தீன் உட்பட பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.

## இரத்தினபுரி தொழில் திணைக்களம் இடமாற்றப்படுவதற்கு எதிர்ப்பு

காவத்தை தினகரன் விசேட நிருபர்



இரத்தினபுரி தொழில் திணைக்களம் அவிசாவளைக்கு இடமாற்றம் செய்யப்படுவதற்கு எதிராக பொது மக்கள் நேற்று (14) எதிர்ப்பை தெரிவித்தனர்.

இதனால் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக மாவட்ட தொழில் திணைக்களத்திற்கு வருகை தந்த பொது மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டனர்.

இதனையடுத்து வெறுப்புடன் காணப்பட்ட மக்கள் மேற்படி தொழில் திணைக்களத்தின் முன்பாக இரத்தினபுரி கொழும்பு பிரதான வீதிக்கு இறங்கி வீதியை வழிமறித்து தமது எதிர்ப்பை தெரிவித்தனர்.

இதன் காரணத்தால் இரத்தினபுரி கொழும்பு பிரதான வீதியில் பல மணி நேரம் வாகன தடை மற்றும் வாகன நெரிசலும் காணப்பட்டது.

மேற்படி மாவட்ட தொழில் திணைக்களம் திடீரென மேல் மாகாணத்தின் அவிசாவளை நகருக்கு இடமாற்றம் செய்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதன் காரணத்தால் நேற்று முதல் மேற்படி தொழில் திணைகளத்தின் நடவடிக்கைகள் யாவும் மீண்டும் அறிவிக்கும்வரை கொழும்பு நாரஹேன்பிட்ட பிரதான அலுவலகத்தில் சேவையை பெற்றுக் கொள்ளுமாறு மேற்படி மூடப்பட்டிருந்த தொழில் திணைக்களத்தின் முன் ஒட்டப்பட்டிருந்தது.

இதை பார்த்த குழுமியிருந்த மக்கள் கூட்டம் ஆவேசத்துடன் வீதிக்கு இறங்கி தமது எதிர்ப்பை தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

பொது மக்களுக்கு சேவை செய்துவரும் இரத்தினபுரி மாவட்ட தொழில் திணைக்களம் திடீரென அவிசாவளைக்கு இடமாற்றம் செய்யப்பட உள்ளதை ஒருபோதும் ஏற்க முடியாது. இது ஏழை மக்களின் வயிற்றில் அடிக்கும் செயலாகும் என்று கூடியிருந்த மக்கள் கோஷமெழுப்பினர்.

தொழில் திணைக்களம் அவிசாவளைக்கு கொண்டு சென்றால் தோட்டத் தொழிலாளர்கள் உட்பட ஏனைய மக்கள் சேவைகளை பெற்று கொள்வதற்கு அவிசாவளைக்கு செல்லவேண்டிய நிலை ஏற்படும். இதனால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க நேரிடும்.

## பலாங்கொடை பிரதேசத்தில் யூரியா உரத்துக்கு தட்டுப்பாடு

பலாங்கொடை தினகரன் நிருபர்

பலாங்கொடை பிரதேசத்திலுள்ள வியாபார நிலையங்களில் யூரியா வகை உரம் உட்பட தேயிலை உரத்துக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பிரதேசத்தின் பல கிராமங்களில் சிறிய தேயிலை தோட்ட விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

கடந்த சில வாரங்களாக இப்பகுதி வியாபார நிலையங்களில் யூரியா உரத்துக்கும் தேயிலை உரத்துக்கும் மற்றும் ஏனைய உரவகைகளுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக தேயிலை உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வறட்சி நிலைமை மாறி இப்பகுதியில் தற்போது மழை பெய்து வருவதால் மழையின் பின்பு தேயிலை பயிர்ச் செய்கைக்கு உரம் இடுவதற்கு தயாராக இருந்த நிலையில் வியாபார நிலையங்களில் பணம் கொடுத்து வாங்குவதற்கு உரம் இன்மையால் விவசாயிகள் பெரும் கஷ்டத்துக்கு ஆளாகியுள்ளனர்.

தேயிலை உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் தேவையான உர வகைகள் தமக்கு கிடைக்காமையினால் பச்சை கொழுந்து தேயிலை உற்பத்தி அதிக அளவு வீழ்ச்சி அடைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)

### மேல் மாகாணத்தின் கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டத்திற்காக CSS 1/CRS 1 இமல்ஷன் வழங்குதல்

இந்த அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தினால் செயற்படுத்தப்படும் கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்குத் தேவையான CSS1 / CRS1 இமல்ஷனைக் கொள்வனவு செய்வதற்கு வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன. இந்த பொருள் தொகைகளை எதிர்வரும் 06 மாத காலத்திற்கு தேவையான வகையில் வழங்கப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

கீழ்க் காணப்படும் கேள்விச் சுருக்கத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஒவ்வொரு கேள்வி வழங்கலுக்காகவும் வெவ்வேறாக கேள்வி ஆவணத் தொகுதிகளை கொள்வனவு செய்தல் வேண்டும்.

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | நிறைவேற்றுப் பொறியியலாளரின் அலுவலகம் | வழங்கும் அளவு (லீட்டர்) | | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் - வற் வரியின்றி ரூபா | கேள்விப் பிணையின் பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | CSS-1 லீட்டர் | CRS-1 லீட்டர் | | பணமாக | வங்கி பிணை மூலம் |
| PRDA/WP/PRO/2020/33 | நி.பொ.அ. - கொழும்பு | 42470 | 9110 | 2,000.00 | 71,000.00 | 142,000.00 |
| | நி.பொ.அ. - மொரட்டுவ | 62700 | 1400 | | | |
| | நி.பொ.அ. - அவிசாவளை | 21500 | 18800 | | | |
| PRDA/WP/PRO/2020/34 | நி.பொ.அ. - கிரிந்திவெல | 20000 | 11000 | 2,000.00 | 67,000.00 | 134,000.00 |
| | நி.பொ.அ. - நிட்டம்புவ | 26395.5 | 25491 | | | |
| | நி.பொ.அ. - உடுகம்பொல | 7400 | 14800 | | | |
| | நி.பொ.அ. - நீர்கொழும்பு | 31955 | 10990 | | | |
| PRDA/WP/PRO/2020/35 | நி.பொ.அ. - களுத்துறை | 39650 | 2740 | 2,000.00 | 53,000.00 | 106,000.00 |
| | நி.பொ.அ. - ஹொரண | 15850 | 10425 | | | |
| | நி.பொ.அ. - அகலவத்த | 48000 | - | | | |

02. இதன் பொருட்டான கேள்வி ஆவணத் தொகுதியினை 2020-09-16ஆம் திகதியிலிருந்து 2020-09-28ஆம் திகதி மு.ப. 8.30 இலிருந்து பி.ப. 2.45 மணி வரை மேற்குறிப்பிடப்பட்ட கேள்விப்படிவக் கட்டணத்தைச் செலுத்தி இவ்வதிகார சபையின் கேள்விப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை பணமாக அல்லது வங்கிப் பிணை மூலம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. இப்பெறுகைக்கான தகைமையைப் பெறுவதற்கு கேள்வித் தொகை 5.0 மில்லியன் ரூபாவை விஞ்சுமானால் கேள்விதாரரினால் 1987 03ம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ம் பிரிவின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. இந்தக் கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் 2020-09-29ஆம் திகதி மு.ப. 10.30 மணியாகும் என்பதுடன் அவ்வேளையிலேயே இவ்வலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும்.

05. இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி. அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**
**தொ. இலக்கம் 011-5676903**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவு அகற்றல் மற்றும் சமூக தூய்மை இராஜாங்க அமைச்சு**

## யாழ்ப்பாணத்தின் இரு குளங்களை சுற்றியுள்ள கட்டுகளில் பொழுதுபோக்கு அபிவிருத்திகளை மேற்கொள்ளல்

பின்வரும் ஒப்பந்தங்களுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக்குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.

| பெறுகை இல. | பணி விளக்கம் | மூடும் திகதி மற்றும் நேரம் | விலைமனு வழங்கப்படும் திகதிகள் | CIDA தரம் | விலை மனுப் பிணை | மீளளிக்கப் படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| S/376/20 | யாழ்ப்பாணத்தின் இரு குளங்களை சுற்றியுள்ள கட்டுகளில் பொழுது போக்கு அபிவிருத்திகளை மேற்கொள்ளலுக்காக வலுவூட்டப்பட்ட கொன்கிறீட் மதகுகளை நிர்மாணிப்பதற்கான உப-ஒப்பந்தம். | 2020 செப்டம்பர் 29ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு | 2020 செப்டம்பர் 15ஆம் திகதியிலிருந்து 2020 செப்டம்பர் 28ஆம் திகதி வரையும். | சிவில் பொறியியலின் எந்தவொரு துறையிலும் சி-6 அல்லது மேற்பட்ட CIDA தரம் | 135,000 ரூபா | 3,500 ரூபா |
| S/392/20 | யாழ்ப்பாணத்தின் இரு குளங்களை சுற்றியுள்ள கட்டுகளுக்கான 6”x9” அளவுள்ள சிறுதுண்டுக் கற்களை வழங்கல் | 2020 ஒக்ரோபர் 6ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு | 2020 செப்டம்பர் 15ஆம் திகதியிலிருந்து 2020 ஒக்ரோபர் 05ஆம் திகதி வரையும் | ஏற்புடைய தாகாது | 40,000 ரூபா | 2,000 ரூபா |
| S/449/20 | யாழ்ப்பாணத்தின் இரு குளங்களை சுற்றியுள்ள கட்டுகளுக்கான root ball மரங்களை வழங்கல், நாட்டுதல் மற்றும் பராமரிப்பு | 2020 செப்டம்பர் 29ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு | 2020 செப்டம்பர் 15ஆம் திகதியிலிருந்து 2020 செப்டம்பர் 28ஆம் திகதி வரையும் | ஏற்புடைய தாகாது | 5,000 ரூபா | ஏற்புடைய தாகாது |
| S/448/20 | யாழ்ப்பாணத்தின் இரு குளங்களை சுற்றியுள்ள கட்டுகளுக்கான Buffalo Turfing ஐ வழங்கல், பதித்தல் மற்றும் பராமரிப்பு | 2020 செப்டம்பர் 29ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு | 2020 செப்டம்பர் 15ஆம் திகதியிலிருந்து 2020 செப்டம்பர் 28ஆம் திகதி வரையும் | ஏற்புடைய தாகாது | 6,000 ரூபா | ஏற்புடைய தாகாது |

1. மேலே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 1.30 மணி வரையும் வழங்கல்கள் மற்றும் களஞ்சியசாலைகளுக்கான பிரதி பொது முகாமையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை பரீட்சித்த பின்னர் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்தில் மாத்திரம் புதிய கட்டிடத்தின் 3ஆம் மாடியின் கணக்கிடல் பிரிவிலுள்ள காசாளரிடம் செலுத்தப்படல் வேண்டும்.
2. தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகை இலக்கம் மற்றும் விடயம் ஆகியன தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டுமென்பதுடன் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது புதிய கட்டிடத்தின் 1ஆம் மாடியிலுள்ள வழங்கல்கள் பிரிவிலுள்ள திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
3. விலைமனுக்கள் மேலே குறிப்பிட்டுள்ள மூடும் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு அல்லது அவைகளுக்கு முன்னராக கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்தின் பின்னர் மூடப்பட்டு சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
4. 2020 செப்டம்பர் 24ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு S/376/20 இற்கான விலைமனு முன்கூட்டம் இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபன சபை அறையில் நடாத்தப்படும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தெளிவுறுத்தல்களை இலங்கை காணி அபிவிருத்திக்கான கூட்டுத்தாபன D & R இற்கான பிரதி பொது முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். - தொலைபேசி: + 94 11 2862058, தொலைநகல்: + 94 11 2862058.

**தலைவர்,**
**இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம்,**
**இல. 03, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, வெலிகட, இராஜகிரிய.**
**தலைமையகம்: தொலைபேசி: 0112 889485-7.**
**இணையம்: www.landdevelopment.lk**

BE BETTER INFORMED!



News you can trust now free on your mobile phone.

Dinamina Daily News Thinakaran

VISIT apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

AVAILABLE AT

LAKE HOUSE

## திருத்தம் பற்றிய அறிவித்தல்

**பாதுகாப்பு அமைச்சு**

**அக்குரேகொடவிலுள்ள பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத் தொகுதியின் 04ஆம் தொகுதிக்கு தீயைக் கண்டறிதல் மற்றும் தீப் பாதுகாப்பு முறைமையை வடிவமைத்தல், வழங்கல் மற்றும் நிறுவுதலுக்கான விலைமனு**
**Contract No.: DHQC/FP & FD 04/2020**

மேற்படி தலைப்பில் 2020 செப்டெம்பர் 13ஆம் திகதி தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையில் பிரசுரமான விளம்பரம் சம்பந்தமானது.

அந்த விளம்பரத்தின் 09ஆம் பந்தியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படும் திகதி மற்றும் நேரம் 2020-10-12ஆம் திகதி மு.ப. 11.00 மணி எனப் பிழையாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஒப்படைக்கப்படும் நேரம் மு.ப. 10.00 மணியென திருத்தப்படல் வேண்டும்.

விளம்பரத்தின் ஏனைய விடயங்களில் எவ்வித மாற்றமுமில்லை.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு (MPC),**
**பாதுகாப்பு அமைச்சு,**
**இல.: 15/ 5, பாலதக்ஷ மாவத்தை,**
**கொழும்பு-03, இலங்கை.**
**தொலைபேசி: 0094-2390719.**
**தொலைநகல்: 0094-2390720.**

## திருத்தம் பற்றிய அறிவித்தல்

**பாதுகாப்பு அமைச்சு**

**அக்குரேகொடவிலுள்ள பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத் தொகுதியின் 03ஆம் தொகுதிக்கு தீயைக் கண்டறிதல் மற்றும் தீப் பாதுகாப்பு முறைமையை வடிவமைத்தல், வழங்கல் மற்றும் நிறுவுதலுக்கான விலைமனு**
**Contract No.: DHQC/FP & FD 03/2020**

மேற்படி தலைப்பில் 2020 செப்டெம்பர் 13ஆம் திகதி தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையில் பிரசுரமான விளம்பரம் சம்பந்தமானது.

அந்த விளம்பரத்தின் 09ஆம் பந்தியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படும் திகதி மற்றும் நேரம் 2020-10-12ஆம் திகதி மு.ப. 10.00 மணி எனப் பிழையாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஒப்படைக்கப்படும் நேரம் மு.ப. 11.00 மணியென திருத்தப்படல் வேண்டும்.

விளம்பரத்தின் ஏனைய விடயங்களில் எவ்வித மாற்றமுமில்லை.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு (MPC),**
**பாதுகாப்பு அமைச்சு,**
**இல.: 15/ 5, பாலதக்ஷ மாவத்தை,**
**கொழும்பு-03, இலங்கை.**
**தொலைபேசி: 0094-2390719.**
**தொலைநகல்: 0094-2390720.**

# பெறுகை அறிவித்தல்

## சுத்திகரிப்புச் சேவையை நடாத்திச் செல்லல் - 2021

### ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழாக நிர்வகிக்கப்படும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வைத்தியசாலை/ நிறுவனங்களில் சுத்திகரிப்புச் சேவையை, 2021.01.01 முதல் 2021.12.31 வரை நடாத்திச் செல்வதற்காக விலைமனுக் கோரப்படுகின்றது.

| தொ. இல | நிறுவனம் | விலைமனு மாதிரிப் பத்திரக் கட்டணம் (ரூ) | விலைமனுப் பிணைக் கட்டணம் ரொக்கப் பணமாக (ரூ) | விலைமனு மாதிரிப் பத்திரங்கள் வழங்கப்படும் இடம் |
|---|---|---|---|---|
| **A தரத்திலான ஆதார வைத்தியசாலை** | | | | |
| 01 | ஆதார வைத்தியசாலை தியத்தலாவ | 7500.00 | 233,000.00 | ஊவா மாகாண சுகாதார அமைச்சு |
| 02 | ஆதார வைத்தியசாலை மஹியங்கன | 8000.00 | 300,000.00 | மேலுள்ளவாறே |
| **B தரத்திலான ஆதார வைத்தியசாலை** | | | | |
| 03 | ஆதார வைத்தியசாலை, வெலிமடை | 5,000.00 | 150,000.00 | ஊவா மாகாண சுகாதார அமைச்சு |
| 04 | ஆதார வைத்தியசாலை, பிபில | 5,500.00 | 170,000.00 | அவ்வாறே |
| 05 | ஆதார வைத்தியசாலை, வெல்லவாய | 5,500.00 | 174,000.00 | மேலுள்ளவாறே |
| 06 | ஆதார வைத்தியசாலை, சியம்பலாண்டுவ | 4,000.00 | 90,000.00 | ஊவா மாகாண சுகாதாரத் திணைக்களம் |
| **A தரத்திலான பிரதேச வைத்தியசாலை** | | | | |
| 07 | பிரதேச வைத்தியசாலை, பண்டாரவளை | 2,000.00 | 12,000.00 | ஊவா மாகாண சுகாதாரத் திணைக்களம் |
| 08 | பிரதேச வைத்தியசாலை, பஸ்ஸறை | 2,000.00 | 12,000.00 | மேலுள்ளவாறே |
| 09 | பிரதேச வைத்தியசாலை, புத்தளம் | 3,500.00 | 60,000.00 | மேலுள்ளவாறே |
| **B தரத்திலான பிரதேச வைத்தியசாலை** | | | | |
| 10 | பிரதேச வைத்தியசாலை, கிராந்துருகோட்டே | 3,000.00 | 50,000.00 | ஊவா மாகாண சுகாதாரத் திணைக்களம் |
| 11 | பிரதேச வைத்தியசாலை, தனமல்வில | 3,000.00 | 26,000.00 | மேலுள்ளவாறே |
| **C தரத்திலான பிரதேச வைத்தியசாலை** | | | | |
| 12 | பிரதேச வைத்தியசாலை, கதிர்காமம் | 2,000.00 | 12,000.00 | ஊவா மாகாண சுகாதாரத் திணைக்களம் |
| **சுகாதார நிறுவனம்** | | | | |
| 13 | ஆர்.எச் குணவர்தன மாவத்தையில் மாகாண சபை புதிய கட்டிடத் தொகுதி | 3,000.00 | 33,000.00 | ஊவா மாகாண சுகாதாரத் திணைக்களம் |
| 14 | சுகாதார பயிற்சி நிலையம், பண்டாரவெல. | 2,000.00 | 14,000.00 | மேலுள்ளவாறே |
| 15 | பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகம், பதுளை | 2,000.00 | 14,000.00 | மேலுள்ளவாறே |
| 16 | பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகம், மொனராகல. | 2,000.00 | 14,000.00 | மேலுள்ளவாறே |

01. விண்ணப்பதாரர், இலங்கை, வியாபார பெயர்ப் பதிவு செய்யும் கட்டளைச் சட்டத்தின் கீழாக பதிவு செய்துகொண்டுள்ள ஓர் நிறுவனமாக நபராக இருக்கவேண்டியதுடன் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாத வழங்குநரொருவராக இருத்தல் வேண்டும்.

02. மீளளிக்கப்படாத விலைமனு மாதிரிப் பத்திரக் கட்டணத்தை 2020.09.14 முதல் 2020.10.06 வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 வரை, விலைமனு மாதிரிப் பத்திரங்கள் வழங்கப்படும் நிலையத்திற்குச் செலத்தி, குறித்த காலப் பகுதிக்குள் விலைமனு மாதிரிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன், விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்காக நிபந்தனை மற்றும் விலைமனு மதிப்பீட்டு சுட்டெண் போன்றவற்றை விலைமனு மாதிரிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முன்னர் குறித்த ஆவணங்கள் மற்றும் விலைனு மாதிரிப் பத்திரங்கள் வழங்கும் இடத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

03. C தரம் மற்றும் B தரத்திலான பிரதேச வைத்தியசாலைகளுக்கு சுத்திகரிப்புச் சேவையை வழங்கிய அனுபவம் இருப்பின், A தரத்திலான பிரதேச வைத்தியசாலை தொடர்பாகவும், A மற்றும் B தரத்திலான பிரதேச வைத்தியசாலையில் சுத்திகரிப்பு சேவையை வழங்கிய அனுபவத்தைக் கொண்டிருப்பின் B தரத்திலான ஆதார வைத்தியசாலை தொடர்பாகவும் B தரத்திலான ஆதார வைத்தியசாலை சுத்திகரிப்புச் சேவையை வழங்கிய அனுபவத்தைக் கொண்டிருப்பின் A தரத்திலான ஆதார வைத்தியசாலை தொடர்பாக விண்ணப்பிக்கவும். குறித்த துறையில் அனுபவத்தைக் கொண்டுள்ள நிறுவனங்களுக்கு C தரத்திலான பிரதேச வைத்தியசாலை/ சுகாதார நிறுவனங்கள் மற்றும் தரம் B பிரதேச வைத்தியசாலைகள் தொடர்பாக விண்ணப்பிக்கலாம்.

04. மீளளிக்கப்படும் விலைமனுப் பிணைத் தொகை தொடர்பாக வங்கிப் பிணையொன்றினால் சமர்ப்பிக்கப்படுவதாயின் மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியை விட இரண்டு மடங்கிற்குச் சமமான தொகையொன்று 2021.01.08 வரை செல்லுபடியாகும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனையற்ற வங்கிப் பிணையொன்றையோ அல்லது அந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு ரொக்கப்பணத்தில் வைப்புச் செய்வதானால் விலைமனு மாதிரிப் படிவத்தில் வழங்கப்படும், நிறுவனத்தில் வைப்புச் செய்யப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப் பிரதி விலைமனுப் பத்திரத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

05. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுப் பத்திரங்கள், இரண்டு பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் ‘மூலப் பிரதி’ மற்றும் ‘நகல் பிரதி’ வெவ்வேறான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு, குறித்த தபாலுறைகள் தனி தபாலுறையொன்றினுள் சேர்க்கப்பட்டு, அதன் இடது பக்க மேல் மூலையில் ‘சுத்திகரிப்புச் சேவையை வழங்குவது தொடர்பான விலைமனுப் பத்திரங்கள் 2021’ (நிறுவனத்தின் பெயர் மற்றும் தொடரிலக்கம்) குறிப்பிடப்படல் வேண்டும்.

06. 2020.10.07 அன்று மு.ப. 10.30 மணிக்கு முன்னர், முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனு மாதிரிப்பத்திரம் வழங்கப்படும் நிறுவனத்தின் விலைமனுப் பெட்டிக்குச் சேர்க்கப்படல் வேண்டும். அவ்வாறில்லையெனில் மேற்படி நேரத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு தலைவர், விலைமனு மாதிரிப் பத்திரங்கள் வழங்கப்படும் நிறுவனத்தின் பெயர் ஊவா மாகாண சுகாதார அமைச்சு எனின், தலைவர், ஊவா மாகாண சுகாதார அமைச்சு, இலக்கம் 301, ஆர்.எச் குணவர்தன மாவத்தை, பதுளை என்ற முகவரிக்கும் விலைமனு மாதிரிப் பத்திரங்கள் வழங்கப்படும் நிறுவனம் ஊவா மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் எனின், தலைவர், ஊவா மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், இலக்கம் 301, ஆர்.எச் குணவர்தன மாவத்தை, பதுளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

விலைமனுக்கள் பொறுப்பேற்று முடிவடைந்தவுடன் உடனடியாக விலைமனுமாதிரிப் பத்திரங்கள் வழங்கப்படும் நிறுவனத்தில் குறித்த விலைமனுக்கள் திறக்கப்படும். அச் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமுள்ள பிரதிநிதியொருவருக்கு அதில் கலந்துகொள்ளலாம். குறித்த திகதி மற்றும் குறித்த நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும், நிராகரிக்கும் அல்லது பகுதியொன்றைப் அங்கீகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவிற்குரியதாகும்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**ஊவா மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**இலக்கம் 301, ஆர்.எச் குணவர்தன மாவத்தை, பதுளை.**
**தொ.பே: 055-2231981/ 055-4936294**
**பெக்ஸ்: 055-2223698/ 055-2224325**

For classified advertisements and for replies
received in response to advertisements published under Lake House box numbers
Please Contact → MANAGER FRONT OFFICE → Hotline: 1949
LAKE HOUSE

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா.)

(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு, வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)

### நிறைவேற்றுப பொறியியலாளர் பிரிவுகளில் பராமரிப்பு வேலைக்காக சேவையில் ஈடுபடுத்துவதற்கு வாடகை அடிப்படையில் வைபிரேடிங் ரோல் (01 தொன்)மற்றும் பிளேஸ் கம்பெக்டர் இயந்திரத்தைப் பெற்றுக்கொள்ளல்

**PRDA/WP/Sup/2020/32**

இவ் அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவுகளில் அன்றாட வீதி பராமரிப்புக்காக சேவையில் ஈடுபடுத்துவது சார்பாக வாடகை அடிப்படையில் வைபிரேடிங் ரோல் (01 தொன்) மற்றும் பிளேட் கம்பெக்டர் இயந்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு பெறுகைக்குழுவின் தலைவரால் கேள்விகள் கோரப்படுகின்றன.

இதற்கான பெறுகை ஆவணத் தொகுதியை 2020.09.14 முதல் 2020.09.24 மு.ப. 9.00 முதல் பி.ப. 2.45 வரை இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் பரீட்சித்துப் பார்க்க முடியும். அத்துடன் அவ் ஆவணத் தொகுதியை மீளளிக்கப்படாத ரூ. 1,080.00 படிவக் கட்டணத்திற்கு உட்பட்டு இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் திறத்தல் 2020.09.25 பி.ப. 2.30 இற்கு இலக்கம் 59, சென். செபஸ்தியன் மேடு, கொழும்பு-12 இல் அமைந்துள்ள மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைமையகத்தில் இடம்பெறும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர், பெறுகைக்குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா.)**
**இலக்கம் 59, சென். செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு-12.**
**011-5676903**

## சிறு விளம்பரம்

### வேலைவாய்ப்பு



**312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்**

இங்கிரிய பலகை ஏற்றுமதி தொழிற்சாலைக்கு வேலையாட்கள் தேவை. மெஷின் ஒபரேட்டர் செயின் ஸோ ஒபரேட்டர், சம்பளம் 30, 000 ஓவர்டைம், த ங்குமிட வ ச தி, சாப்பா டு இல வசம். 070525 425 8. 053952

### மோட்டார் வாகனங்கள்


**108 நிஸான் கார் விற்பனைக்கு**

301-5309 Nissan cefiro, 1996, car, கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ. பே. 071 4542958, 071 4515236 053805




**117 வேன்கள் விற்பனைக்கு**

CP PK-0147 Daihatsu hijet, 2016 van, கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிப ல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ .பே. 071454295 8, 071451523 6 053807



**118 ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு**

NW CAC-3871 Honda vezel, 2014, கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ .பே. 071454295 8, 071451523 6 053809



**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

WP YI-4494 Bajaj, 2011, threewheel, கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 07 1 12 108 10 053802

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# அறிவித்தல்

மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுவதாவது,

**இலக்கம் 679/C, எருவ்வல, பன்னிப்பிட்டி**

என்ற இடத்தில் அமைந்துள்ள

**சியரட்ட அடகு நிலையம்,**

**இலக்கம் 484/2A, எருவ்வல, பன்னிப்பிட்டி**

என்ற இடத்திற்கு மாற்றம் செய்யப்படுகின்றது என்பதாகும்.

# அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்: **குயிக் குரோவ் நெச்சுரல் புரொடக்டஸ் (பிறைவட்) லிமிடட்**
பதிவிலக்கம்: **பீவீ 00210879**
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 09.04.2019
பதிவு முகவரி: **கந்தேகெதர, வெவகம, குளியாப்பிட்டிய.**
**கம்பனி செயலாளர்கள்**

## கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை

### விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

தேசிய ஒப்புமை விலைமனுக்கள் (NCB)

### இலங்கை, கிழக்கு பல்கலைக்கழகத்தில் கட்டிடம் மற்றும் ஏனைய கட்டுமானங்களின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல்

கீழ் தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் பணிகளுக்காக ஆர்வம் கொண்ட பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை, கிழக்கு பல்கலைக்கழகம் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்கப்படுவதோடு 2020.09.29 அன்று மு.ப. 10.30க்கு முடிவுறும்.

2020.09.28ஆம் திகதி வரை விலைமனு ஆவணங்களை சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் (மூலதனப் பணிகள் மற்றும் திட்டமிடல்) இருந்து பெறலாம் அல்லது இலங்கை கிழக்கு பல்கலைக்கழக இணையதளத்தில் இருந்து **(http://www.esn.ac.lk)** தரவிறக்கம் செய்யலாம்.

| தொ. இல. | பணி விபரம் | VAT தவிர்த்து மதிப்பிடப்படும் செலவு | தேவையான ICTAD/CIDA தரம் மற்றும் சிறப்புத்தன்மை |
|---|---|---|---|
| 01 | பலாச்சோலை, கி.ப. விவசாய பீடத்தில் Aluminium Partition வழங்கல் மற்றும் பொருத்துதல் | 1,000,782.00 | C9 மற்றும் C8 கட்டிடம் |
| 02 | கி.ப. Server Room/CICT மற்றும் விவசாய மற்றும் தொழில்நுட்ப பீடத்திற்கு இடையே Fiber Backbone வழங்கல், நிறுவுதல், செயற்படவைத்தல் மற்றும் விரிவுபடுத்தல் | 7,656,600.00 | EM 4 அல்லது மின் நிறுவல்கள் (குறைந்த மின்னழுத்தம் (EI-LV) அல்லது அதற்கு மேல் |

தேசிய போட்டிரீதியான விலைமனு முறை (NCB) மூலம் விலைகேட்பு நடத்தப்படும்.

ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் பல்கலைக்கழக இணையதளத்தில் அல்லது செங்கலடி, இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தில் எந்த ஒரு வேலை நாட்களிலும் 9.00 மணி தொடக்கம் 14.00 மணி வரை சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (CW&P) 065 2240589, பணி பொறியியலாளர் 065 2240582 மற்றும் வலையமைப்பு முகாமையாளர் 065 2240166 என்ற தொலைபேசி இலக்கங்களில் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக்குழு**
**கிழக்கு பல்கலைக்கழகம்,**
**வந்தாறுமூலை, செங்கலடி**
15.09.2020

## இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

## கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம்

### விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### இலங்கையின் கரையோர நீரிலுள்ள பாவிக்க முடியாத படகுகள், புகையிரதப் பெட்டிகள், புகையிரதப் பாதை சிலிப்பர் கட்டைகள் மற்றும் பஸ் ஷெல்களை ஏற்றுதல் போக்குவரத்து செய்தல் மற்றும் இறக்குதல்

**(LOADING, TRANSPORT AND UNLOADING UNUSABLE BOATS, RAIL COMPARTMENTS, RAILWAY SLEEPERS AND BUS SHELLS IN SRI LANKAN COASTAL WATER)**

**ஒப்பந்த இல. DFAR-DPC-2020-15**

கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம் (இதன் பின் DFAR எனக் குறிப்பிடப்படும்) சார்பில் திணைக்களப் பெறுகைக் குழு தலைவரின் சார்பில் இலங்கையின் கரையோர நீரிலுள்ள பாவிக்க முடியாத படகுகள், புகையிரதப் பெட்டிகள், புகையிரதப் பாதை சிலிப்பர் கட்டைகள் மற்றும் பஸ் ஷெல்கள் மற்றும் ஏனைய நிர்மாணப் பொருட்களை ஏற்றுதல் போக்குவரத்து செய்தல் மற்றும் இறக்குதல் என்பவற்றுக்காக தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விலைமனுதாரர்களிடமிருந்து (தனி நபர்கள் அல்லது நிறுவனங்கள்) முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

01. **வேலை தொடர்பான விபரங்கள்**
கடற்றொழில் துறைக்கு இயைபான கடல் பல்லுயிர் (Marine Biodiversity), கடல்சார் சூழல் முறைமையைப் பாதுகாக்கும் பொருட்டு பயன்படுத்தும் கடல் பல்லுயிர்களை அதிகரிப்பதை இலக்காகக் கொண்டு கடலுக்கடியில் செயற்கை அடிமூலக்கூறுகளை (Artificial Substrates) உருவாக்குவதற்கு DFAR எதிர்பார்க்கின்றது. இதன் பிரகாரம் இலங்கையின் கரையோர நீருக்கருகிலுள்ள ஒதுக்கப்பட்ட (Condemned) பைபர் கிளாஸ் படகுகள், புகையிரதப் பெட்டிகள் மற்றும் பஸ் ஷெல் பகுதிகள், புகையிரதப் பாதை சிலிப்பர்கள் மற்றும் ஏனைய நிர்மாணப் பொருட்கள் போன்றவற்றை வைப்பதற்கு செயற்கை அடிமூலக்கூறுகளை உருவாக்குவதற்குத் தேவையான திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. அதனால் அத்திட்டத்தின் பிரகாரம் ஏதாவதொரு நீருக்கடியிலான போக்குவரத்து முறைமை வேலை தொடர்பாக (கடல் அல்லது தரை இரண்டிலும்) தரை திட்டத்தின் பிரகாரம் எந்த போக்குவரத்து முறைமையையும் பயன்படுத்தி இயைபுடைய நிர்மாணப் பொருட்களையும் போக்குவரத்து செய்து கொண்டு வைப்பதற்கான கொள்ளளவு இருத்தல் வேண்டும்.

02. செயற்கை அடிமூலக்கூறுகளை உருவாக்க எதிர்பார்க்கும் அமைவிடம்:
இலங்கை கடற்கரையின் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடல் வேலைத்தளம் வரையாயும் ஏறக்குறைய 5-15 கடல் மைல் தூரமாகும்.

3. சர்வதேச போட்டி ரீதியிலான விலைக்கோரல் ஊடாக விலைக்கோரல் நடைமுறைப்படுத்தப்படும்.

4. இந்நோக்கத்திற்கான சேவைக் காலம் 1 வருடமாகும்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றையும் அத்துடன் மீளளிக்கப்படாத ஐயாயிரம் (இல. ரூ. 5,000.00) இலங்கை ரூபாவை 2020 செப்டெம்பர் 15ஆம் திகதி முதல் 2020 ஒக்டோபர் 06ஆம் திகதி வரையான வேலை நாட்களில் பின்வரும் முகவரியில் 3ஆம் தளத்திலுள்ள நிதிப் பிரிவிற்குச் செலுத்துவதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளல் வேண்டும்.

6. பின்வரும் முகவரியின் 3ஆம் தளத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் 2020 செப்டெம்பர் 23ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும்.

7. சகல விலைமனுக்களுடனும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியினால் வழங்கப்பட்ட விலைமனு ஆவணத்தின் தரப்பட்டுள்ள வடிவத்தைப் பயன்படுத்தி கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பெயரிலான ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் (இல. ரூபா. 150,000.00) இலங்கை ரூபாவுக்கான விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அந்த விலைமனுப் பிணை முறியானது விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 2020 நவம்பர் 09ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும். அல்லாவிடில் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தில் ரொக்கப் பணமாக வைப்புச் செய்தல் வேண்டும்.

8. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதி நாள் முதல் 91 நாட்கள் வரையில் விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.

9. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது 2020 ஒக்டோபர் 07ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் இதே வளவில் 3ஆம் தளத்திலுள்ள நிதிப் பிரிவின் கணக்காளர் (வழங்கல்கள்) அவர்களின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

10. விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்ட (2020 ஒக்டோபர் 07ஆம் திகதி) உடனடுத்து இதே வளவின் 3ஆம் தளத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் சமுகம் தந்திருக்கும் விலைமனுதாரர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

11. விலைமனுக்களைத் தயாரித்தல், ஒப்படைத்தல் சம்பந்தமான எந்தவொரு செலவினங்கள் அல்லது கிரயத்திற்கும் DFAR பொறுப்புக்கூற மாட்டாது.

12. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் கணக்காளர் (வழங்கல்கள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 011-2472185 அல்லது 071-4425594 (dfarwtend@gmail.com) மற்றும் 2020 செப்டெம்பர் 15ஆம் திகதி முதல் 2020 ஒக்டோபர் 06ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பின்வரும் முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

13. எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தில் பணிப்பாளர் நாயகம் தன்னகத்தே கொண்டுள்ளார்.

14. மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:
**தலைவர், திணைக்களப் பெறுகைக் குழு,**
**கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம்,**
**புதிய செயலகக் கட்டிடம்,**
**மாளிகாவத்தை, கொழும்பு-10.**
**தொடர்புகொள்ள வேண்டிய நபர்: கணக்காளர் (வழங்கல்கள்) DFAR**
**தொலைபேசி: 011-2472185 அல்லது 071-4425594, தொலைநகல்: 011-2472185**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம்.**

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)

### ABC கல் (கலப்புக் கல்) வழங்கப்பெறுதல்

கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் செயற்றிட்டங்களுக்கு இயைபாக மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பின்வரும் நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகங்களுக்குத் தேவையான ABC கல்லை (கலப்புக் கல்) வழங்கப் பெற்றுக்கொள்வதற்கு கல் கிறஷர் இயந்திரங்கள் மற்றும் கற்குழி உரிமையாளர்களான வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | நிறைவேற்றுப் பொறியியலாளரின் அலுவலகம் | அளவு $m^3$ | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் (வற் வரியின்றி) ரூபா | கேள்விப் பிணையின் பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | | | | வங்கி பிணை மூலம் | பணமாக |
| PRDA/WP/SUP/2020/36 | நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - கொழும்பு | 2648 | 2,000.00 | ரூ. 88,000.00 | ரூ. 44,000.00 |
| PRDA/WP/SUP/2020/37 | நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - மொரட்டுவ | 1525 | 2,000.00 | ரூ. 51,000.00 | ரூ. 25,500.00 |
| PRDA/WP/SUP/2020/38 | நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - அவிசாவளை | 5500 | 2,000.00 | ரூ. 183,000.00 | ரூ. 91,500.00 |
| PRDA/WP/SUP/2020/39 | நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - ஹொரண | 8996 | 2,000.00 | ரூ. 300,000.00 | ரூ. 150,000.00 |
| PRDA/WP/SUP/2020/40 | நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - களுத்துறை | 600 | 2,000.00 | ரூ. 20,000.00 | ரூ. 10,000.00 |
| PRDA/WP/SUP/2020/41 | நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - கிரிந்திவெல | 3100 | 2,000.00 | ரூ. 103,000.00 | ரூ. 51,500.00 |
| PRDA/WP/SUP/2020/42 | நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - நிட்டம்புவ | 7926 | 2,000.00 | ரூ. 264,000.00 | ரூ. 132,500.00 |
| PRDA/WP/SUP/2020/43 | நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - உடுகம்பொல | 4221 | 2,000.00 | ரூ. 140,000.00 | ரூ. 70,000.00 |
| PRDA/WP/SUP/2020/44 | நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - நீர்கொழும்பு | 3070 | 2,000.00 | ரூ. 102,000.00 | ரூ. 51,000.00 |

02. இதன் பொருட்டான கேள்வி ஆவணத் தொகுதியினை 2020-09-16ஆம் திகதியிலிருந்து 2020-09-28ஆம் திகதி மு.ப. 8.30 இலிருந்து பி.ப. 2.45 மணி வரை மேற்குறிப்பிடப்பட்ட கேள்விப்படிவக் கட்டணத்தைச் செலுத்தி இவ்வதிகார சபையின் கேள்விப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை பணமாக அல்லது வங்கிப் பிணை மூலம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. இப்பெறுகைக்கான தகைமையைப் பெறுவதற்கு கேள்வித் தொகை 5.0 மில்லியன் ரூபாவை விஞ்சுமானால் கேள்விதாரரினால் 1987 03ம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ம் பிரிவின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. இந்தக் கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் 2020-09-29ஆம் திகதி மு.ப. 10.30 மணியாகும் என்பதுடன் அவ்வேளையிலேயே இவ்வலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும். இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**மாகாண வீதி. அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**
**தொ. இலக்கம் 011-5676903**

தினகரன்
விளையாட்டு
2020 செப்டெம்பர் 15 செவ்வாய்க்கிழமை
sportstkn@lakehouse.lk



## அமெரிக்க பகிரங்க டென்னிஸ்:

# மகுடம் சூடினார் டொமினிக் தீம்



அமெரிக்கா பகிரங்க டென்னிஸ் இறுதிப்போட்டியில் ஆஸ்திரியாவை சேர்ந்த டொமினிக் தீம் சம்பியன் பட்டம் பெற்றார்.

அமெரிக்கா பகிரங்க டென்னிஸ் போட்டியில் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் ஆஸ்திரியாவைச் சேர்ந்த டொமினிக் தீம், ஜெர்மனி வீரர் அலெக்சாண்டர் ஸ்வெரேவுடன் மோதினார். முதல் செட்டை 6-2 என ஸ்வெரேவ் எளிதில் கைப்பற்றினார்.

இரண்டாவது செட்டையும் 6-4 என கைப்பற்றி அசத்தினார்.

மூன்றாவது செட்டில் தீம் ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அதன்பயனாக அவர் 3வது செட்டை 6-4 என கைப்பற்றினார். தொடர்ந்து 4வது செட்டையும் 6-3 என கைப்பற்றினார்.



வெற்றியாளரை நிர்ணயிக்கும் 5வது செட்டிலும் தீம் ஆக்ரோஷமாக ஆடினார். இதனால் அந்த செட்டையும் 7-6 எனக் கைப்பற்றி அசத்தினார்.

இறுதியில், 2-6, 4-6, 6-4, 6-3, 7-6 (6) என ஸ்வெரேவை வீழ்த்தி டொமினிக் தீம் சம்பியன் பட்டம் வென்றார்.

இந்தப் போட்டி 4 மணி நேரம் நடைபெற்றது. முதல் 2 செட்டை இழந்தாலும் தளராமல் ஆடி டொமினிக் தீம் இறுதியில் பட்டம் வென்றது குறிப்பிடத்தக்கது.

SINCE 1978
42nd
OBSERVER MOBITEL
SCHOOL CRICKETER
OF THE YEAR 2020
Recognizing talent, inspiring greatness.
Sri Lanka Telecom Mobitel
உங்களுடனே. என்றும்.

## 42வது ஒப்சவர்-மொபிடெல்

### மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை- 2020

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் ஒப்சேவர் - மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2020**

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2020**

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..............................

வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐

தேசிய மட்ட வீராங்கனை : ..............................

**(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)**

பாடசாலை : ..............................

வாக்களித்தவர் பெயர் : ..............................

முகவரி : ..............................

மொபைல் இல. : ..............................

SUNDAY OBSERVER

**Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்**

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

1வது பரிசு : Mobitel 4G Wi-Fi Router
2வது பரிசு: ரூ. 2,500
3வது பரிசு: ரூ.1,500
4வது பரிசு: ரூ. 1,000

42வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**நிபந்தனைகள்:**

மொபிடெல் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி **2020-09-19** இல. **28**

UNLIMITED
YouTube
HD quality up to 25GB*
மாதாந்தம்
ரூ.249+வரிகள்
அழையுங்கள் #170#
TRC/M/Promo/20/01
4G LTE
Sri Lanka Telecom Mobitel
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

## 2ஆவது ஒருநாள் போட்டியில் ஆஸியை 24 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது இங்கிலாந்து

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 2வது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணி 24 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆரோன் பிஞ்ச் தலைமையிலான அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது.20 ஓவர் தொடரை 12 என்ற கணக்கில் இழந்த அவுஸ்திரேலியா அடுத்து 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் ஆடுகிறது.

முதல் ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணியை 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்துயது அவுஸ்திரேலியா.

இந்நிலையில், இங்கிலாந்துஅவுஸ்திரேலியா இடையிலான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி மான்செஸ்டரில் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

இதையடுத்து, இங்கிலாந்து அணி களமிரங்கியது. அந்த அணியில் எந்த வீரரும் நிலைத்து நின்று ஆடவில்லை.

சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் வீழ்ந்தன. ஜோ ரூட் 39 ஓட்டங்கள், மார்கன் 42 ஓட்டங்கள், டொம் குரன் 37 ஓட்டங்கள் மற்றும் ஆடில் ரஷீத் 35 ஓட்டங்களும் எடுத்தனர்.



இறுதியில், இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 231 ஓட்டங்கள் எடுத்தது. அவுஸ்திரேலியா சார்பில் சம்பா 3 விக்கெட், ஸ்டார்க் 2 விக்கெட் வீழ்த்தினர்.

இதைத்தொடர்ந்து 232 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அவுஸ்திரேலியா அணி விளையாடியது. தொடக்க ஆட்டக்காரர் ஆரோன் பிஞ்ச் பொறுப்புடன் ஆடி அரை சதமடித்தார். அவர் 73 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

அரைச் சதமடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட லாபஸ்சாக்னே 48 ஓட்டங்களில் வெளியேறினார். அலெக்ஸ் கேரி 36 ஓட்டங்கள் சேர்த்தார். மற்றவர்கள் விரைவில் வெளியேறினர்.

இறுதியில் அவுஸ்திரேலிய அணி 207 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இதையடுத்து 24 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்ற இங்கிலாந்து, ஒருநாள் தொடரை11 என சமன் செய்துள்ளது.

இங்கிலாந்து சார்பில் ஜோப்ரா ஆர்ச்சர், வோக்ஸ், சாம் கரன் ஆகியோர் தலா 3 விக்கெட் வீழ்த்தினர். ஆட்ட நாயகனாக ஜோப்ரா ஆர்ச்சர் தேர்வு செய்யப்பட்டார்.

## சவளக்கடை றோயல் விளையாட்டு கழக புதிய சீருடை அறிமுகம்

**(சவளக்கடை குறூப் நிருபர்)**

சவளக்கடை 6ஆம் கொளனி றோயல் விளையாட்டுக் கழகத்தின் புதிய அங்கி அறிமுக சினேகபூர்வ கடினபந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி கடாக்கோ நிறுவனத்தின் அனுசரணையில் 6ஆம் கொளனி அல்தாஜூன் பாடசாலை மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.



20 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அணிக்கு 11பேர் கொண்ட கடினபந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி றோயல் விளையாட்டுக் கழகத்திற்கும், வீரத்திடல் விளையாட்டுக் கழகத்திற்குமிடையிலான சினேகபூர்வ அங்கி அறிமுக கடினபந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் றோயல் விளையாட்டுக் கழகம் 37 ஓட்டங்களினால் வெற்றியை தனதாக்கிக்கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற றோயல் விளையாட்டுக் கழகம் முதலில் துடுப்படுத்தாடி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கட்டுகளை இழந்து 181 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வீரத்திடல் விளையாட்டுக் கழகம் 19.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கட்களையும் இழந்து 144 ஓட்டங்களை பெற்று தோல்வியைத் தழுவிக்கொண்டது. போட்டியின் ஆட்டநாயகன் விருதை றோயல் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த வீரர் ஏ.எம். சனீர் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வு றோயல் விளையாட்டுக்கழகத்தின்தலைவரும், கடாக்கோ வெல்டிங் சொப் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருமான ஏ.எம்.வசீர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வுக்கு முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கே.எம்.ஜவாத் பிரதம அதிதியாக கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் குளோபல் இம்போர்ட், எக்ஸ்போட் டிரேடிங் கம்பனி உரிமையாளர் ஏ.எம்.ஜனீஸ், தொழிலதிபர் ஜே.எம்.பாஹிம், சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.எல்.பைசாத், றோயல் விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் உதைபந்தாட்ட தலைவர் எம்.ஐ.ஜூனைதீன், மைட்டி வோரியஸ் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் எம்.எச்.எம்.கபீர், தொழிலதிபர் எம். மஜீட், அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ.எம்.அஸ்வர், எம்.எச்.எம்.மபாஸ், சாளம்பைக்கேணி02, கிராமிய அபிவிருத்தி சங்க தலைவர் யூ.எல்.தௌபீக், உள்ளிட்ட முக்கியஸ்தர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

## லங்கா பிரிமியர் லீக் வீரர்கள் ஏலத்தில் பங்கேற்கும் பாகிஸ்தான் வீரர்கள் பட்டியல் வெளியீடு

இந்த ஆண்டு (2020) முதல் முறையாக நடைபெறவிருக்கும் லங்கா பிரிமியர் லீக் (எல்.பி.எல்.) ரி 20 தொடரின் வீரர்கள் ஏலம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 01ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டதனை அடுத்து, குறித்த வீரர்கள் ஏலத்தில் பங்கெடுக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.



லங்கா பிரிமியர் லீக் தொடருக்கான வீரர்கள் ஏலத்தில் 150 இற்கு கிட்டவான வெளிநாட்டு வீரர்கள் பங்கெடுப்பார்கள் எனக் கூறப்பட்ட நிலையில், தற்போது வெளியிடப்பட்டிருக்கும் பட்டியலின் படி அதில் 24 பேர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என "Geo Super" செய்தி நிறுவனம் உறுதி செய்திருக்கின்றது.

லங்கா பிரிமியர் லீக் வீரர்கள் ஏலத்திற்கு நட்சத்திர சகலதுறைவீரரான சஹீட் அப்ரிடியே அதிக அடிப்படை விலையில் வரும் பாகிஸ்தான் வீரராக காணப்படுகின்றார். அப்ரிடியின் அடிப்படை விலை 60,000 அமெரிக்க டொலர்கள் (இலங்கை நாணயப்படி அண்ணளவாக 12 மில்லியன்) என மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

லங்கா பிரிமியர் லீக் தொடரில் விளையாடும் அணிகளில் ஒன்றான காலி கிளேடியட்டர்ஸ் அணி தமது நட்சத்திரவீரராக சஹீட் அப்ரிடியினை, கடந்த வாரம் அறிவித்திருந்தமை குறப்பிடத்தக்கது.

பாகிஸ்தானிலிருந்து லங்கா பிரிமியர் லீக் தொடருக்காக வரும் ஏனைய வீரர்களில் சொஹைப் மலிக்கின் அடிப்படை விலை 50,000 அமெரிக்க டொலர்கள் என நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதோடு, மொஹமட் ஆமிர், மொஹமட் ஹபீஸ் மற்றும் வஹாப் ரியாஸ் ஆகியோரின் அடிப்படை விலையாக 40,000 டொலர்கள் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றது.

இந்த வீரர்கள் தவிர விக்கெட்காப்பு துடுப்பாட்டவீரர் சர்பராஸ் அஹ்மட், கம்ரான் அக்மல், சர்ஜீல் கான், மொஹமட் இர்பான், யாசிர் சாஹ், இமாம்உல்ஹக், ஹாரிஸ் சொஹைல், மொஹமட் சமி, உமர் குல், மொஹமட் அப்பாஸ், சொஹைல் தன்வீர், ஜூனைத் கான், இமாத் வஸீம், அன்வர் அலி, மொஹமட் நவாஸ். ஹூசைன் தலாட், அசிப் அலி, இப்திகார் அஹ்மட் மற்றும் ரூமான் ரயீஸ் ஆகியோர் லங்கா பிரிமியர் லீக் தொடருக்கான வீரர்கள் ஏலத்தில் பங்கேற்கும் ஏனைய பாகிஸ்தான் வீரர்களாக காணப்படுகின்றனர்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திரங்களான வசீம் அக்ரம் மற்றும் சொஹைப் அக்தார் ஆகியோர் லங்கா பிரிமியர் லீக் தொடரில் பங்கெடுக்கும் அணிகளுக்கு ஆலோசகர்களாக கடமைபுரிவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளாக கூறப்படுகின்றது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 செப்டெம்பர் மாதம் 15ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# பெறுகை அறிவித்தல்

## வடமத்திய மாகாண சபை

## மாகாண ஆயுர்வேதத் திணைக்களம்

## உலர்ந்த மூலிகை வழங்கும் சேவை 2020/2021 வருடங்கள்

வடமத்திய மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளுக்கு உலர்ந்த மூலிகைகளை வழங்கும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக வடமத்திய மாகாண சபையின் சுகாதார அமைச்சின் பெறுகைக் குழுத் தலைவர் / மாகாண சுகாதார செயலாளராகிய என்னால் முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொ இல. | தேவைப்படும் சேவை | கேள்வியுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற நிதி நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட 2020-10-06ஆம் திகதி முதல் 91 நாட்களுக்குச் செல்லுபடியாகும் நிபந்தனைகளற்ற கேள்விப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|
| 01 | உலர்ந்த மூலிகைகள் வழங்கல் வடமத்திய மாகாணத்தின் சகல ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கும் உலர் மூலிகைகள் வழங்கல் | 390,000.00 | 1,000.00 |

02. மேற்படி வழங்கல்களுக்கு இயைபான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களினால் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை வடமத்திய மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்தின் கணக்காளருக்குச் செலுத்தியதன் பின்னர் 2020-09-15ஆம் திகதி முதல் 2020-10-05ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். குறித்த நேரத்தினுள் கேள்வி ஆவணங்கள் மற்றும் அறிவுரைப் படிவங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் மேலதிக விபரங்கள் தேவையாயின் 025-2225397 எனும் தொலைபேசி இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

03. உங்களால் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை ஒவ்வொரு நிறுவனத்தின் பொருட்டும் வெவ்வேறாகத் தயாரித்து, மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து 2020-10-06ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் தவிசாளர்/ செயலாளர், அமைச்சரவையினால் நியமனம் செய்யப்பட்ட பெறுகைக் குழு, மாகாண சுகாதார அமைச்சு, 3வது மாடி, மாகாண சபை அலுவலக கட்டிடத்தொகுதி, ஹரிஸ்சந்திர மாவத்தை, அனுராதபுரம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது சுகாதார செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த நிறுவனம் மற்றும் சேவையை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். ஒவ்வொரு நிறுவனம் மற்றும் சேவைகளுக்காக அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் கேள்விகள் திறக்கப்படும் நாள் முதல் 91 நாட்களுக்குச் செல்லுபடியாகும் கேள்விப் பிணை முறியொன்றை வெவ்வேறாகச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அவற்றை மாகாண ஆயுர்வேத ஆணையாளரின் பெயரில் பெற்றிருத்தல் வேண்டும்.

04. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு முடிவடைந்த உடனடுத்து கேள்விகள் திறக்கப்படும். நிர்ணயிக்கப்பட்ட நேரத்தின் பின் கிடைக்கப்பெறும் எந்தவொரு கேள்வியும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

05. இந்த பெறுகை செயற்பாடுகள் தொடர்பில் வடமத்திய மாகாண சுகாதார அமைச்சின் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**செயலாளர் / தவிசாளர்**
**மாகாண சுகாதார அமைச்சின் பெறுகைக் குழு.**
**மாகாண சுகாதார அமைச்சு,**
**3வது மாடி,**
**மாகாண சபை அலுவலகக் கட்டிடத் தொகுதி,**
**ஹரிஸ்சந்திர மாவத்தை,**
**அனுராதபுரம்.**

**2020-09-15.**

---

# தபால் திணைக்களம்

## வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2021

தபால் திணைக்களத்தின் தேவைப்பாடுகளுக்காக பண்டங்கள் மற்றும் சேவை பெறுகைகளின் போது சந்தை விலை நடைமுறையின் கீழாக விலைமனுக் கோரி அத்தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக தகுதியுள்ள வழங்குநர்களிடமிருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாகாணங்களில் பதிவு செய்து கொள்ளப்படுகின்றனர்.

**பதிவு செய்து கொள்ளப்படும் மாகாணங்கள்:**

| | | |
|---|---|---|
| A - மேல் மாகாணம் | D - மத்திய மாகாணம் | G - வடமத்திய மாகாணம் |
| B - ஊவா மாகாணம் | E - வட மாகாணம் | H - தென் மாகாணம் |
| C - கிழக்கு மாகாணம் | F - வடமேல் மாகாணம் | I - சப்ரகமுவ மாகாணம் |

**பதிவு செய்து கொள்ளப்படும் பண்டங்கள் மற்றும் சேவை உருப்படிகள்:**

**இலக்கம் பண்டங்கள் (உருப்படிகள்)**

01 காகிதாதிகள்
02 மின்சார துணையுறுப்புக்கள்
03 கணனி மற்றும் கணனி உதிரிப்பாகங்கள்
04 அலுவலக இயந்திர உபகரணங்கள் மற்றும் துணையுறுப்புக்கள்
05 நிறுவை, அளவை உபகரணங்கள்
06 பொதி செய்யும் உபகரணங்கள் (எண்ணெய்யுடன் கூடிய (Twin) கயிறு டின் டொக்கட், முத்திரை Sealing Wax மற்றும் ஈயம் முத்திரை)
07 முகக்கவசம், முகமூடி மற்றும் நுண்ணுயிர்க் கொல்லி திரவங்கள்
08 கட்டிடப் பொருட்கள்
09 அலுவலக வீட்டுத் தளபாடங்கள்
10 வளிச்சீராக்கி இயந்திரம்
11 சுகாதாரப் பொருட்கள்
12 இறப்பர் முத்திரை, தின முத்திரை மற்றும் பொலிமர் முத்திரை
13 பித்தள முத்திரை (தபால் பொதிகளை மூடுவதற்கு உபயோகிக்கப்படும் பித்தளை முத்திரை)
14 தபால் முத்திரைக்கான மை
15 பொலிசெக் உறைகள்
16 கென்வஸ் பைகள்/ ஸவல் பைகள்/ தோல் பை உள்ளிட்ட அனைத்து வகையான பேக்
17 சீருடைகளுக்கான துணி
18 சப்பாத்து மற்றும் மேஸ்
19 குடை, மழைக் கவசம், தொப்பி
20 அனைத்து வகைவாகனங்களுக்குமான டயர், டியூப் மற்றும் பற்றரி
21 அனைத்து வகை வாகனங்களுக்குமான உதிரிப்பாகங்கள்
22 பரிசுப் பொருட்கள் (டீசேர்ட்/ கெப்/ பேக்/ நினைவுச் சின்னங்கள் போன்றவற்றை அச்சிடல்)
23 பார்சல்களை பொதியிட முடியுமான பெட்டிகளை வழங்கல்
24 முத்திரைகளைப் பாதுகாக்கும் புத்தகங்கள், முதல் நாள் தபாலுறைகளைப் பாதுகாக்கும் புத்தகங்கள், தபாலட்டைகள் மற்றும் முத்திரைகளைப் பதிப்பவை
25 பொலித்தின் சார்ந்த தயாரிப்புகள்/ செலோ/போன் (முத்திரை மற்றும் நினைவுப் பத்திரிகைகளைப் பதிப்பவை)
26 மின் பிறப்பாக்கிகள்

**இலக்கம் சேவைகள் மற்றும் நிர்மாணிப்பு உருப்படிகள்:**

1. கட்டிட திருத்த வேலைகள், அலுவலக பிரிப்பு வேலைகள், நீர்க்குழாய் தொகுதி திருத்த வேலைகள், மின்சார வலையமைப்பின் திருத்த வேலைகள் மற்றும் சிறிய பராமரிப்பு வேலைகள் உயர்ந்த பட்சம் ரூ. 10,000,000.00 வரை மற்றும் நிர்மாணிப்புக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை மூலம் வழங்கப்படும் சான்றிதழுடன் (CIDA) தமது விண்ணபத்தை சமர்ப்பிக்க வேண்டும்.
2. கணனி மென்பொருள்
3. பெயர்ப் பலகைகளைத் தயாரித்தல்/ முத்திரை பலகைகளை திருத்தம் செய்தல்
4. சீருடைகளைத் தயாரித்தல்
5. வாகனம் பழுதுபார்த்தல் - பொறிமுறை வேலை, டீசல் பம்பிகளைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல்
6. வாகனங்களைப் பழுதுபார்த்தல் - வாகன வளிச்சீராக்கிகளை பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல்
7. வாகனங்களைப் பழுதுபார்த்தல் - வாகன டின்கரின் மற்றும் பெயின்ற் வேலை
8. வாகனங்களைப் பழுதுபார்த்தல் - வாகன குஷன் வேலை மற்றும் அப்போஸ்ட்ரி வேலை
9. வாகனங்களைப் புதுப்பித்தல் மற்றும் கழுவுதல்
10. கணனிகளைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல், போட்டோ கொப்பி இயந்திரம்/ தட்டச்சு இயந்திரங்களைப் பழுதுபார்த்தல், பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல்
11. வளிச்சீராக்கி இயந்திரங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல்
12. கதிரைகளை இழைத்தல், அலுவலக உபகரணங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல், நிறுவை அளவை உபகரணங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்
13. பலகை மற்றும் கொங்கிறீட் கடிதப் பெட்டிகளைத் தயாரித்தல் மற்றும் பழுதுபார்த்தல்
14. சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழிகளில் அச்சிடும் வேலைகளை மேற்கொள்ளல் (அலங்கார பரிசு, வவுச்சர்கள், தபாலுறைகள், முதல் நாள் தபாலுறை, பல் வகையான புத்தகங்கள், அறிவிப்புகள், படிவங்கள் போன்றவை)
15. பார்கோட் லேபல் அச்சிடல்
16. போக்குவரத்துச் சேவை வாடகைக்கு வழங்கல்
17. விளம்பரப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு - நடவடிக்கைகள்/ படைப்பாற்றல் மிக்க வடிவமைப்புகளைத் தயாரித்தல் மற்றும் மாதிரிகளை நிர்மாணித்தல்
18. உணவு வகைகள் மற்றும் கேட்டரிங் வசதிகளை வழங்கல்
19. தபால் முத்திரை இயந்திரங்களைப் பழுதுபார்த்தல்
20. அலுவலகத்திற்கு திரைச்சீலைகளை வழங்கல்
21. பீடைகளைக் கட்டுப்படுத்தல்
22. ஸ்டிக்கர் அச்சிடல்

**விண்ணப்பிப்பதற்கான தகுதிகள் - வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான நிபந்தனைகள்:**

1. வியாபாரம் இலங்கையில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். (விண்ணப்பத்துடன் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை சமர்ப்பிக்க வேண்டும்.)
2. விலைமனுக் கோரும் போது கவனத்திற் கொள்ளப்படுவது, அந்தந்த நிறுவனங்கள் பதிவு செய்து கொண்டுள்ள மாகாணம் மற்றும் வழங்கல் வகுதி என்பதால் நிறுவனம் பதிவு செய்து கொண்டுள்ள வகுதி மற்றும் மாகாணம் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.
3. விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியது கீழே காணப்படும் மாதிரிக்கமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரம் மூலமாக மாத்திரமேயாகும். பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. பதிவு தொடர்பாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் கவனத்திற்கொள்ளப்பட்டு விண்ணப்பதாரர்களின் தகைமைகள் தொடர்பாக உறுதி செய்யப்பட்டதன் பின்னர் திணைக்களத்தின் வழங்குநரொருவராக பதிவு செய்து கொள்ளப்படும்.
5. போலியான ஆவணங்களை சமர்ப்பித்து வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்ளும் விண்ணப்பதாரர்கள் தொடர்பாக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
6. ஏதேனும் உருப்படிகள் கீழாக பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்கள் அல்லது ஒரு வழங்குநர்/ அல்லது சில அல்லது அனைத்து பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்கள் அல்லது வழங்குநர்களின் பெயர்ப் பட்டியலிற்குப் புறம்பாக விலைமனுக்கள் மூலம் வழங்கல்களைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரம் தபாலதிபரிற்குரியதாகும். இது சவால் விடப்பட முடியாத நிபந்தனையற்ற அதிகாரமொன்றாகும்.
7. ஏதேனும் வழங்குநரொருவரின் வழங்கல்கள் பலவீனமாக காணப்படுமிடத்து அல்லது வழங்கல்களை மேற்கொள்ளும் போது மோசடிகளில் ஈடுபடுவது அல்லது ஏதேனும் முறைகேடான விடயங்கள் இடம்பெற்றுள்ளதென தபாலதிபர் கருதும் பட்சத்தில் அவ்வாறான வழங்குநர்கள் அபகீர்த்தியானோட் பட்டியல்படுத்தப்பட்டு, வழங்குநர்களின் பெயர்ப் பட்டியலிலிருந்து பெயர் அகற்றப்படும் முழு உரிமையும் தபாலதிபரிற்குரியதாகும்.
8. வழங்குநர்களைப் பதிவு செய்வது மற்றும் பதிவு செய்து கொண்ட வழங்குநர்களிடமிருந்து வழங்கல்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக அரசாங்கத்தால் இதுவரை விதிக்கப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் விதிக்கப்பட முடியுமான சட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் ஆலோசனைகளுக்கு கீழாக பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், வழங்குநர்களின் பெயர்ப் பட்டியலில் அல்லது பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்களிடமிருந்து வழங்கல்களைப் பெற்றுக்கொள்ளும் நிபந்தனை நடைமுறைகளில் மாற்றங்களைக் கொண்டுவரும் முழு அதிகாரமும் திணைக்களத்திற்குரியதாகும்.
9. யாதேனும் கட்டளைகள் வழங்கப்பட்டதன் பிற்பாடு 30 நாட்கள் கொடுப்பனவு செலுத்துவதற்காக பெற்றுத்தரப்பட வேண்டியதுடன், குறித்த கட்டளையை வழங்கும் போது ஏற்படும் போக்குவரத்துச் செலவு போன்ற மேலதிக செலவுகள் இருப்பின் அவை வழங்குநர்களால் ஏற்கப்பட வேண்டும்.
10. ஒரு மாகாணம் தொடர்பான பதிவுக் கட்டணம் ரூ. 1000.00 (மாகாணம் ஒன்றிற்கோ அல்லது பலவற்றிற்கோ பதிவு செய்து கொள்ளலாம்.) உருப்படியொன்றிற்கான கட்டணம் ரூ. 500.00 ஆகும். (காசுக் கட்டளையொன்றை தபாலதிபர் பெயரில் தலைமையக தபால் அலுவலகத்தில் மாற்றிக் கொள்ளும் வகையில் தலைமையக சிறாப்பரிற்கு ரொக்கப் பணமாக செலுத்தப்படல் வேண்டும்.)

உங்கள் விண்ணப்பங்களை மாதிரி விண்ணப்பமொன்றாகத் தயரித்து 2020.10.16 அன்று பி.ப. 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கணக்காளர் (பெறுகை) பெறுகைப் பிரிவு (தரை மாடி) தபால் தலைமையகம், 310, டீ.ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு 01000 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டிக்குச் சேர்க்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் சேர்க்கப்படும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்ளல் - 2021" எனக் குறிப்பிட வேண்டும். பதிவு ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து வழங்குநர்களினதும் பதிவு ஏற்றுக்கொள்ளப்பட்டமை தொடர்பில் எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இது தொடர்பான மேலதிக தகவல்களை 011-4927249/ 011-5746194 என்ற தொலைபேசி இலக்கம் மூலம் "கணக்காளரைத் (பெறுகை)" தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**தபாலதிபர்,**
**தபால் திணைக்களம்,**
**310, டீ.ஆர். விஜயவர்தன மாவத்தை,**
**கொழும்பு-01000**

### வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்ளல் - 2021 மாதிரி விண்ணப்பம்

01. பதிவு செய்து கொள்ளப்பட்ட எதிர்பார்க்கப்படும் மாகாணம்
(தெரிவு செய்யப்படும் மாகாணம்/ மாகாணங்கள் தொடர்பாக புள்ளடி இடங்கள்)

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | F | G | H | I |

02. விண்ணப்பிக்கும் உருப்படி
(தெரிவு செய்யப்படும் உருப்படி/ உருப்படிகளுக்கு புள்ளடி இடுங்கள்)

**பண்டங்கள்**

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |

**சேவைகள்**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |

03. நிறுவனத்தின் பெயர்:
04. நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ள தன்மை மற்றும் இலக்கம்:
(நிறுவனம் பதிவு செய்து கொள்ளப்பட்டுள்ள முகவரியின் பிரதியொன்றை இணைத்தனுப்ப வேண்டும்)
05. நிறுவனத்தின் முகவரி:
06. தொலைபேசி இலக்கம்/ பெக்ஸ் இலக்கம்/ ஈமெயில் முகவரி:
07. பெசேவ அறவிடப்படுவதெனின் தெளிவாக, பதிவிலக்கம் குறிப்பிடப்படல் வேண்டும்:
08. நிறுவனத்தின் தொடர்பாடல் அலுவலர்களின் தகவல்கள், பெயர், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி:

மேற்படி தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவையெனவும், தபால் திணைக்களத்தின் "வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்ளல் - 2021" தொடர்பாக உரித்தான தகைமைகள் மற்றும் நிபந்தனைகளை வாசித்துப் பார்த்து சரியாகப் புரிந்து கொண்டு அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ள இணங்குவதாக அறிவிக்கின்றேன்.

**விண்ணப்பதாரரின் கையொப்பம்**

---

## கடற்றொழில் அமைச்சு

அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள் இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு

NAQDA

## இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை

இலங்கைக்கு வெளிநாட்டு செலாவணியை ஈட்டித் தரும் பிரதான வழியாக இதுகாலவரை மேற்கொள்ளப்பட்டு வரும் அலங்கார மீன் கைத்தொழிலுக்கு விசேட அபிவிருத்தி வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான தரவு அடிப்படையைத் தயாரிப்பதற்கு மற்றும் தொடர்புபடுத்துவதற்கும் இலங்கையின் சகல அலங்கார மீன் மற்றும் நீரியல் தாவர கைத்தொழிலில் ஈடுபடுபவர்களைப் பதிவு செய்தல்.

பின்வருவனவற்றை வகைப்படுத்துவதற்கு சார்பான தொழில் முயற்சிகளை இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள்.

**அலங்கார மீன் மற்றும் நீரியல் தாவர கைத்தொழிலில் ஈடுபடுபவர்களைப் பதிவு செய்தல்**

### வகைப்படுத்தல்

- அலங்கார மீன் இனப்பெருக்கம் (Breeder)
- அலங்கார மீன் செய்கை (Grower)
- அலங்கார மீன் விற்பனை நிலையம்
- நீரியல் தாவர செய்கை
- அலங்கார மீன் ஏற்றுமதி
- அலங்கார மீன் இறக்குமதி
- அலங்கார மீன் இணை மற்றும் மீன் உணவு உற்பத்தி மற்றும் ஏற்றுமதி

கீழ்குறிப்பிடப்படும் தகவல்களை தொலைபேசி மூலமாக/ தபால் மூலமாக/ மின்னஞ்சல் மூலமாக அலங்கார மீன், நீர்த்தாவரங்கள் மற்றும் உதிரிகள் பரிமாற்றம் மற்றும் தகவல் நிலையத்துக்கு சமர்ப்பிக்கவும்.

**அலங்கார மீன் மற்றும் நீரியல் தாவர கைத்தொழிலில் ஈடுபடுபவர்களின் தகவல் சேகரித்தல்**

- முழுப் பெயர்:.......................................................
  தே. அடை. அட்டை இல.:................................
- முகவரி:...............................................................
- தொலைபேசி இல.:..........................................
- மாவட்டம்:.........................................................
- பிர. செயலக பிரிவு:..........................................
- வகைப்படுத்தல்:.................................................

**தொலைபேசி இல. 011-2177032**

**தபால் முகவரி :- அலங்கார மீன், நீர்த்தாவரங்கள் மற்றும் உதிரிகள் பரிமாற்றம் மற்றும் தகவல் மையம் இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை இல. 41/1, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த, புத்தரமுல்ல.**

**மின்னஞ்சல்: ofecenter@naqda.gov.lk**

**பதிவு முடிவுறும் திகதி: 2020.10.15**
**மேலும் விபரங்களுக்கு 011-2177032**

## மத்திய மாகாண சபை

# கேள்விக்கான அழைப்பு

## நிர்மாணம் மற்றும் பழுதுபார்த்தல்கள்

### மாகாண ஆயுர்வேத திணைக்களம்

### சுகாதாரம், சுதேச மருத்துவம், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை அமைச்சு

1. கீழே அட்டவணையில் விபரிக்கப்படும் திட்டங்களுக்கு மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் பெறுகைக் குழு தலைவரால் தகைமையுள்ள அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம் பெறாத ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2019.05.10ம் திகதி அரச நிதி சுற்றுநிருபம் 4/2016(II) இன்படி தேசிய போட்டி முறைமையின் கீழ் கேள்விகள் கோரப்படுவதுடன் குறித்த சுற்றுநிருபத்தின்படி மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 50 மில்லியனுக்குக் குறைந்த ஒப்பந்தங்களுக்காக CIDA பதிவு மற்றும் பிரதேசத்தில் பதிவு செய்த கேள்விதாரர்களுக்கு 5% முன்னுரிமை பற்றி கவனத்தில் கொள்ளப்படும்.

2. கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்வதற்காக மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத்தை மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் நிதி உதவியாளர்களிடமிருந்து காசாக செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை திணைக்களத்தின் கணக்குப் பிரிவிற்கு சமர்ப்பித்து 2020.09.15 முதல் 2020.09.29 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை குறித்த கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகளை சமர்ப்பிக்கும் போது திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் கேள்வி ஆவணங்களை மட்டும் பாவித்தல் வேண்டும். அத்துடன் அவ்வாறல்லாத கேள்விகள் நிராகரிக்கப்படும்.

3. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 2020.09.30 மு.ப. 11.00 இற்கு (11 மணிக்கு) அல்லது அதற்கு முன் குண்டசாலை, பல்லேகலையில் அமைந்துள்ள மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவருக்குப் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மத்திய மாகாண ஆயுர்வேத ஆணையாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படும். தாமதக் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

4. சகல கேள்விப் பத்திரங்களையும் இரு பிரதிகளுடன் தயாரித்து மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வேறு வேறு உறைகளில் இட்டு, பெயர் குறிப்பிட்டு, பொறியிட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு பொறியிடல் வேண்டும். அவ் உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் மற்றும் திட்டத்தின் இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.

5. கேள்விப் பத்திரங்களை ஏற்றல் முடிவடைந்தவுடன் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

6. சமர்ப்பிக்கப்படும் கேள்வியின் கேள்வி செல்லுபடியாகும் காலம் 2020.12.02 வரை இருத்தல் வேண்டும்.

7. இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து இலங்கை காப்புறுதி சபை அனுமதிக்கப்பட்ட காப்புறுதி நிறுவனத்திலிருந்து, நிர்மாண பாதுகாப்பு நிதியிடம் மாகாண ஆணையாளரின் பெயரில் விநியோகிக்கப்படும் கீழே அட்டவணையில் குறிப்பிடுமாறு பெறுமதியுடைய கேள்விப் பிணையொன்றை சகல கேள்விப் பத்திரங்களுடனும் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் கேள்விப் பிணையின் செல்லுபடியாகும் காலம் 2020.12.30 வரையானதாக இருத்தல் வேண்டும். கேள்விப் பிணையை காசாகச் செலுத்துவதாயின் மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் நிதி உதவியாளரிடம் இலங்கையில் செல்லுபடியாகும் தொகையை செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டை கேள்விப் பிணையாக சமர்ப்பித்தல் வேண்டும்.

8. இக் கேள்வி பற்றிய கேள்விக்கு முன்னரான கூட்டம், 2020.09.23 மு.ப. 10.30 இற்கு மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

9. சகல கேள்விகளும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுவதுடன், பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

10. கேள்வியுடன் சம்பந்தப்பட்ட மேலதிக விபரங்களை, குண்டசாலை பல்லேகலையில் அமைந்துள்ள மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் கணக்காளரிடம் (தொ.பே.இல. 081-2423144) பெற்றுக்கொள்ளலாம். குறித்த ஆவணங்களை மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின், கணக்குப் பிரிவில் வாரத்தின் வேலை நாட்களில் 12.00 - 13.00 மணிக்கு இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

